உதயன்

www.onlineuthayan.com

32பக்கங்கள் சுடர் 27 கதிர் 361 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 06 புதன்கிழமை (21/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00



# இலங்கை தொடர்பில் திருப்தியில்லை நடவடிக்கை எடுக்க அமெ. தயங்காது

## வாக்குறுதிகள் தொடர்பில் சரியான பிரதிபலிப்பு தேவை என கூட்டமைப்புடனான சந்திப்பில் அலிஸ்ஸா தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 21

இலங்கையின் அரசியல் மற்றும் இதர நிலைவரங்கள் குறித்து முழுமையாகத் திருப்தி அடைய முடியவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு அளித்த உறுதிமொழிகள் குறித்து ஆக்கபூர்வமான பிரதிபலிப்புகள் இல்லாதபட்சத்தில் எதிர்காலத்தில் அதற்கேற்றவாறான நடவடிக்கைகளை எடுக்க தாம் பின்னிற்கப்போவதில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய சந்திப்பு ஒன்றில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ்ஸா ஜரிஸ் அமெரிக்காவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற சந்திப்பில் இலங்கைக்கான அமெ

பார்க்க பக்கம் 4



அமெரிக்கப் பிரதி உதவி இராஜாங்கச் செயலர் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்தபோது...

## தீருவிலில் திடீரென பறந்தது புலிக்கொடி

வல்வெட்டித்துறை, நவ. 21



புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகும் நிலையில், வல்வெட்டித்துறை தீருவிலில் நேற்றுக் காலை திடீரென புலிக் கொடி பறந்தது.

அங்கிருந்த அந்தக் கொடியை பின்னர் அகற்றினர் என்று வல்வெட்டித் துறைப் பொலிஸார் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

தீருவிலில் அமைந்துள்ள தொலைத் தொடர்புக் கோபுரத்தில் 30 அடி உயரத்தில் கொடி கட்டப்பட்டிருந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கட்டப்பட்ட கொடி நேற்றுக் காலையில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது என்று மக்கள் தெரிவித்தனர்.

புலிக்கொடி கட்டப்பட்டிருந்த இடத்தில் முன்னர் விடுதலைப் புலிகளின் நினைவுத் தூபி அமைந்திருந்தது. போரின் போது அது இடிக்கப்பட்டு அந்த இடத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (உ-8)

## கறுப்பு மையால் அழிக்கப்பட்ட பக்கங்கள் புலத்தமிழர் கையில்

### கிடைத்தது எப்படி; ஐ.நாவிடம் இலங்கை கேள்வி

கொழும்பு, நவ.21


ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக விசாரணை அறிக்கையில் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்ட சில பக்கங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு தணிக்கை செய்யப்பட்டு அழிக்கப்பட்ட 29 பக்கங்கள் எவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைக்கப் பெற்றன என இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த 29 பக்கங்களின் உள்ளடக்கங்கள் தொடர்பிலான தகவல்கள் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன. வன்னிப் போரில் பாதிக்கப்பட்டோர் பற்றி உறுதியான தகவல்களை வெளியிட முடியாது என குறிப்பிட்ட பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டிருந்தன.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கை முன்கூட்டியே வெளியானமை ஒழுக்க விதிகளுக்குப் புறம்பானது என இலங்கை அரசு சீற்றமடைந்துள்ளது. (உ-சி)

## நாளை புறப்படுகிறது இலங்கையின் முதல் விண்கலம்



கொழும்பு, நவ.21

இலங்கையின் முதலாவது செயற்கைக் கோள் நாளை சீனாவின் சீசால் ஏவுதளத்திலிருந்து விண்ணுக்குப் பாயவுள்ளது.

தொலைத் தொடர்புச் செயற்கைக் கோளான 'சுப்றீம்சற்' விண்கலம் விண்ணுக்கு ஏவப்படவுள்ளது.

இவ் விண்கலத்தை உருவாக்குவதற்கு 360 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விண்கலம் அடுத்த

பார்க்க பக்கம் 4

## பள்ளிக்குடா இளம் பெண்ணை 3 மாதங்களாக காணோம்

பூநகரி, நவ.21

பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார். நவாலியிலுள்ள தமது பேர்த்தியாரின் வீட்டுக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லையென பெற்றோர் பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்தவர் பரமேஸ்வரன் துஷ்யந்தினி (வயது -23). அங்குள்ள முன்பள்ளி ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். இவரது தந்தையார் கடற்தொழிலாளி.

நவாலியில் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்காக ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி பள்ளிக்குடாவில் இருந்து புறப்பட்டார். நவாலி முருகமூர்த்தி ஆலயத்துக்கு அருகிலுள்ள தமது

பார்க்க பக்கம் 4

## ரூபா 35 ஆயிரம் கோடியை தாண்டியது அரச படுகடன்

கொழும்பு, நவ.21

வெளிநாட்டுப் படுகடனில் நாட்டை அரசு மூழ்கடித்துள்ளதால், மக்கள் இன்று பேரவலங்களைச் சந்தித்து வருகின்றனர் என்று குற்றஞ் சாட்டுகிறது ஐக்கிய தேசியக் கட்சி ''இவ்வாறானதொரு நிலையில், நன்கொடைகள் வழங்கும் அளவுக்கு நாம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றுள்ளோம் என்று மார்தட்டிக் கொள்வதற்காக அரசு அந்நிய நாடுகளுக்கு நன்கொடைகளை வழங்குகின்றது'' எனத் தெரிவித்தார் கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க.

கடந்து சென்ற ஆறு மாதத்துக்குள் நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் 35 ஆயிரம் கோடியையும் தாண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## இந்திய துணைத் தூதரிடம் வன்னித் தாய் கேட்ட கேள்வி

முல்லைத்தீவு, நவ. 21

போர்தான் எங்கள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. போருக்கு முன்னர் 6 அங்கத்தவரைக் கொண்ட எனது குடும்பம் இப்போது 2 பேராக மாறியிருக்கிறது. இந்த நிலையில் ஏன் வீட்டுத்திட்டத் தெரிவிலும் எங்களைப் புறக்கணிக்கிறீர்கள்?

-இவ்வாறு இந்தியத் துணைத் தூதரிடம் சோகமாக கேள்வி எழுப்பினார் முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த பெண்ணொருவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இந்திய வீட்டுத்திட்டப் பணிகளை இந்திய துணைத் தூதர் மகாலிங்கம் நேற்றுப் பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அந்தப் பகுதி மக்களையும் அவர் சந்தித்

பார்க்க பக்கம் 4

## மூன்றாம் உலகப்போருக்கு மாணவர்களை தயார்ப்படுத்தி விட்டனரா கேணல் அதிபர்கள்?

### சபையில் ஜே.வி.பி. கிண்டல்

கொழும்பு, நவ.21

மாணவர்களை மூன்றாம் உலகப்போருக்குத் தயார்ப்படுத்திவிட்டனரா கேணல் அதிபர்கள்? அவர்களின் தற்போதைய நிலை என்ன என்று நேற்று சபையில் 'கேணல் அதிபர்' விவகாரம் தொடர்பில் கேள்விக்கணைகளைத் தொடுத்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி.

நாடாளுமன்றில் நேற்றுக் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் அரசின் தலையீடு உக்கிரம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 21

கல்வித்துறையில் அரசியல் தலையீடுகள் உக்கிரமடைந்துள்ளன என்று நேற்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அதிபர்களுக்கு ஏன் கேணல் பதவி வழங்கப்படுகின்றது என்றும் கேள்வி எழுப்பியது.

கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம், கல்விக்கான ஒதுக்கீட்டில் பாகுபாடுள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டை முன்னேற்றக்கூடிய வளம் மாணவ செல்வங்களாகும். அவர்கள் குறித்து விசேடமாகக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதுடன் கஷ்டப் பிரதேசங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

சீ.டபிள்யூ.சி.கன்னங்கர முதல் அனைத்துத் தலைவர்களும் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். ஆனால், தற்போது கல்வி மீது செலுத்தப்படும் கவனம் குறைவடைந்துள்ளது.

கல்வித்துறையில் என்றுமில்லாதவாறு இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட கல்வியாளர்கள் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீட்டைக் கோரினர். ஒரேயடியாக இவற்றைச் செய்யமுடியாது என்பது எமக்கும் தெரியும். எனவேதான் படிப்படியாகச் சரிசெய்து முடிக்குமாறு சொல்கின்றோம்.

குறிப்பாக, கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி முறையாகப் பகிரப்படுவதில்லை. இதனால், பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கொழும்பைப் போன்று கொழும்புக்கு வெளியிலுள்ள பிரதேசங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஹோமாகம பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் 6ஆம் தரத்தில் மாத்திரம் 10 வகுப்புகள் இருக்கின்றன. இது எந்த விதத்தில் நியாயம்? பல சுற்றறிக்கைகள் மீறப்படுகின்றன.

மாகாண சபையிலுள்ள அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரத்துக்கு மக்களை அழைத்துவருமாறு கட்டளை இடுகின்றனர். அவ்வாறு அதிபர்கள் செய்யத்தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகப் பழிவாங்கும் படலம் கட்டவிழ்த்துவிடப்படுகின்றது.

இவ்வாறு கல்வித்துறையில் பல வழிகளிலும் இன்று அரசியல் தலையீடு ஏற்பட்டுள்ளது. எனினும், சில மாகாணங்களில் சிறந்த அரசியல்வாதிகள் உள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டிகின்றோம்.

அதேவேளை, ஆசிரியர்களுக்கு இன்னும் சம்பள நிலுவை வழங்கப்படவில்லை. எனினும், முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் தனது வரவு-செலவுத்திட்ட உரையில் குறிப்பிடுகின்றார்.

இன்று அதிபர்களுக்கு கேணல் பதவி வழங்கப்படுகின்றது. ஏன் இவ்வாறு வழங்கப்படுகின்றது என்பது எமக்கு நன்கு தெரியும். என்று குறிப்பிட்டார் அகில விராஜ் காரியவசம்.

(உ-சி)

# தொடரும் ஒவ்வாமை மர்மம் நேற்றும் 37 மாணவர் பாதிப்பு

## அம்பாறை, பலாங்கொடையில் சம்பவம்

கொழும்பு, நவ. 21

அம்பாறை மற்றும் பலாங்கொட பிரதேசங்களைச் சேர்ந்த இரு பாடசாலைகளின் மாணவர்களும் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை காமினி வித்தியாலயத்தைச் சேர்ந்த 20 மாணவர்களும் பலாங்கொட, உடகம மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 17 மாணவர்களுமே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உடல் அரிப்பு, மயக்கம் போன்றவற்றால் இம்மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

**1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

இதேவேளை, கம்பளையில் நேற்றுமுன்தினமும், கடந்த சில தினங்களுக்கு முன்னரும் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நேற்று அம்பாறை மற்றும் பலாங்கொடை பிரதேசங்களில் 37 மாணவர்கள் ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பிரதேச செயலக வளாகத்தில் நேற்று 17 ஷெல்கள் மீட்பு

புதுக்குடியிருப்பு, நவ. 21

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக வளாகத்துக்குள் இருந்து 17 மோட்டார் ஷெல்கள் நேற்று மீட்கப்பட்டன.

பிரதேச செயலக வளாகத்தைச் சுற்றி வேலிகள் அமைக்கும் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள் நேற்று நண்பகல் வெடிக்காத நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஷெல்களைக் கண்டனர்.

உடனடியாக பிரதேச செயலர் மூலம் இராணுவத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அந்தப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் ஒவ்வொன்றும் சுமார் 60 மில்லி மீற்றர் நீளமான 17 மோட்டார் குண்டுகளை மீட்டுச் செயலிழக்கச் செய்தனர்.

அந்தப் பகுதியில் மேலும் வெடிபொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென்பதால் தாம் அச்சத்துடனே பணியாற்றுகின்றனர் என்று செயலகப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-16-115)

## இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 21

டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த இருவருக்கு நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

வேலணையைச் சேர்ந்த இருவரே இந்தக் குற்றச்சாட்டின் பேரில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 5,000அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## தமிழகத்தில் இலங்கையரின் சடலம் மீட்பு

சென்னை, நவ. 21

ஈழத் தமிழ் அகதி ஒருவர் சென்னையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சென்னை, குமிடிப்பூண்டியில் உள்ள இலங்கை அகதி முகாமில் வசிப்பவரான கண்ணன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா சிதம்பரபுரத்தைச் சேர்ந்தவர், இவர் 6 பிள்ளைகளின் தந்தை.

குடும்பத்தகராறு காரணமாக மரம் ஒன்றில் ஏறிய பின்னர் நிலத்தில் குதித்து இவர் இறந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். சலடம் பொன்னேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பரிசோதனைகளின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சென்னை பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

(ஐ)

# பாடசாலைகளில் இராணுவ ஆட்சியா? போர்க்கொடி தூக்கியது கூட்டமைப்பு

கொழும்பு, நவ. 21

பாடசாலை அதிபர்களுக்கு கேணல் பதவி வழங்குவதை உடன் நிறுத்துமாறு நாடாளுமன்றில் நேற்று வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாடசாலைகளுக்கு இராணுவ நிர்வாகம் பொருந்தாது என்றும் சுட்டிக் காட்டியது.

வரவு-செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 4.1 சதவீத நிதி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1,000 பாடசாலைகளும், 5,000 ஆரம்பப் பாடசாலைகளும் அபிவிருத்தித் திட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின்கீழ், 30 வருடகால போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் வெறும் நான்கு பாடசாலைகள் மாத்திரம் தான் அபிவிருத்தி செய்யப்பட்டன.

அவற்றுள் வடக்கில் ஒரு பாடசாலையும், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளும், அம்பாறையில் ஒரு பாடசாலையும் அடங்குகின்றன.

மட்டக்களப்பில் ஒரு பாடசாலையாவது இந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. இப்போதுதான் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பெரியகல்லாறு மத்திய கல்லூரி இன்னும் புனரமைக்கப்படவில்லை. இதனை உடன் புனரமைத்துத் தருமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

கல்வி வளர்ச்சிக்குப் பாடசாலைகளின் முகாமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கின்றது. பாடசாலைகளுக்கு இப்போது கேணல்கள் அதிபர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

இந்த நியமனத்தால் பாடசாலைகளில் அமைதி நிலவாது. இராணுவ ஆட்சிதான் நிலவும். ஆகவே, கேணல்கள் அதிபர்களாக நியமிக்கப்படுவது நிறுத்தப்பட்டு பொருத்தமானவர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டும் - என்றார்.

(உ-சி)

# வடக்கில் கனிய வள அகழ்வு அடுத்த வருட முற்பகுதியில்

கொழும்பு, நவ.21

யாழ்ப்பாணம், மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் கனிய எண்ணெய் அகழ்வுப் பணிகள் அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்தில் அண்மையில் அமைச்சர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதியின் கீழ் பெற்றோலிய வள அபிவிருத்தி தொடர்பான செயலகத்தினால் இந்த எரிபொருள் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

'கேர்ன்' நிறுவனம் இதுவரை மன்னாரில் மூன்று இடங்களில் எண்ணெய்க் கிணறு களைத் தோண்டியது.

அதில் இரு இடங்களில் இயற்கை வாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்பகுதிகளில் அகழ்வுப் பணிகள் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுவரை இப் பணிகளுக்காக 138 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள்களை வெளியில் எடுக்க 3 முதல் 5 வருடங்கள் எடுக்குமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-16)

# வீதிப் புனரமைப்பு நிறுவன தொழிலாளர்கள் போராட்டம்

## சம்பளப் பணத்தைத் தரக் கோரி

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணத்தில் வீதிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் நிறுவனம் ஒன்றின் தொழிலாளர்கள் நேற்றிரவு திடீர் மறியலில் ஈடுபட்டனர். சம்பளம் வழங்கப் படாததைக் கண்டித்தே அவர்கள் போராட்டம் நடத்தினர்.

யாழ். குடாநாட்டில் வீதிப் புனரமைப்புப் பணிகளில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று 'ஸீரா'. திருநெல்வேலியில் அதன் அலுவலகம் உள்ளது அதன் தொழிலாளர்களே நேற்று மறியல் போராட்டம் நடத்தினர்.

இருபதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அலுவலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடினர். வீதிப் புனரமைப்புக்காகத் தாங்கள் பயன்படுத்தும் வாகனங்களை குறுக்கே நிறுத்தி, நிறுவனத்தின் திட்ட முகாமையாளரை அலுவலகத்திலிருந்து வெளியேற விடாமல் மறித்தனர்.

''செப்டெம்பர் மாதம் வரைக்கும் எமக்கான சம்பளம் 15 ஆம் திகதி ஒழுங்காக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதச் சம்பளங்களில் பிரச்சினை ஆரம்பமானது. ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி தரப்பட வேண்டிய சம்பளம் நவம்பர் மாதம் முதலாம் திகதியே தரப்பட்டது. நவம்பர் மாதச் சம்பளம் இதுவரையில் தரப்படவில்லை. அதைத் தர மாத இறுதியாகும் எனச் சொல்கிறார்கள்'' - என்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார் ஊழியர் ஒருவர்.

இது தொடர்பில் நிறுவனத்தின் திட்ட முகாமையாளரை 'உதயன்' தொடர்புகொண்டான். சிங்களத்தில் பதிலளித்த அவர், ஆங்கிலம் அல்லது தமிழ் தெரியாத மாதிரி நடந்துகொண்டார். பின்னர் தொலைபேசிகளின் 'ரிசீவர்'களைத் தூக்கி வைத்துவிட்டார். அவரது கைபேசியும் அணைக்கப்பட்டது.

இவரின் கீழ் பணியாற்றும் - நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட - ஊழியர்கள் அனைவரும் தமிழர்கள். (உ-01,)

## நீதிமன்றக் காவலாளியை இழிவாகப் பேசியவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 21

நீதிமன்றக் காவலாளியை இழிவான வார்த்தைகளைப் பிரயோகித்துப் பேசிய வைத்தியசாலை ஊழியரை 2 வருட நன்னடத்தைப் பிணையில் விடுவித்தது நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை நீதிமன்றின் இரவுநேரக் காவலாளியையே சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸாரூடாகச் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு, நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் 2 வருட நன்னடத்தைப் பிணையில் விடுவித்தார்.

(த-4)

# 2 மோட்டார் சைக்கிள்கள் சுன்னாகம் பகுதியில் திருட்டு

சுன்னாகம் பகுதியில் கடந்த வாரம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன. இதில் ஒன்று அங்குள்ள 'கராஜ்' ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் சந்தியை அண்மித்து வீடு ஒன்றின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சமாதான நீதிவான் ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

சில நாள்களின் பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் அங்குள்ள 'கராஜ்' ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை கண்டுபிடிக்கப்பட்டது. பதின்மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் அதனை அங்கு கொண்டுசென்று விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு முன்னர் உடுவில் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை

## ஆரம்பப் பிரிவுக்கு 78 பேரும் இடை நிலைப் பிரிவுக்கு 172 பேரும் தேவை என்கிறார் கல்விப் பணிப்பாளர் இராஜ்குமார்

புதுக்குடியிருப்பு,நவ.21

**முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், இரண்டாம் மொழி, கத்தோலிக்கம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.**

இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராஜ்குமார்.

முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் 78 ஆசிரியர்களுக்கும் இடைநிலைப் பிரிவில் 172 ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகிறது. தற்போது சேவையிலுள்ளவர்களிலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் வருடாந்த இடமாற்றத்தின் மூலம், இடமாற்றம் பெறவுள்ளதால் இந்தப் பற்றாக்குறை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக ஆங்கிலப் பிரிவில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு 55 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதும் தற்போது 3 ஆசிரியர்களே சேவையிலுள்ளனர். இரண்டாம் மொழி கற்பிப்பதற்கு 14 ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கிய போதும் இதுவரையும் எவரும் நியமிக்கப்படவில்லை.

அதேபோன்று இடைநிலை வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு 127 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது 67 ஆசிரியர்களும், ஆங்கிலத்துக்கு 57 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றபோதும் 27 பேரும், இரண்டாம் மொழிக்கு 19 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதும் ஒருவரும் கத்தோலிக்க பாடத்துக்கு 31 ஆசிரியர்கள் தேவைப்படும் போதும் 14 பேரும் தற்போது கடமையாற்றி வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் முயற்சியால் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, முல்லைத்தீவு மகாவித்தியாலயம் மற்றும் விசுவமடு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்கான கணிதபாட, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வந்தது.

குறிப்பாக கணித, விஞ்ஞான பாடங்களுக்கென 15 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காணப்பட்டது.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பட்டதாரி பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களில் மேற்படி பாடங்களைக் கற்பிக்கக் கூடிய 12 பேரை முல்லைத்தீவு அரச அதிபர், முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு நியமித்துள்ளார்.

இதனால் நீண்டகாலமாக நிலவிவந்த ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

எனினும் கலைப்பாடத்துக்கும் ஏனைய பாடங்களுக்கும் என 14 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை- முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 29 அதிபர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. 51 அதிபர்கள் கடமையாற்ற வேண்டிய போதிலும் தற்போது 22 அதிபர்களே கடமையாற்றி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-400)

## வவுனியா திரிசாரணர் குழுவினர் சமாதான சைக்கிள் பவனி

கிளிநொச்சி,நவ.21

வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தைச் சேர்ந்த திரிசாரணர் குழுவினர் வன்னி மாவட்டங்களுக்கான சமாதான சைக்கிள் பவனியை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி தமது பவனியை ஆரம்பித்த இவர்கள் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சிக்கு வந்தபோது, கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தினர் கிளிநொச்சி மகாவித்தியாலய முன்றிலில் வைத்து அவர்களை வரவேற்றனர்.

பின்னர் அதிபர் பங்கயற்செல்வன் தலைமையில் வரவேற்புபசாரம் இடம்பெற்றதுடன் மதிய உணவும் வழங்கப்பட்டது.

இதையடுத்துச் சாரணர் குழுவினர் பூநகரிக்குச் சென்றனர். இரவு அங்கு தங்கிவிட்டு மறுநாள் காலை மன்னாருக்கு இந்தக் குழுவினர் புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-9)

## மன்னார் பெரியமடு கிராமத்தில் மத்திய வர்த்தக நிலையம்

### அமைச்சர் றிசாட் விவசாயிகளிடம் தெரிவிப்பு



மன்னார் பெரியமடு கிராமத்தில் மத்திய வர்த்தக நிலையமொன்று அமைக்கப்படுமென அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மாந்தை மேற்கிலுள்ள மக்கள் மீள்குடியமர்ந்த கிராமங்களுக்கு வருகை தந்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யவென பெரியமடுக்கிராமத்தில் மத்திய வர்த்தக நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், உற்பத்தி செய்யப்படும் பப்பாசி, மா, பலா, வாழை போன்ற பழ வகைகளைப் பழப்பாகு (ஜாம்)ஆக மாற்றுவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பாக தமது அமைச்சு கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது இந்தப் பிரதேசத்தில் பெருமளவு உற்பத்தி செய்யப்படும் மிளகாய்க்கான சந்தை வசதிகள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் விவசாயிகளுக்கு உறுதிமொழி வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக், அமைச்சின் செயலாளர் அநுர சிறிவர்த்தன, பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

(க)

## வவுனியா வடக்கு விவசாயிகள் பப்பாசிச் செய்கையில் ஆர்வம்

அக்கராயன்,நவ.21

வவுனியா வடக்கில் உள்ள விவசாயிகள் பப்பாசிச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா வடக்கிலுள்ள மண்வளம் பப்பாசிப்பழச் செய்கைக்கு ஏற்றதாகக் காணப்படுகின்றது. அத்துடன் ஐ.எல்.ஓ நிறுவனமும் பப்பாசியை உற்பத்தி செய்வதற்குரிய உதவிகளை வழங்கி வருகின்றது.

பல்வேறு இழப்புக்களை எதிர்கொண்டு இங்கு மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இந்தப் பப்பாசிப் பழச்செய்கை எதிர்காலத்தில் உதவுமெனக் கூறப்படுகின்றது. தற்போது 30 பயனாளிகள் பப்பாசிப் பழங்களை வேறு இடங்களுக்கு அனுப்பி பயனடைகின்றனர் என்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஓமந்தையில் அமைக்கப்படவுள்ள பப்பாசிப் பழத் தொழிற்சாலை பப்பாசிப்பழச் செய்கையாளர்களுக்குப் பெரும் நன்மையை அளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## வவுனியாவில் திங்கள் முதல் சிவவேள்விப் பெருவிழா

வவுனியா,நவ.21

வவுனியா ஆறுமுகநாவலர் திருமுறை மண்டபத்தில் சிவவேள்விப் பெருவிழா இடம்பெற்று வருகின்றது.

இந்த இரண்டாவது சிவவேள்விப் பெருவிழா 66 ஆவது பன்னிரு திருமுறை, திருப்புகழ் முற்றோதுதல் மற்றும் சிவமூலமந்திரத்தை உச்சரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்த இந்த பெருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் அகண்ட நாம கூட்டுப் பிரார்த்தனை மற்றும் திருமுறை போற்றி அருச்சனை என்பனவற்றுடன் பெருவிழா நிறைவு பெறும் என வவுனியா சைவ சமயப் பாதுகாப்புப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

இதில் ஓதுவார்கள், சமய நிறுவனங்கள், சங்கீத ஆசிரியர்கள், அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிவபெருமானின் திருவருள் கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(க)



அக்கராயன் கிராமத்தில் வீடுகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்கும் பொருட்டு கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் மீள்குடியமர்ந்த மக்களிடையே பதிவுகளை மேற்கொள்கின்றனர். (க-18)

## பன்னங்கண்டி மயானத்தில் புனரமைப்புப் பணிகள்

கிளிநொச்சி, நவ.21

கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள பன்னங்கண்டி மயானம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக பிரதேச சபை உறுப்பினரான விஷ்ணு சுவிஷ்கரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான நெல்சிப் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன் ரூபா செலவில் இதன் புனரமைப்பு வேலைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் கூறினார்.

வட்டக்கச்சி இளங்கதிர் சனசமூக நிலையத்தினூடாக மயானத்தின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவிருப்பதாகக் கூறிய அவர் ஆரம்ப வேலைகள் தொடங்கிவிட்டன என்றும் தெரிவித்தார்.

தற்போது சுமார் 100 குடும்பங்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்தி வருகின்றபோதும் இதுவரை முறையாக துப்புரவுப் பணிகள் கூட இடம்பெறவில்லை என்றார் அவர். (க)

## ஐரிஸ் நாட்டு குடும்பத்தின் நிதி மூலம் பூநகரியில் குடும்பங்களுக்கு உதவி

பூநகரி, நவ. 21

ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த குடும்பமொன்றின் நிதிப் பங்களிப்புடன் பூநகரிப் பிரதேசத்தில் மாணவர்களைக் கொண்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இந்தக் குடும்பங்களுக்கு சுயதொழில் உதவியாக 40 ஆயிரம் ரூபாவும், மாணவர்களின் தொகைக்கேற்ப மாதாந்த நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கெனப் பூநகரிப் பிரதேசத்தில் 65 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களுள் 27 குடும்பங்களுக்கு செப்ரெம்பர் மாதத்திலும், 10 குடும்பங்களுக்கு ஒக்டோபர் மாதத்திலும் சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டன. ஏனைய குடும்பங்களுக்கு விரைவில் உதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு மாணவனைக் கொண்ட குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபாவும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிகமாக மாணவரொருவருக்கு 400 ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு இதுவரை 12 குடும்பங்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவிகள் உரிய வகையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைப் பூநகரிப் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் செ. சுரேந்திராவும், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே. தபேந்திரனும் கண்காணிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் செயற்றிட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐந்து குடும்பங்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-9)

## ஓமந்தையில் ஒளிவிழா

வவுனியா, நவ.21

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் வருடாந்த ஒளிவிழா இன்று புதன் கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் மு.அரசரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் ஓமந்தை பங்குத் தந்தை பிரான்சில் அசிசி பிரதம விருந்தினராகவும், வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சுகந்தி கிசோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறைச்சாலையில் பெண்களுக்கு புதிய விடுதி

யாழ்ப்பாணம், நவ.21

யாழ். சிறைச்சாலையில் உள்ள பெண் கைதிகள் தங்குவதற்கென 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் விடுதி ஒன்று புதிதாகக் கட்டப்பட்டது. நேற்றுசெவ்வாய்க் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். சிறைச்சாலைக் கைதிகள் நலன்புரி சங்கத்தின் நிதியிலிருந்து இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

புதிய கட்டடத்தை சிறைக் கைதிகள் நலன்புரி சங்கத் தலைவி ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

யாழ். சிறைச்சாலையில் தற்போது பெண் கைதிகள் 20 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களும், விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களும் இதில் அடங்குகின்றனர்.

பெண் கைதிகளுக்கு முன்னர் இருந்த விடுதியுடன் இணைந்ததாகச் சகல வசதிகளையும் கொண்ட புதிய விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

பெண் கைதிகளில் சிலர் தமது கைக் குழந்தைகளுடனேயே சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

திறப்பு விழா நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம்.எஸ்.பண்டார, சிறைச்சாலை பிரதம ஜெயிலர் சீ.இந்திரகுமார், நலன்புரி சங்க உறுப்பினர்கள், சிறைச்சாலை நலன்புரி சங்க உத்தியோகத்தர் வி.சுசிதரன், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

யாழ். சிறைச்சாலையில் ஆண் கைதிகள் 300 பேர் வரை உள்ளனர். அவர்கள் பிறிதொரு இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (த-4)

# அல்லாரை மக்கள் காணிகளை கைவிடுகிறது இராணுவம்

பூநகரி, நவ.21

அல்லாரைப் பகுதியில் உள்ள பொது மக்களின் காணிகளை விட்டுப் படையினர் வெளியேறுகின்றனர். காணி உரிமையாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இராணுவம் வெளியேற இணங்கியுள்ளது. குறித்த பகுதிகளில் இருந்து இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் படையினர் வெளியேறுவர் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது என இலங்கை மனிதஉரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ளது அல்லாரை. இங்கு முன்னர் இராமாவில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. அது மூடப்பட்ட பின்னர் அந்தக் காணிகளில் படையினர் தமது முகாம்களை நிரந்தரமாக அமைத்திருந்தனர்.

மக்களின் காணிகளைப் படையினர் ஆக்கிரமித்ததால் 60 குடும்பங்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த 60 குடும்பங்களும் இந்திய வீட்டுத் திட்டம் உட்பட ஏனைய உதவித் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டும் காணிகள் இல்லாமையால் அவற்றைப்பெறமுடியாது இருந்தனர்.

இதனால் தமது காணிகளைப் படையினரிடமிருந்து பெற்றுத் தருமாறு கோரி அவர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் ஜூலை மாதம் முறைப்பாடு செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளை இது தொடர்பில் விளக்கம் கேட்டு 52 ஆவது படைப் பிரிவு, பலாலி படைத் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்குக் கடிதங்களை அனுப்பியிருந்தது.

இதனை அடுத்து பொதுமக்களின் காணிகளிலிருந்து இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறுவதாக பலாலி படைத் தலைமையகத்தில் இருந்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ரிக்கத் தூதுவர் மிச்சேல் சிசெனும், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடம் விரிவாகக் கேட்டறிந்த அலிஸ்ஸா ஜரிஸ், அரசியல் தீர்வு விடயம் தாமதமாவது குறித்தும் விரிவாகப் பேச்சு நடத்தியுள்ளார்.

''இலங்கை கடந்த ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர் ஆக்கபூர்வமாக எதனையும் செய்ததாகத் தெரியவில்லை. இலங்கை தொடர்பில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அளிக்கப்பட உறுதிமொழிகள் குறித்து ஆக்கபூர்வமான பிரதிபலிப்புகள் இல்லாத பட்சத்தில் எதிர்காலத்தில் அமெரிக்கா அதற்கேற்றவாறான நடவடிக்கைகளை எடுக்க பின்நிற்காது'' என்றும் அலிஸ்ஸா ஜரிஸ் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார் என்று 'உதயன்' அறிவித்தது.

## மூன்றாம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஹோமாகமவிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ கல்லூரிக்குத் தண்ணீர் இல்லை. இதனைக் கல்வி அமைச்சரே தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார். முன்னர் அந்தப் பாடசாலையில் நீச்சல் தடாகம் உள்ளது, அது உள்ளது, இது உள்ளது என இவர்கள் பெருமையாகக் கூறித் திரிந்தனர்.

தண்ணீர் இல்லாவிட்டால் நீச்சல் தடாகத்தை எப்படி பயன்படுத்துவது? முதலில் மாணவர்களுக்குக் குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுங்கள். ஜனாதிபதியின் பெயரைக் கொண்ட பாடசாலைக்கே இன்று குடிதண்ணீர் இல்லை.இதுதான் உண்மை நிலை.

அடுத்ததாக இன்று கேணலாகப் பதவி வழங்கப்பட்டுள்ள அதிபர்களின் நிலை எவ்வாறு உள்ளது? அவர்கள் மாணவர்களை மூன்றாம் உலகப்போருக்குத் தயார்படுத்தி விட்டனரா? என்று சிரித்துக்கொண்டே கேள்விகளை அடுக்கிக்கொண்டு செல்கையில் அவருக்கான நேரம் முடிவடைந்துவிட்டது.

அதேவேளை, ஆசிரியர்களுக்கான நிலுவைச் சம்பள விவகாரம் தொடர்பிலும் தமது உரையில் சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டியிருந்தார். (உ-சி)

## நாளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆண்டிலிருந்து வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளதுடன் அதன் கட்டுப்பாடுகளை கண்டி பல்லேகலவில் உள்ள ஆய்வுமையம் மேற்கொள்ளவுள்ளது.

இந்த விண்கலத்தை விண்ணுக்கு அனுப்புவதன் மூலம் தனக்கென சொந்தமான தொலைத் தொடர்பு விண்கலத்தை பயன்படுத்தும் நாடுகளில் ஆசியாவில் இலங்கை மூன்றாவதாகவும் உலகில் 45 ஆவது நாடாகவும் திகழுமென்பது குறிப்பிடத்தக்கது. (உ-16)

## பள்ளிக்கூடா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தாய் வழிப் பேர்த்தியாரின் வீட்டில் இவர் தங்கியுள்ளார். திருவிழா இடம்பெற்ற 10 நாள்களும் நவாலியில் தங்கியிருப்பதற்கான ஆயத்தங்களுடனேயே அவர் அங்கு சென்றிருந்தார். முன்பள்ளிச் சிறார்களை கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருப்பதாக அவருடன் முன்பள்ளியில் கற்பிக்கும் சக ஆசிரியை தகவல் தெரிவித்தார். அதனால் 25 ஆம் திகதியே அவர் நவாலியில் இருந்து பூநகரிக்குப் புறப்பட்டார். அவரது பேர்த்தியார் நவாலியில் வைத்து இவரை பஸ்ஸில் ஏற்றி அனுப்பியுள்ளார்.

இதன் பின்னர் வீட்டாருடன் தொடர்பை ஏற்படுத்திய துஷ்யந்தினி தான் பயணித்த பஸ் காற்றுப் போனதால் தனங்களப்பில் தரித்து நிற்பதாகக் கூறினார். இதற்குப் பிறகு அவரிடமிருந்து எந்தத் தொடர்பும் இல்லை. வீட்டார் தொடர்பை ஏற்படுத்த முயன்ற போதிலும் இவரது தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவரது பெற்றோர் பூநகரி, மானிப்பாய் பொலிஸ் நிலையங்களுக்கு மாறி மாறி அலைந்த நிலையில் இறுதியாக பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். (க)

# முறையான பதில் அளித்தால் மாத்திரமே போர்க்குற்ற விசாரணையைத் தடுக்கலாம்

## உள்ளக அறிக்கை குறித்து ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு, நவ.21

ஐ.நா. உள்ளக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயதானங்கள் சரி என அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பில் அரசு பொறுப்பான முறையில் பதிலளிக்கத் தவறியதனூடாகவே இது நிரூபணமாகியுள்ளது. அத்துடன் அரசின் நகர்வுகள் அந்த அறிக்கையை நியாயப்படுத்துவதாகவே அமைகின்றன - இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சி நேற்றுத் தெரிவித்தது.

மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டு சர்வதேச ரீதியில் பல வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றுவருகின்ற நிலையில், அரசு பதிலளிக்கத் தவறி மௌனம் சாதிப்பது, ஐ.நா. மனித உரிமை சபையின் அடுத்த கூட்டத்தொடரில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் என்றும் அது எச்சரிக்கை விடுத்தது.

சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் ஜனாதிபதியும், அரசும் முன்னிலையாக வேண்டிய நிலையைத் தவிர்க்க வேண்டுமெனில், ஐ.நா. உள்ளக அறிக்கை குறித்து அரசு உடனடியாகப் பதிலளித்து, சர்வதேச ரீதியில் நம்பகத்தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்:-

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் போர் இடம்பெற்ற காலத்தில் ஐ.நா. செயற்பட்ட விதம் குறித்து ஆராய்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான்- கீ மூனால் நியமிக்கப்பட்ட சாள்ஸ் பெற்றியின் குழு தமது அறிக்கையை அவரிடம் இம்மாத ஆரம்பத்தில் கையளித்தது.

இந்த அறிக்கையில் பல காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டமைக்கு அரசு, புலிகளுடன் இணைந்து ஐ.நாவுக்கும் பங்குள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. நிலைமை இவ்வாறிருக்க இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பங்காளர்களுள் ஒன்றான அரசு இது தொடர்பில் பதிலளிக்காது மௌனம் சாதிக்கிறது.

நாடாளுமன்றத்திலும் இதுதொடர்பில் நாம் அரசிடம் கேட்டபோதும் எந்தப் பிரதிபலிப்புகளும் இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கின்ற கூட்டத்தொடரிலும் அரசு இதுகுறித்து உத்தியோகபூர்வ பதிலை அளிக்க வேண்டும். ஆனால், அரசு இவற்றைக் கருத்திற்கொள்வதாகத் தெரியவில்லை.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க இது குறித்து கருத்துத் தெரிவிக்கத் தேவையில்லை என்கிறார். மறுபுறத்தில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம, இது ஐ.நாவின் உள்ளக அறிக்கை, ஆதலால் அது குறித்து நாம் கருத்து வெளியிடத் தேவை இல்லை என்கிறார்.

எனவே, எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரிலும் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும். இவற்றைக் கருத்திற்கொண்டு அரசு செயற்பட வேண்டும். ஐ.நா. உள்ளக விசாரணை அறிக்கை குறித்து சர்வதேசத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் நாட்டு மக்களுக்கும் அரசு உடனடியாக பதிலளிக்க வேண்டும். இல்லையெனில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயதானங்கள் சரியானவை என்று அரசு ஏற்றுக்கொள்வதாகவே அமையும் - என்றார். (உ-சி)

# மீட்கப்பட்ட எலும்புக்கூடு அடையாளம் தெரிந்தது

தென்மராட்சி, நவ.21

தாவளை - இயற்றாலைப் பகுதியில் பற்றைக் காட்டுக்குள் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு சாவகச்சேரி நீதிமன்ற உத்தரவின் பேரில் கொடிகாமம் பொலிஸாரால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

எலும்புக் கூட்டுடன் காணப்பட்ட உடுப்புகள் மற்றும் செருப்பு ஆகியவற்றைக் கொண்டு அது இராசன் சந்திரமோகன் (வயது -13) என்னும் மாணவனுடையது என அவரது பெற்றோர் அடையாளம் காட்டினர்.

இறுதிக்கிரியைகள் செய்வதற்கு அதனை வழங்குமாறு அவர்கள் கோரியதையடுத்து எலும்புக்கூட்டை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து கொடிகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் எலும்புக்கூட்டைப் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இதே பகுதியைச் சேர்ந்த சந்திரமோகன் காணாமல்போனது தொடர்பாக பெற்றோரால் கொடிகாமம்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-9)

## இந்தியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தித்திருந்தார். அப்போதே இந்தக் கேள்வியைக் கேட்டார் அந்தப் பெண்.

முல்லைத்தீவுக்குச் சென்ற இந்திய துணைத்தூதர் அடங்கிய குழுவினர் முள்ளிவாய்க்கால், முள்ளிவாய்க்கால் மேற்கு, கேப்பாபிலவு, நீராவிப்பிட்டி கிழக்கு, அம்பலவன் பொக்கணை, மந்துவில் ஆகிய இடங்களைச் சென்று பார்வையிட்டதுடன், இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தனர்.

இதன்போது முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த மற்றுமொரு தாயார் ''எனது மூன்று பிள்ளைகளும் காணாமல் போய்விட்டனர் அவர்களில் ஒருவர் இறந்துவிட்டார் என அறிய முடிந்தது. மற்றைய இருவர் தொடர்பில் எந்தவித தகவலும் தெரியவில்லை'' என்று கதறியழுதார். (உ-ஐ)

## ரூபா 35 ஆயிரம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செல்வந்த வர்த்தகர்களுக்கு வரி விலக்கு செய்யும்போது ஏன் சாதாரண சிறு வியாபாரிகளுக்கு அரசு வரி விலக்கு செய்யாதுள்ளது? இலங்கையைத் தவிர, வேறு எந்த நாட்டிலும் செல்வந்தர்களுக்கு வரி விலக்கு செய்யப்படுவதில்லை. இது பெரும் குற்றம்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் முன்வைக்கப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நாட்டின் சட்டத்துக்கும், அரசமைப்புக்கும் உட்பட்டதா எனக் கேள்வி எழுகின்றது.

இது தொடர்பில் உயர் நீதிமன்றமும் கருத்துத் தெரிவித்திருந்தது.

முதலாவது, வெளிநாட்டுக் கடன் பெறும் போது அதற்காக முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகள் நாடாளுமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். அத்துடன், இந்த நிபந்தனைக்கு நாடாளுமன்றத்தின் இணக்கத்தையும், அனுமதியையும் பெற வேண்டும்.

இரண்டாவது, ஒரு துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துவது நாட்டின் நிதி விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்திற்குப் பெரும் பொறுப்புள்ளது. எனவே, ஒரு துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு தேவைக்குப் பயன்படுத்தவேண்டுமெனில், நாடாளுமன்ற அனுமதியைப் பெறவேண்டும்.

இதனடிப்படையில் பார்க்கும்போது அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமானது நாட்டின் சட்டத்திற்கு எதிரானதே.

நாடு பெரும் வெளிநாட்டுப் படுகடனில் மூழ்கி வருகின்றது. கடந்த இறுதி ஆறு மாத காலத்துக்குள் நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் 35 ஆயிரம் கோடி ரூபாவையும் தாண்டியுள்ளது. இதனால் மக்கள் பெரும் சுமையைச் சுமந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் நாம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றுள்ளோம் எனக் கூறி மார்தட்டிக்கொள்வதற்காக அரசு அந்நிய நாடுகளுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

இதனடிப்படையில் மாலைதீவில் பாதை அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபாவையும், உகண்டாவில் தொழில் பயிற்சிகளை மேம்படுத்துவதற்காக அந்நாட்டு ஜனாதிபதிக்கு 130 மில்லியன் ரூபாவையும் அரசு நன்கொடையாக வழங்கியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுவரும் நிலையில், வெளிநாடுகளிலிருந்து அதிக வட்டிக்குக் கடனெடுத்து வேறு நாடுகளுக்கு நன்கொடைகளை வழங்குவது எந்தளவுக்குச் சாத்தியமாகும். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## அலிஸ்கா அம்மையாரின் விஜயம் மாற்றம் எதனையும் தருமா...?

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பிரதி உதவிச் செயலர் அலிஸ்கா ஜரிஸ் அம்மையாரின் இலங்கை விஜயம் இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் வெற்றி பெற்ற பின்னர், இலங்கை வந்துள்ள முதலாவது அமெரிக்க உயர் அதிகாரி அலிஸ்கா ஜரிஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை தொடர்பான அமெரிக்கக் கொள்கை எத்தகைய மாற்றமும் இன்றித் தொடரப் போவதையும், இலங்கை மீதான அமெரிக்காவின் அழுத்தம் தீவிரமடையப் போவதையும் இவரின் விஜயம் எடுத்துக்காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த வருட முற்பகுதியிலும் அலிஸ்கா ஜரிஸ் இலங்கை வந்திருந்தார். பல தரப்புகளுடனும் பேச்சுகள் இடம்பெற்றன. எனினும், தற்போதைய இவரது விஜயம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 20ஆவது தொடர்க் கூட்டத்துக்கு இன்னும் நான்கு மாதங்கள் கூட இல்லாத நிலையிலும், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றி எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இடம்பெறுவதால் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் இலங்கை அரசைத் தூண்டும் விதத்தில் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு முதன்மையானதாகி உள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அது அர்ப்பணிப்புடன் செயற்படுகிறதா என்பவை குறித்து ஆராய்வதே அலிஸ்கா ஜரிஸின் தற்போதைய விஜயத்தின் நோக்கம் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த அலிஸ்கா ஜரிஸ், நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்தார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் இதுவரை ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதே இச்சந்திப்பின் பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவாத் தீர்மானத்திற்குப் பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி பலத்த பின்னடைவை அடைந்திருப்பது முற்றிலும் எதிர்பார்க்காத நிலையாகும். 2009 மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்பு, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமெரிக்காவுக்கு இலங்கை அரசு கொடுத்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு முன்னதாக அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழித்துவிட அரசு கங்கணம் கட்டிநிற்கிறது. மாகாண சபைகளை ஒழித்துவிடுவது என்று தீர்கமான நிலைப்பாட்டுக்கு அரசு செல்லும் பட்சத்தில் அமெரிக்காவுடன் பேச்சுகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான அடித்தளமே இல்லாமற் போய்விடும்.

ஜெனிவாவில் மாத முற்பகுதியில் இடம்பெற்ற பூகோள கால கிரம மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கையை அமெரிக்கா கடுமையாகத் தாக்கி இருப்பதால், அடுத்த மார்ச் மாதம் நடைபெறும் 20ஆவது தொடர்க் கூட்டம் இலங்கைக்கு ஒரு சோதனையாகவே அமையப்போகிறது. அலிஸ்கா ஜரிஸ் அமெரிக்கா திரும்பியதும் இலங்கை தொடர்பாகக் கையளிக்கும் அறிக்கை 20ஆவது தொடர்க் கூட்டத்தில் அமெரிக்காவின் புதிய நடவடிக்கைகளுக்கு கால்கோளிடலாம்.

அடுத்த வருடத்துக்கான ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு ஐ.நா. பொதுச்சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு மூலம் தெரிவான 18 நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. இலங்கைக்கு ஆதரவான சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் அடுத்த வருடம் அங்கம் வகிக்கமாட்டா. ஆகவே, இலங்கை புதிய தீர்மானங்களை எதிர்நோக்கவேண்டிவரும்.

எனினும், இலங்கைக்கு எதிராக புதிதாகத் தீர்மானம் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்கான காலம் இன்னும் பிந்திவிடவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில்தான் தயாரிக்கப்பட்டது என்பதை அமெரிக்கா அடிக்கடி வலியுறுத்திவருகிறது. இதனைச் செயற்படுத்தவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உண்டு.

சமீபத்தில் வெளியான ஐ.நா. உள்ளக அறிக்கை, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற படுகொலைகளை உறுதிசெய்கிறது. இதன் காரணமாக போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கை எதிர்நோக்க நேரிடலாம் என்று அரசியல் அவதானிகள் எச்சரிக்கின்றனர். ஆகவே, அலிஸ்கா ஜரிஸின் விஜயத்துடன் இச்சிக்கல் முடிந்துவிடப் போவதில்லை. அமெரிக்கா தொடர்ந்து இலங்கையை அவதானித்துக்கொண்டு மறைமுகமாகவன்றி வெளிப்படையாகவே அழுத்தம் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

அடுத்த நான்கு மாத காலத்திலாவது அரசு ஏதாவது முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதன் மூலமே அடுத்த ஜெனிவாக் கூட்டத்தில் எதிர்நோக்கப் போகும் நெருக்கடிகளில் இருந்து இலங்கையால் தப்பமுடியும்.

இதுதொடர்பில் அலிஸ்கா ஜரிஸின் இப்போதைய விஜயம் இலங்கை அரசை நாடிபிடித்துப் பார்க்கும் குறித்தொதுக்கப்பட்ட தீவிர பணி என்று கொள்ளலாம். அதன் பெறுபேறுகள், ராஜதந்திர உறவுகளை வேறுகோணத்தில் மாற்றி அமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போமே...

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் எவருக்கும் பயன் ஏதும் இல்லையாம்

## அதிகாரம் இன்மையே அதற்குக் காரணம்

யாழ்ப்பாணம், நவ. 21

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் பொலிஸாருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ இன்று வரையிலும் எந்தவொரு சேவையும் நிறைவேற்றப்படுவது இல்லை என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எந்தவொரு அதிகாரத்தையும் கொண்டிராது பெயரளவில் மட்டுமே குறித்த ஆணைக்குழு இயங்கி வருவதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஏற்று விசாரணைகளை மேற்கொள்வதற்கு அதிகாரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்று விசாரணைகளை மேற்கொண்டாலும் அதற்கு அப்பால் அவை சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் இதுவரையில் அதற்குக் கிடைக்கவில்லை.

அந்த நிலைப்பாட்டின் மீது பொதுமக்களுக்குப் பொலிஸாரால் இழைக்கப்படும் அநீதிகள் விசாரிக்கப்பட்டாலும் அதற்கு எதிராகச் சட்டரீதியிலான நடவடிக்கை எதையும் மேற்கொள்வதற்குத் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு அதிகாரம் இல்லை.

கொழும்பு-கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ரொட்டுன்றா கட்டடத்தில் வாடகைக்கு இந்த ஆணைக்குழு அலுவலகம் ஏழு ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிமனைக்குச் செலுத்தப்படும் மாதாந்த வாடகை மாத்திரம் ஐந்து லட்சம் ரூபா என்றும் கூறப்பட்டது.

அதற்கு மேலதிகமாக ஆணைக் குழுவின் உத்தியோகத்தர் குழுவைப் பராமரித்தல் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக மேலும் பெருந்தொகையும் செலவழிக்கப்படுகிறது என்றும் கூறப்பட்டது. (ம-22)

# வடமராட்சிப் பாடசாலைகளுக்கு புதிய நியமனத்துடன் 15 அதிபர்கள்

வடமராட்சி,நவ.21

இலங்கை அரச சேவை வகுப்பு 2 II இற்கான ஆள்சேர்ப்புப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனத்தை ஏற்றுக்கொண்ட 15 அதிபர்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த 15 ஆம் திகதி முதல் அதிபர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக அதிபர்களாக நியமனம் பெற்றவர்களின் பெயர் மற்றும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

செ.செல்வச்சந்திரன் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்திலிருந்து செம்பியன்பற்று அ.த.க. பாடசாலைக்கும், மு.ரவீந்திரன் கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயத்திலிருந்து கம்பர்மலை வித்தியாலயத்துக்கும், எஸ்.எஸ். சண்முகநாதன் வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்திலிருந்து கரணவாய் மகாவித்தியாலயத்துக்கும், இ.இராகவன் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலிருந்து கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கும், க.உதயரூபன் கம்பர்மலை வித்தியாலயத்திலிருந்து கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், இ.சிவசங்கர் இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து நாகர்கோவில் மகா வித்தியாலயத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கி.குகநாதன் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இருந்து குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் க.கிரிதரன் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திலிருந்து கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயத்துக்கும், சோ.வாகீசன் தும்பளை சைவப்பிரகாசா மகா வித்தியாலயத்திலிருந்து மணற்காடு றோ.க.த.க.பாடசாலைக்கும், திருமதி கௌ.சேதுராஜா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கும், செல்வி இ.சுப்பிரமணியக்குருக்கள் வடமராட்சி ஆசிரிய மத்திய நிலையத்திலிருந்து வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருமதி பு.தயாநிதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலிருந்து புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கும், வே.பரமேஸ்வரன் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இருந்து அம்பன் அ.மி.த.க.பாடசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலையில் கடமையாற்றும் பொ.அரவிந்தன், கலட்டி றோ.க.த.க.பாடசாலையில் கடமையாற்றும் அ.அ.வி.மரியநாயகம் ஆகியோர் அதே பாடசாலைகளில் அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர். (ம-8)

# தீர்வையற்ற வாகன விற்பனைத் தடை நீக்கம்

தீர்வைகளில் இருந்து விலக்களிக்கப்படும் சலுகை அடிப்படையிலான அனுமதிபத்திரங்களின் கீழ் அரச ஊழியர்களால் இறக்குமதி செய்யும் வாகனங்கள் மூன்று ஆண்டுகள் கழியும் முன்னர் வேறு ஒருவரின் பெயருக்கு மாற்றவோ அல்லது விற்பனை செய்யவோ விதிக்கப்பட்டிருந்த தடை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவித்தல் கடந்த 16 ஆம் திகதி சுங்கத் திணைக்களத்துக்கு விடுக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சின் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் பீ.ஏ.டயஸ் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தப்பட்ட கால வரையறையை இரத்துச் செய்தல் ஜனாதிபதியால் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட யோசனை எனவும், அது ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ள தீர்வை அற்ற வாகன அனுமதிப் பத்திரங்களுக்கும் கூட பொருந்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# வலி.கிழக்கில் முகாமைத்துவ போட்டி வெற்றியாளர்

யாழ்ப்பாணம்,நவ.21

கிராம அலுவலர்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

முதலாமிடம் செ.வசந்தகுமார் (ஜே/262),

இரண்டாமிடம் சி.தயாபரன் (ஜே/268),

மூன்றாமிடம் சி.உதயகுமார் (ஜே/257). (ம-5)

# காணி சுவீகரிப்பு வழக்குகள் கொழும்பு தலைமையகத்திடம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.கிளை பாரப்படுத்தியது

யாழ்ப்பாணம்,நவ.21

வீதி அகலிப்பு நடவடிக்கையின் போது சுவீகரிப்புச் செய்யப்பட்ட பொதுமக்களின் காணிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படாமை தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் கொழும்பில் உள்ள தலைமையகத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன என்று பிராந்திய இணைப்[illegible] த.கனகராஜ் தெரிவித்தார். [illegible] உள்ள பிரதான வீதிகள் நான்கும் அகலிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதிகள் அகலிக்கப்படும் போது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

இந்தக் காணிகளை, வீதி அகலிப்புக்குப் பெறப்பட்டபோதும் அதற்குரிய நஷ்டஈடுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் பொதுமக்களால் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய கிளையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனைவிட வேறு சில முறைப்பாடுகளும் ஆணைக்குழுவில் பொதுமக்களால் செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பான விசாரணைகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இது தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வர முடியாமல் போனதைத் தொடர்ந்து, யாழ்.பிராந்தியக் கிளையால் இந்த விசாரணை, கொழும்புத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் பிடியில் ஆயுள்வேத வைத்தியசாலை

## ஒலுமடு மக்களுக்குப் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, நவ. 21

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஒலுமடு ஆயுள்வேத வைத்தியசாலை, பொது நூலகம், பிரதேச சபையின் உப அலுவலகம் என்பன இயங்கி வந்த கட்டடம் மீள் குடியேற்றம் இடம்பெற்ற பின்னரும் இதுவரை இராணுவத்தினரிடம் இருந்து விடுவிக்கப் படாமையால் இந்த சேவை நிலையங்களை மீள இயக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**2000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிக்கப் பட்டுள்ளன.**

ஒலுமடு, கருப்பட்ட முறிப்பு, அம்பகாமம், பழைய வாடி, கல்குவாரிக் குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 2000 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்தப் பகுதியில் உள்ள மக்கள் வைத்திய சேவையைப் பெறுவதற்கு முள்ளியவளை, மாங்குளம் அல்லது புதுக்குடியிருப்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கு ஏறக்குறைய 25 கிலோ மீற்றர் தாண்டிச் செல்லவேண்டியுள்ளது.

அது தவிர படிப்பக வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் எவையும் இல்லை.

இந்தக் கிராமத்தில் வசிப்போர் ஆயுள்வேத வைத்திய முறைகளை அதிகம் நாடுவதால் அந்த வைத்தியசாலையை மீள இயக்க கோரிக்கை விடுக்கின்றனர். எனினும் இராணுவத்தினர் கட்டடத்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பதால் அதனை மீள இயக்க முடியாதுள்ளதாகப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-6)

**முல்லை வலய ஆசிரியர்களின்**

# 60 வீதமான கோவைகள் மீண்டும் சீர் செய்யப்பட்டன

புதுக்குடியிருப்பு, நவ.21

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் இறுதிக்கட்டப் போரின்போது சேதமடைந்தடைந்த ஆசிரியர்களின் சேவைக்கால கோவைகளில் 60 வீதமானவை சீர்செய்யப்பபட்டுள்ளதாக முல்லைத்தீவு கல்வி வலயம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

இறுதிப் போரின் போது முல்லைத்தீவு ஆசிரியர்களின் கோவைகள் முற்றாக அழிவடைந்தன. இதனால் அந்த ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர்.

தற்போது அவர்களின் ஆவணங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்டு அவற்றின் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு 60 வீதமான ஆசிரியர்களின் கோவைகள் முழுமையாக்கப்பட்டுள்ளன.

அதே போல ஓய்வூதியம் பெறுவோரின் கோவைகளும் சீர்செய்யப்பட்டு நிண்ட காலமாக நிலவி வந்த ஓய்வூதியப் பிரச்சினைகளும் சீராக்கப்பட்டுள்ளன. அத்துடன் எஞ்சியுள்ள கோவைகளும் விரைவில் சீர் செய்யப்படும் -என்றார். (ஐ-400)

# கால்நடைகள் திருட்டு ஓய்ந்தபாடில்லை

கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் வீட்டில் கட்டிவைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு மாடுகள் நேற்றுமுன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளன என கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே இரவு முரசுமோட்டை, மூன்றாம் யுனிற் பகுதியில் வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த பசு ஒன்றும் காணாமல் போயுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


அண்மைக் காலமாக வன்னியில் வாழ்வாதாரத் தேவைகளுக்காக வளர்க்கப் பட்டுவரும் கால்நடைகள் திருடப்படுவது அதிகரித்துள்ளது.

திருட்டுக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாததால் அது தொடர்ந்து வண்ணமே உள்ளது.

**கட்டாக்காலிகளாக பிடிக்கப்பட்ட 7 மாடுகள் ஏலத்தில் விற்கப்பட இருந்த நிலையில் காணாமல் போயுள்ளன.**

இதேவேளை ஊரியான் கமக்கார அமைப்பினரால் கடந்த சிறுபோக நெற்செய்கையின் போது கட்டாக்காலி மாடுகளாகப் பிடிக்கப்பட்ட 7 மாடுகள் ஏலத்தில் விற்கப்பட இருந்த நிலையில் காணாமல் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாடுகளை விற்பதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஊரியான் கமக்கார அமைப்பு அனுமதி கோரிய நிலையில் மாடுகள் மாயமாகியுள்ளன. இவற்றுக்கு என்ன நடந்தது என்று தெரியாது என கமக்கார அமைப்பினர் தெரிவிக்கின்றனர். (ஐ-6)



தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் 'சிப்நன' திட்டத்தின் கீழ் கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயத்தில் தரம்-6 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ-415)

**அடிப்படை வசதியற்று மன்னார் நகர சபை மண்டபம்**

மன்னார் நகரசபை மண்டபத்தில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் விழாக்களின்போது பெருந்தொகைப் பணம் வாடகையாக அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குடிதண்ணீர் வசதியோ சுகாதார வசதியோ இல்லாத மண்டபமாக அது காணப்படுகிறது.

இதனால் விழாக்களுக்காக மண்டபத்தை வாடகைக்கு பெறுவோர் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். மேற்படி விடயம் தொடர்பாக மன்னார் நகர சபை வரியிறுப்பாளர் மூலம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

கடந்த நான்கு மாதகாலமாக மன்னார் நகர சபையின் நகர மண்டப மலசலகூடம் துப்புரவின்றி, சுகாதாரமின்றி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-41)

# புதுக்குடியிருப்பில் வறுமைக்குட்பட்ட 23 பேருக்கு ஊக்குவிப்பு நிதி உதவி

புதுக்குடியிருப்பு, நவ. 21

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட சுமார் 23 பேருக்குச் சமூக சேவைகள் அமைச்சினால் 5 இலட்சத்து 68 ஆயிரம் ரூபா சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப் பட்டுள்ளது.

குழந்தை - ஜெயவீரசிங்கம் (மூங்கிலாறு தெற்கு), குகதாசன் இந்திராணி (உடையார்கட்டு), ஆண்டி ஐயா - சிவனேஸ்வரன் (உடையார் கட்டு), யோகேஸ்வரன் ராஜசிங்கம் (மூங்கிலாறு தெற்கு), சதீஸ்குமார் யோகேஸ்வரி (குரவயல்), மைக்கல் றொபின்சன் (2ஆம் வட்டாரம், கைவேலி), மருதமுத்து சுப்பிரமணியம் (குரவயல்), தம்பிராசா லீலாவதி (3ஆம் கண்டம்), இராசரத்தினம் கோபாலகிருஸ்ணன் (தேவிபுரம்), துரைராஜசிங்கம் சிவகுமாரி (மூங்கிலாறு தெற்கு) கலைச்செல்வன் ஹேமா (மூங்கிலாறு வடக்கு), மனோகரன் நியூசிகன் (உடையார் கட்டு வடக்கு), கேசவநாகர் ஜனார்த்தனன் (முப்பெருந் தேவியர் கோயிலடி, உடையார்கட்டு, வடக்கு), முருகையா சிவகுமார் (வேள்ளப் பள்ளம்), தெய்வநாயகம் - தெய்வேந்திரராஜா (சங்கிலித் திட்டம்), சின்னராசா இளங்கோ (மூங்கிலாறு தெற்கு), கறுப்பையா செல்வராஜா (உடையார்கட்டு தெற்கு), சிவராஜா சாந்தராஜா (கொலணி, சுதந்திரபுரம்), செல்வி - சோலைதேவகி (உடையார்கட்டு வடக்கு), செல்வராம் பிரதீபன் (சுதந்திரபுரம்), மணிமுத்து சந்திரகுமார் (4 ஆவது வீதி, மூங்கிலாறு வடக்கு), செல்லையா யோகராசா (2ஆம் வட்டாரம் கோம்பாவில், புதுக்குடியிருப்பு) ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபா என்ற வீதமும், கந்தையா சிவானந்தன் என்பவருக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (ஐ-400)

# கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ்களின் நேர அடிப்படையிலான சேவை விவரம்

கிளிநொச்சி, நவ. 21

உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ்களின் நேர ஒழுங்கிலான சேவை விவரத்தை கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 12 பஸ்கள் இயக்கப்படுகின்றன. இவை காலை 6 மணி, 6:45, 7:30, 8:15, 9:00, 9:45, முற்பகல் 10:30, 11:15, நண்பகல் 12 மணி என்ற நேர ஒழுங்கில் புறப்படுகின்றன.

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு 13 பஸ்கள் இயக்கப்படுகின்றன. அவை காலை 6:55, 7:30, 8:40, 8:45, 9:15, 9:50, முற்பகல் 10:25, 11:00, 11:35 நண்பகல் 12 மணி ஆகிய நேர ஒழுங்கில் புறப்படுகின்றன.

பூநகரியில் இருந்து வவுனியாவுக்கு 4 பஸ்கள் பணியில் ஈடுபடுகின்றன. இவை காலை 5:30, 7:10, 8:30, மு.ப. 10 மணி ஆகிய நேர ஒழுங்கில் புறப்படுகின்றன.

விசுவமடுவில் இருந்து பரந்தன் ஊடாக வவுனியாவுக்கு 3 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை அதிகாலை 4:30, 5:30, காலை 6:30, 7:15 மணிக்குப் புறப்படுகின்றன.

வலைப்பாடு மல்லாவி மாங்குளம் ஊடாக வவுனியாவுக்கு 3 பஸ் சேவையில் ஈடுபடுகின்றன. இதில் வலைப்பாட்டில் இருந்து வவுனியாவுக்கு அதிகாலை 4.30 மணிக்குப் புறப்படுகின்றது.

முழங்காவில் கிளிநொச்சி ஊடாக வவுனியாவுக்கு காலை 6:15 மணிக்கு ஒரு பஸ் பணியில் ஈடுபட்டுள்ளது.

முட்கொம்பன் கிளிநொச்சிக்கு ஒரு பஸ் காலை 6 மணிக்கு புறப்பட்டு மீண்டும் மாலை 5:30 மணிக்குத் திரும்பிச் செல்லும்.

பூநகரி - வவுனியாவுக்கு ஒரு பஸ் காலை 9:45 க்கு புறப்பட்டு பிற்பகல் 1:15 க்கு திரும்பிச் செல்லும்.

இராமநாதபுரம் - கிளிநொச்சி ஊடாக முழங்காவிலுக்கு ஒரு பஸ் காலை 6 மணிக்குப் புறப்பட்டு, முழங்காவிலில் இருந்து முற்பகல் 11:45 க்குத் திரும்பிச் செல்லும்.

கிளிநொச்சி - விசுவமடு ஊடாக கல்லாறுக்கு ஒரு பஸ் மாலை 4 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் காலை 7 மணிக்குத் திரும்பிச் செல்லும்.

கிளிநொச்சி - விசுவமடு - பிரமந்தனாறு ஊடாக கல்லாறுக்கு ஒரு பஸ் நண்பகல் 12 மணிக்குப் புறப்பட்டு, கல்லாறில் இருந்து மறுநாள் காலை 8 மணிக்கு திரும்பிச் செல்லும்.

வலைப்பாட்டிலிருந்து மன்னாருக்கு ஒரு பஸ் காலை 6:45 க்கு புறப்பட்டு, கிளிநொச்சி - விசுவமடு ஊடாக முல்லைத்தீவுக்கு 12 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இவை காலை 6 மணி, 7:30, 8:15, 9:00, முற்பகல் 10:00 மணி, 10:50, மாலை 5:50 ஆகிய நேர ஒழுங்கில் புறப்படும்.

கிளிநொச்சி - வட்டக்கச்சிக்கு 5 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இவை காலை 7:40, 9:30, முற்பகல் 11:00, நண்பகல் 12:30, 1:45, பிற்பகல் 3:45, மாலை 4:30, 5:40, இரவு 7:15 ஆகிய நேரங்களில் பஸ்கள் புறப்படும்.

கிளிநொச்சி - உருத்திரபுரத்துக்கு ஒரு பஸ் சேவையில் ஈடுபடுகின்றது. இது காலை 7:45, 9:45 மணிக்கும் நண்பகல் 12:30 க்கும், மாலை 3:00 மணிக்கும், 5:45 க்கும் பஸ் சேவை நடைபெறுகிறது.

முழங்காவில் - சங்குப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு இரண்டு பஸ்கள் காலை 6 மணி, 6:45 ஆகிய நேரங்களில் புறப்படும்.

இராமநாதபுரம் - கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு பிற்பகல் 2:30 மணிக்கு ஒரு பஸ் புறப்படும்.

வன்னேரிக்குளம் - ஸ்கந்தபுரம் - முட்கொம்பன் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு ஒரு பஸ் காலை 6:30 மணிக்கு புறப்படும்.

முழங்காவிலில் இருந்து கிளிநொச்சிக்கு 12 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இவை அதிகாலை 5:45, காலை 6:30, 7 மணி, 8 மணி, 8:45, முற்பகல் 10:15, பிற்பகல் 2 மணிக்கு பஸ்கள் புறப்படும். கிளிநொச்சியில் இருந்து முழங்காவிலுக்கு மு.ப. 10 மணி, 10:30, நண்பகல் 12 மணி, 12:45, 1:30, மாலை 5:15, இரவு 7:15 ஆகிய நேர ஒழுங்குகளில் பஸ்கள் புறப்படும்.

அத்துடன் முல்லைத்தீவு, வவுனியா , மாவட்டங்களுக்குச் செல்லும் பஸ்கள் மீளவும் அங்கிருந்து குறிக்கப்பட்ட நேரங்களில் கிளிநொச்சி பஸ் நிலையத்துக்குத் திரும்பும். இந்த நேர ஒழுங்குகளைக் கருத்தில் கொண்டு பயணிகள் தமது பயணத்தைத் தொடருமாறு கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கேட்டுள்ளது. (ஐ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.7 மில்லியன் ரூபாவுக்கு பனம் பொருள் கொள்வனவு

## வடக்கு- கிழக்கு உற்பத்தியாளரிடம் இருந்து

யாழ்ப்பாணம், நவ.21

பனை அபிவிருத்திச் சபையால் கடந்த 6 மாத காலத்தில் உற்பத்தியாளர்களிடம் இருந்து 6.7 மில்லியன் ரூபா பெறுமதியான பனை சார்ந்த உற்பத்தி பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் இந்த தகவலைத் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பனை அபிவிருத்திச் சபையால் வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பிரதேசங்களில் பனை சார்ந்த கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

**தற்போது மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம் பிரதேசத்தில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக முழங்காவில், பூநகரி பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

அவற்றின் ஊடாகப் பயனாளிகளுக்குப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை முழுவதும் இதுவரை 50 இற்கும் மேற்பட்ட பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

6 மாத காலம் கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் ஒரு வகுப்பில் 80 பயிற்சியாளரை மட்டுமே இணைத்துக்கொள்கிறோம்.

மூலப்பொருள் கட்டட வாடகை உட்பட 6 மாத காலத்துக்கு 2 லட்சம் ரூபா வரை செலவாகிறது.

பயிற்சி அளிக்கப்பட்ட பயனாளிகள் ஒன்றிணைந்து சிறு சுவடுகள் எனும் அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக ஆயிரத்து 800 பேரை இணைத்துக் கொண்டு உற்பத்திகளை அதிகரித்துச் செல்கிறோம்.

பயிற்சி பெற்றதோடு நின்றுவிடாது தொடர்ந்தும் பயிற்சிகளைப் பெற்று உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு 'சுவடுகள்' அமைப்போடு இணைந்து கொள்ள முடியும்.

தற்போது மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம் பிரதேசத்தில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக முழங்காவில், பூநகரி பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அம்பாறை, அம்பாந்தோட்டை பிரதேசத்தில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிப்பதற்காக அந்தப் பகுதியினர் கேட்டுள்ளனர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (ம-13)

## இன்னும் ஓயவில்லை டிப்பர்களின் அட்டகாசம்

### அவர்களுக்கு இல்லை வேகக்கட்டுப்பாடு

ஏ-9 வீதி அகலிப்பின் பின்னர் வேகக்கட்டுப்பாடின்றிச் செல்லும் 'டிப்பர்' வாகனங்கள் அதே திசையில் செல்வோரையும் மோதி விட்டுத் தப்பியோடிச் செல்லும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நுணாவில் மேற்குப் பகுதி ஏ-9 வீதியில் வேகமாக வந்த 'டிப்பர்' வாகனம் அதே திசையில் வந்த ஓட்டோ ஒன்றை மோதிவிட்டு தப்பியோடியுள்ளது. இதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். மிருசுவில் உசனைச் சேர்ந்த குலவீரசிங்கம் சிவனேஸ்வரன் (வயது-29) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இதேவேளை நேற்றுக் காலை சாவகச்சேரி சந்தைக்கு சைக்கிளில் வந்த பெண்ணை அதேதிசையில் வந்த 'டிப்பர்' வாகனம் மோதி தூக்கி வீசியதில் டிப்பர் சில்லுக்குள் பெண்ணின் கால் அகப்பட்டு காயமேற்பட்டது.

நுணாவில் கிழக்கில் இடம்பெற்ற சம்பவத்தில் கல்வயலைச் சேர்ந்த லோகேந்திரன் ரூபாஹினி (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார். விபத்தில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## கைதடி முதியோர் இல்லத்தில் வயோதிபப் பெண் சேர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.21

எவரது பராமரிப்பும் இன்றி நோய்வாய்ப்பட்ட நிலையில் சிரமத்துடன் காலத்தைக் கழித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

இணுவிலைச் சேர்ந்த 80 வயதான இந்தப் பெண் எவரது உதவியுமின்றித் தனிமையில் வசித்து வந்தார். இந்த நிலையில் இவர் நேற்று முன்தினம் கைதடி முதியோர் இல்லத்தில் சிலரால் அழைத்து வரப்பட்டுச் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

கமநல சேவை திணைக்களம் ஊடாக

## 73.38 மில்லியன் ரூபா நிதியில் குடாநாட்டில் 34 வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.21

கமநலசேவைகள்திணைக்களத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தில் 73.38 மில்லியன் ரூபா செலவில் 34 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் 46.2 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தின் ஊடாக 11 வேலைத்திட்டங்களுக்கு 23.34 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 12.34 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டு 3 வேலைத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 8 வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சால் 7 வேலைத் திட்டங்களுக்கு 7.58 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 4.54 மில்லியன் ரூபா நிதியே கடந்த ஒகஸ்ட் மாத இறுதி வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் 7 வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாய நம்பிக்கை நிதியத்தின் நிதி ஒதுக்கீட்டில், 5 வேலைத்திட்டங்களுக்கு 11.73 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 8.66 மில்லியன் ரூபா நிதியே கடந்த ஒகஸ்ட் மாத இறுதி வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

வேலைத்திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இடர் முகாமைத்துவ அமைச்சினால் 8 வேலைத் திட்டங்களுக்கும் 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த ஒகஸ்ட் மாத இறுதி வரையில் 1.16 மில்லியன் ரூபா நிதியே செலவு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் 2 வேலைத்திட்டங்களுக்கு 21.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 16.98 மில்லியன் ரூபா செலவில் 2 வேலைத்திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

யு. எஸ் எயிட் நிறுவனத்தால் ஒரு வேலைத்திட்டத்துக்கு 3.03 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதில் 2.52 மில்லியன் ரூபா நிதி கடந்த ஒகஸ்ட் மாதம் வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது-என்றுள்ளது. (ம-5)

## நாவற்குழி பாலத்தில் நேற்று சறுக்கி குறுக்கே நின்றது பஸ்

### 2 மணிநேரம் தடைப்பட்டது போக்குவரத்து





தென்மராட்சி,நவ.21

நாவற்குழிப் பாலத்தில் பயணிகள் பஸ் ஒன்று சறுக்கி குறுக்கே நின்றதில் இந்த வீதியூடான போக்குவரத்து இரண்டு மணிநேரம் தடைப்பட்டது.

இதேவேளை அதிர்ஷ்டவசமாகப் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு சென்ற தனியார் பஸ் நாவற்குழி பாலத்தில் 'பிறேக்' போட முற்பட்ட போது சில்லுச் சறுக்கிப் பாலத்தின் இரு பகுதியையும் அடைத்து மறைத்து நின்றது.

இதனால் சைக்கிள் கூட செல்ல இடைவெளி இல்லாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் இவ்வழியே வந்த வாகனங்கள் மீண்டும் கைதடிக்கு வந்து கோப்பாய் ஊடாகப் பயணத்தைத் தொடர்ந்தன.

காலை 6 மணிக்கு அங்கு திரண்டமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு சிரமப்பட்டு பஸ்ஸைத் தள்ளி ஒரு வழிப் பாதையாகப் பயன்படுத்தச் செய்தனர். பொலிஸார் அவ்விடத்தில்நின்று வாகனப்போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டனர். (ம-4-9)

## உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை அதிபர் பதவி ஏற்றார்



கெருடாவில்,நவ.21

உடுப்பிட்டிப் பெண்கள் பாடசாலைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் திருமதி கௌரி சேதுராஜா நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாகத் தனது கடமை களைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும்ஆசிரியர்கள் புதிய அதிபரை வரவேற்றனர். (ம-253)



வடமராட்சிக் கரணவாய்க் கற்கரை வீதியில் சக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு முன்பாகப் பெரிய குழி ஒன்று காணப்படுவதால் வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கற்கரை ஓரமாக இங்குக் குழி ... பகுதி உடைந்து காணப்படுகிறது. (ம-253)

## சாவகச்சேரியில் பெரும் 'குடி' மக்கள் தண்ணி அடிப்பதில் 'மன்னர்கள்'

### தீர்ந்தது சாரயம், பியர், 5 இலட்சம் லீற்றர்

யாழ்ப்பாணம், நவ. 21

சாவகச்சேரி பிரதேசத்திலுள்ள 5 மதுபான விற்பனை நிலையங்களிலும் 9 மாத காலப்பகுதியில் 5 இலட்சத்து 54 ஆயிரத்து 515 லீற்றர் சாராயம் மற்றும் பியர் என்பனவிற்பனையாகியுள்ளன.

ஜனவரி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியிலேயே இந்த விற்பனை இடம்பெற்றுள்ளது என்று சாவகச்சேரி மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் சாராய வகைகள் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 820 லீற்றரும், பியர் 3 இலட்சத்து 89 ஆயிரத்து 695 லீற்றரும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி தீபாவளிப் பண்டிகைக்கு முதல் நாள் 10 ஆயிரத்து 800 லீற்றர் சாராய வகைகளும், மூவாயிரத்து 500 லீற்றர் பியரும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கடந்த 13 ஆம் திகதி தீபாவளி பண்டிகை அன்று 10 ஆயிரத்து 100 லீற்றர் சாராயமும், இரண்டாயிரம் லீற்றர் பியரும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மதுவரித்திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 5 மதுபான விற்பனை நிலையங்களிலும் சாவகச்சேரி பிரதேசத்துக்கு உட்பட்ட மதுப்பிரியர்களும், வெளியாரும் மதுவகைகளைப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## நாகர் கோவிலில் நடமாடும் சேவை

வடமராட்சி,நவ.21

பருத்தித்துறைப் பொலிஸார் நடத்திவரும் நடமாடும் சேவை எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத் தலைமை அலுவலக பொலிஸ் அதிகாரி எல்.பிரடீவுஸ் தலைமையில் நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராகக் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.கமகே கலந்துகொள்வார்.

தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படுவதுடன் இலவச பொதுவைத்திய சேவை, மூக்குக் கண்ணாடி வழங்கல்களும் இடம்பெறும். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்கரேக்கு எதிராக கருத்து வெளியிட்ட பெண்கள் கைது

சென்னை,நவ.21

மறைந்த சிவசேனா கட்சியின் தலைவர் பால் தாக்கரேக்கு எதிராக பேஸ்புக் தளத்தில் கருத்து வெளியிட்டிருந்த பெண்ணை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

21 வயதான இந்த பெண்ணுடன் அவரது தோழியும் கைது செய்யப்பட்டு பின்னர், இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த இரண்டு பெண்களுக்கும், வெவ்வேறு பகுதிகளிலிருந்து எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

இதுகுறித்து நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு, அந்தப் பெண்களைக் கைது செய்தது தவறு. பொலிஸாரின் நடவடிக்கை ஜனநாயகத்துக்கு எதிரானது-என்றார்.

மேலும் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மாநில முதல்வர் பிரித்திவி ராஜ் சவானுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

# நெரிசலில் சிக்கி 22 பேர் சாவு

## கங்கைக் கரையில் துயரச் சம்பவம்



பாட்னா, நவ.21

பீகார் தலைநகர் பாட்னாவில் நடந்த சாத்பூஜா விழாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர்.

தீபாவளி பண்டிகை கொண்டாடிய ஆறு நாள்களுக்குப் பின், சூரிய கடவுளை வணங்கும் சாத்பூஜா விழா வட மாநிலங்களில் கொண்டாடப்படுகின்றது.

பீகார் தலைநகர் பாட்னா அருகேயுள்ள அதாலத் கன்ச் என்ற இடத்தில் உள்ள கங்கை ஆற்றின் கரையில் நேற்று முன்தினம் அதிகமான மக்கள் கூடி சாத்பூஜா வழிபாடு நடத்தினர்.

ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த மூங்கில் பாலத்திலும் ஏராளமான மக்கள் கடந்து சென்றனர். கூட்டம் அதிகமாக இருந்ததால் பாலம் திடீரென உடைந்தது. இதனால் மக்கள் பீதியில் முண்டியடித்துக் கொண்டு பாலத்தைக் கடக்க முயன்றனர். இதனால் அங்கு கடுமையான நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர். அவர்கள் பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (வ)

## கடவுச்சீட்டு பறிக்கப்பட்டதால் நித்தியின் கனடா பயணம் ரத்து



சென்னை, நவ.21

சுவாமி நித்தியானந்தாவின் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டதால் அவரது கனடாப் பயணம் ரத்தாகியது.

சுவாமி நித்தியானந்தா தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்குவதற்காகவும், தனது வெளிநாட்டுப் பக்தர்களைப் பார்ப்பதற்காகவும் கனடா செல்லத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் கடந்த மாதங்களில் பல வழக்குகளில் சிக்கிய நித்தியின் கடவுச்சீட்டு பொலிஸாரின் வசமிருப்பதால் அவரால் கனடா பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

இதையடுத்து இன்றைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒளி - ஒலி தொலைத்தொடர்பால் வெண்திரையில் தோன்றி பக்தர்கள் மத்தியில் அவர் உரையாற்றவுள்ளார்.

தியானபீடம் எனும் ஆசிரமத்தை உருவாக்கி 33 நாடுகளில் அதற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிளைகளை உருவாக்கிய 32 வயதான நித்தியானந்தாவுக்கு படுக்கை அறையில் அவருக்குத் தெரியாமல் பொருத்தப்பட்டிருந்த ஒரு கமராவாலேயே பிரச்சினை எழுந்தது.

இதனை நடிகை ரஞ்சிதாவுடன் தொடர்புபடுத்தியே தமிழகத் தொலைகாட்சிகள் நேரடியாக அந்தக் காட்சிகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# அந்நிய முதலீட்டுக்கு தி.மு.க. எதிர்ப்பு

## அறிவித்தார் கருணாநிதி

சென்னை, நவ.21

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை மத்திய அரசு அனுமதித்ததற்கு தி.மு.க.வின் ஆதரவு இல்லை என்று அந்தக் கட்சித் தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி கொடுத்த விவகாரத்தில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இருந்து திரிணாமுல் காங்கிரஸ் வெளியேறியது.

இதனால் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசு சிறுபான்மை அரசானது.

மத்திய அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு தெரிவிக்கும் சமாஜவாடி கட்சியும் கூட சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடதுசாரி கட்சிகள் நடத்திய பிரம்மாண்ட டில்லி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டது.

இந்தநிலையில் எதிர்வரும் நாடாளுமன்றம் குளிர்கால கூட்டத்தொடரில் இந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கு எதிரான வாக்கெடுப்புடன் கூடிய தீர்மானத்தைக் கொண்டு வருவதில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி தீவிரம்காட்டி வருகிறார். இந்தத் தீர்மானத்தை அ.தி.மு.க ஆதரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. இந்தநிலையில் தமது நிலைப்பாடு இரகசியமாக இருக்கும் என்று தி.மு.க. கூறி வந்த நிலையில் நேற்று முன்தினம் சென்னையில் டெசோ கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை தி.மு.க. ஆதரிக்கவில்லை என்று கூறியுள்ளார்.

## டில்லி ஹிமாலயா ஹவுஸில் தீ

### ஒருவர் உயிரிழப்பு



டில்லி, நவ.21

தலைநகர் புதுடில்லியிலுள்ள பிரபல ஹிமாலயா ஹவுஸில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

15 மாடி குடியிருப்புப் பகுதியான ஹிமாலயா ஹவுஸில் நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

மின்கோளாறு காரணமாக 3 ஆவது மாடியில் பிடித்த தீ, மளமளவென 4,5,6,7,8 என அடுத்தடுத்த மாடிகளுக்குப் பரவியது.

உடனடியாக விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர், பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

மேற்படி விபத்தில் ஜெய் பகவான்(வயது 52) என்பவர் உயிரிழந்ததாக டில்லி தீயணைப்புத் துறையின் இயக்குநர் ஏ.கே.ஷர்மா தெரிவித்துள்ளார். (வ)

## மம்தாவின் நம்பிக்கையில்லா தீர்மானம் எதிரணிகளிடையே கருத்து வேறுபாடு

டில்லி, நவ.21

மத்திய அரசுக்கு எதிராக மம்தா கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் இடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. முதல் நாளே சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு விவகாரத்தை முன் வைத்து, மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா தீவிரமாக உள்ளார். இதற்காக அவர் பாரதீய ஜனதா உட்பட பல கட்சிகளின் ஆதரவைக் கோரியுள்ளார். மம்தாவை ஆதரிக்க முடியாது என்று மார்க்சிஸ்ட் கட்சி கூறினாலும், சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீட்டுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதேபோல் மத்திய அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு அளித்துவரும் சமாஜவாடிக் கட்சியும் மம்தாவை ஆதரிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளது. மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்வதற்கு 50 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆனால் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை கொண்டுள்ள திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர திட்டமிடுவதா என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. (வ)



டில்லியில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 95 ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. விழாவில் பங்கேற்க வந்த பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானியை வரவேற்கிறார் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி.

## இந்திய– சீன எல்லையில் பறக்கும் தட்டுகள்



இந்திய சீனா எல்லையை ஒட்டிய பகுதியில் கடந்த சில மாதங்களாக ரெண்னிஸ் பந்து அளவிலான பறக்கும் தட்டுகள் தென்படுகின்றன.

குறித்த பொருள் உலோகம் அல்லாத பொருளால் உருவாக்கப்பட்டுள்ளதால் இது குறித்து ராடாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த விவகாரம் குறித்து இரு நாடுகளின் உயர்மட்ட அலுவலக அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து ஆலோசிக்க உள்ளனர் என்று தகவல் தெரிவிக்கின்றது. பறக்கும் தட்டுகள் போன்ற பொருள்களைப் பற்றி விசாரிக்க மத்திய பாதுகாப்பு அமைச்சு மற்றும் மேம்பாட்டு அமைப்பு, இந்திய இராணுவம் ஆகியவை அளித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (வ)

# தாக்கரேக்கு சிவாஜி பூங்காவில் நினைவுச்சின்னம்

## அமைக்குமாறு மகாராஷ்டிரா அரசிடம் வலியுறுத்து

மும்பை, நவ.21

சிவசேனா தலைவர் பால் தாக்கரேக்கு அவரது இறுதிச் சடங்குகள் நடைபெற்ற சிவாஜி பூங்காவில் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று சிவசேனா மூத்த தலைவரும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதல் வருமான, மனோகர் ஜோஷி, மகாராஷ்டிரா மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

சிவசேனா தலைவர் பால் தாக்கரே, (வயது 86), உடல் நலக்குறைவால், 17 ஆம் திகதி காலமானார்.



அவரது இறுதிச் சடங்குகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. மும்பையில் மிகவும் பிரபலமான சிவாஜி பூங்காவில், அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

மகாராஷ்டிராவில், காங்கிரஸ் - தேசியவாத காங்., கூட்டணி ஆட்சி நடக்கும் நிலையில் மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான, சிவசேனா சார்பில், முக்கிய கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிவசேனா மூத்த தலைவரும், மகாராஷ்டிரா முன்னாள் முதல்வருமான, மனோகர் ஜோஷி, நேற்று முன்தினம் தெரிவித்ததாவது:-

மகாராஷ்டிரா மக்களின் அன்புக்குரிய, பால் தாக்கரே, நாட்டின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் தலைவர்களில் குறிப்பிடத் தக்கவர்.

அவரது இறுதிச் சடங்குகள் நடந்த சிவாஜி பூங்காவில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க, மகாராஷ்டிரா மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மத்தியதரைக் கடலுக்கு அவசரமாக விரைகின்றன அமெ. போர்க்கப்பல்கள்



இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் தீவிரமடைவதை அடுத்து

வொஷிங்டன், நவ. 21

அமெரிக்காவின் 3 போர்க் கப்பல்கள் மத்தியத்தரைக் கடலின் கிழக்குப் பகுதிக்கு, இஸ்ரேலை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையே மோதல் தீவிரமடைந்து வருகிறது. இதையடுத்தே அமெரிக்கப் போர்க் கப்பல்கள் மத்தியதரைக் கடலை நோக்கி விரைகின்றன.

இதுகுறித்து அமெரிக்கா தெரிவிக்கையில்:

"இஸ்ரேலில் உள்ள அமெரிக்கர்கள் அங்கிருந்து வெளியேற விரும்பினால், அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தக் கப்பல்கள் அனுப்பப்படுகின்றன. எந்தப் போர் நோக்குக்காகவும் அனுப்ப வில்லை." என்று பிரஸ்தாபித்துள்ளது.

2 ஆயிரத்து 500 கடற் படையினருடன் விர்ஜீனியா, நார்போல்க் செல்லவிருந்த அந்த கப்பல்கள் இங்கு திரும்பியுள்ளன. ஈரானில் பொலிஸ்டிக் வகை ஏவுகணை தாக்குதலை முறியடிப்பதற்காக இஸ்ரேல் கடற்கரையில் ஏற்கனவே அமெரிக்காவின் 4 போர்க் கப்பல்கள் நிறுத்தப் பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



## வீழ்ச்சியடையும் ஹோலண்டேயின் செல்வாக்கு

பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுவா ஹோலாண்டேயின் செல்வாக்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பொருளாதார பின்னடைவு மற்றும் வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை அவர் எதிர்கொண்டுள்ள நிலையில், இந்தக் கருத்து கணிப்பு முடிவு வெளியாகியுள்ளது.

ஹோலாண்டேயின் செயற்பாடு குறித்து திருப்தியடையும் மக்களின் வீதம் 41வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

எனினும் பொதுமக்களின் விமர்சனங்கள் தமது இலக்கை திசை திருப்பாது என பிரன்சுவா ஹோலண்டே இந்த வாரம் தெரிவித்திருந்தார்.

நிக்கோலாஸ் சார்கோஸிஸை தோற்கடித்து, 17 வருடங்களின் பின்னர் முதலாவது சோஷலிச கட்சி ஜனாதிபதியாக பிரன்சுவா ஹோலண்டே கடந்த மே மாதம் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

# குறிவைக்கப்படும் பலஸ்தீன மக்கள்

## ஏவுகணைகளால் உயிரிழப்பு நாளாந்தம் அதிகரிப்பு காயமடைந்த 850 பேரில் குழந்தைகள் 260



காஸாவின் நெரிசலான பகுதிகளைக் குறிவைத்து இஸ்ரேல் நேற்றுமுன்தினம் விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100ஐ எட்டுகிறது. 850 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 260 பேர் குழந்தைகளாவர்.

ஒரே குடும்பத்தில் 10 பேர் உயிரிழப்பு

காஸாவில் நேற்றுமுன்தினம் இரவு வீடொன்றின் மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுபற்றி கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேலிய இராணுவம், குறித்த வீட்டில் ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் தங்கியிருப்பதாகக் கருதியே அந்த வீட்டை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக கூறியது.

ஆனால் தாக்குதல் நடத்தப்பட்டபோது, குறித்த ஹமாஸ் அதிகாரி அங்கு தங்கியிருந்தாரா என்பது தமக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும் இஸ்ரேல் கூறியது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த தாக்குதல்களில் காஸாவில் 26 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அன்றைய கடைசி மணித்தியாலங்களில் கிட்டத்தட்ட 80இக்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக இஸ்ரேலிய படையினர் கூறுகின்றனர். ஹமாஸ் ஆயுததாரிகளும் காஸாவிலிருந்து இஸ்ரேலுக்குள் தொடர்ந்தும் ரொக்கெட் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.

எனினும் கடந்த சனிக்கிழமை காஸாவிலிருந்து ஒரு ரொக்கெட்டே ஏவப்பட்டுள்ளது. ஆனால் நேற்று முன்தினம் மீண்டும் காஸாவுக்குள்ளிருந்து ரொக்கெட் தாக்குதல்கள் தொடர்ந்ததாக இஸ்ரேலிய படையினர் கூறுகின்றனர்.

ஆறு நாள்களாகத் தொடரும் இந்த மோதல்களில் காஸாவில் 99 பேர், பெரும்பாலும் பொதுமக்கள், கொல்லப்பட்டுள்ளனர் என்று பலஸ்தீனியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலியர்கள் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## 'வருவார் என் கணவர்'

### இறந்த அவரின் உடலுடன் 3 வருடங்கள் காத்திருந்த பெண்

இறந்து போன தன் கணவர் அதிசயமாக ஒருநாள் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் கணவனின் உடலை கடந்த 3 வருடங்களாகப் பாது காத்து வந்திருக்கிறார் ஒரு பெண்.

இந்த விநோத சம்பவம் ரஷ்யாவின் யாரோஸ்லோவ்ல் பகுதியில் உள்ள செமிப்ராடோவோ கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

அங்குள்ள பெந்தகோஷ் சபையில் பணியாற்றிவரும் பெண் ஒருவரே, இறந்துபோன தனது கணவனின் உடலை கடந்த 3 வருடங்களாகப் பாது காத்து வந்துள்ளார்.

கைகள், தலையில்லாமல், பிளாஸ்ரிக் பையில் வைத்து பாதுகாக்கப்பட்டிருந்த அந்தமம்மி உடலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதுகுறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது,

5 குழந்தைகளுடன் தனித்து வாழ்ந்து வந்த அவள் கடந்த 2009ஆம் ஆண்டு இறந்த தனது கணவனின் உடலை மறைத்து வைத்து பாதுகாத்தமை தெரியவந்துள்ளது. வெளியே தெரியாதவாறு உடலைப் பாதுகாத்த அவர், இறந்த தனது கணவரை குழந்தைகளுடன் தினந்தோறும் பிரார்த்தனை செய்தும், உணவுபடைத்தும் வந்துள்ளார்.

தனது கணவர் ஒருநாள் அதிசயமாக திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் கணவரின் உடலைப் பத்திரப்படுத்தி வைத்திருந்ததாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

## இந்திரா காந்தி விருதுக்கு லைபீரிய ஜனாதிபதி தெரிவு



புதுடில்லி, நவ.21

இந்திரா காந்தி அமைதி விருதுக்கு, லைபீரியா ஜனாதிபதி எலன் ஜோன்சன் சிர்லீப் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமைதிக்காக பாடுபடுபவர்களுக்கு இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கி வருகிறது. இந்தாண்டுக்கான விருது பெறும் பிரமுகரை பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான சர்வதேச நடுவர் குழு தேர்வு செய்தது. லைபீரியா நாட்டின் ஜனாதிபதி எலன் ஜோன்சன் சிர்லீப், இந்திராகாந்தி அமைதி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

லைபீரியாவில் அமைதி திரும்பவும், ஜனநாயகம் மற்றும் வளர்ச்சி ஏற்படவும் சிர்லீப் 2006ஆம் ஆண்டிலிருந்து பாடுபட்டு வருகிறார். அங்கு சட்டம் ஒழுங்கை ஏற்படுத்தி பாதுகாப்பை மேம்படுத்தினார். லைபீரியா பெண்களுக்கு அவர் முன் மாதிரியாக விளங்கினார். இந்த சேவைகளுக்காகவே சிர்லீப், இந்திராகாந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ஆரம்பிக்கிறது கடும் குளிர்காலம் காப்பாற்றுங்கள் சிரிய மக்களை

### உதவிகள் வழங்குமாறு தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை



டமஸ்கஸ், நவ. 21

சிரிய உள்நாட்டுப் போரால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் சிரிய மக்களை கடும் உறைபனியில் இருந்து காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிரியாவில், அரச ஆதரவுப் படைகளுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடக்கும் மோதல்களால் மக்கள் பக்கத்து நாடுகளான துருக்கி, லெபனான் மற்றும் ஜோர்டன் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்படுகின்றனர். அங்கு அவர்களுக்கான தங்குமிடமும் உடைகளும் போதுமானதாக இல்லை.

இந்தநிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது மிகக் கடும் குளிர்காலம் நெருங்கி வருகிறது. இதிலிருந்து அவர்களை காக்க போதுமான உதவிகள் தேவை.

குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் என தங்கியுள்ளவர்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது என தொண்டு நிறுவனத்தினர் எச்சரித்துள்ளனர்.

''இதுவரை நன்கு இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த வருட இறுதிக்குள் இந்த எண்ணிக்கை ஏழு இலட்சமாக அதிகரிக்கும்''- என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

## 10 ஆண்டுகளுக்கு பின்னர் கொலம்பியாவில் பேச்சுகள்

10 ஆண்டுகளுக்குப் பின்னர் கொலம்பிய அரசுக்கும், அங்குள்ள கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலம்பியாவில் மார்க்சிஸ்ட் விடுதலை ஆயுத இயக்கம் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த 50 ஆண்டுகளாக நீடிக்கும் இந்தத் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து குடிபெயர்ந்து வருகிறார்கள்.

முன்னர் மூன்று முறை சமாதான பேச்சுகள் நடைபெற்றும் பயனளிக்கவில்லை. இந்த நிலையில் கொலம்பியா ஜனாதிபதி ஜுவான் மானுவேல் சந்தோஸ் முயற்சியால் 10 ஆண்டுகளுக்கு பிறகு நேற்றுமுன்தினம் ஹவானாவில் இரு தரப்பினர் இடையே சமரச பேச்சுக்கள் தொடங்கியது.

## வெடிகுண்டாக வெடித்தார் பெண்

### பாகிஸ்தானில் 4 பேர் படுகாயம்



நேற்றுமுன்தினம் பேரணி ஒன்றை நடத்தினார்கள். அதில் பங்கேற்க ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவர் குவாசி

இஸ்லாமாபாத், நவ. 21

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. பெண் ஒருவர் தன் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கவைத்தார். இதன் போது 4 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானில் வடமேற்கு பகுதியான கைபர்-பக்துன் கவா மாகாணத்தின் மலைப்பகுதி தலிபான் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பினர் நேற்றுமுன்தினம் பேரணி ஒன்றை நடத்தினார்கள். அதில் பங்கேற்க ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவர் குவாசி உசேன் அகமது தனது பாதுகாவலர்களுடன் காரில் சென்றார்.

ஹலிம்ஷாஸ் என்ற இடத்தில் கார் சென்ற போது ஒரு பெண் திடீரென காரின் குறுக்கே பாய்ந்து, தன் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தார். அதற்குள் உசேன் அகமதுவின் கார் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டதால் அவர் காயமின்றி உயிர் தப்பினார்.

இந்தத் தாக்குதலில் 4 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் 2 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

## தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை பாக். தீவிரப்படுத்த வேண்டும்

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையை பாகிஸ்தான் தீவிரப்படுத்த வேண்டும் என்று அமெரிக்கதூதர்நான்சி பொவெல் வலியுறுத்தி உள்ளார்.

'' தீவிரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது போதாது. நடவடிக்கையை தீவிரப்படுத்துவது அவசியம். பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளால் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் மட்டும் ஆபத்து இல்லை. பாகிஸ்தானுக்கும் ஆபத்துதான் '' - என்று நான்சி பொவெல் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சார்லி சப்ளினின் பொருள்கள் ஏலம்



மறைந்த பிரபல ஹொலிவூட் நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளினின் தொப்பி மற்றும் கைத்தடி 62,500 டொலர்களுக்கு ஏலம் விடப்பட்டன. அமெரிக்க முன்னணி ஏல நிறுவனமான பான் ஹாம்ஸ் நிறுவனம் இந்த ஏலத்தை நடத்தியது.

ஏலத்துக்கு விடப்பட்ட 81 சென்ரி மீற்றர் நீளமுள்ள மூங்கில் கைத்தடி மற்றும் தொப்பி என்பன புகழ் பெற்ற ''லிட்டில் டிராம்ப்' கதாபாத்திரத்தில் சார்லி சப்ளின் பயன்படுத்தியவை.

இவை, எதிர்பார்த்ததை விட 62,500 டொலர்களுக்கு ஏலம் போனதாக அந்த நிறுவனம் தெரிவித்தது. இது தவிர, நடிகை மர்லின் மன்றோவின் புகைப்படங் களின் தொகுப்பு 11 லட்சத்து 47 ஆயிரத்து 500 டொலருக்கு ஏலம் போனது.

## தாய்லாந்துப் பிரதமரிடம் அசடு வழிந்தாராம் ஒபாமா



அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற பிறகு பாரக் ஒபாமா தாய்லாந்து, மியன்மார், கம்போடியா ஆகிய மூன்று ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றார்.

அதன்படி தனி விமானம் மூலம் தாய்லாந்து சென்ற அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யாதேஜை சந்தித்தார்.

பின்னர் பாங்கொக்கில் உள்ள அரசு மாளிகையில் அவருக்கு விருந்தளிக்கப்பட்டது. விருந்தின்போது ஒபாமா தாய்லாந்து பிரதமரிடம் கலகலப்பாக பேசி சிரித்துள்ளார். இதையடுத்து அவர் பிரதமர் இங்லக்கிடம் அசடு வழிந்ததாக ஊடகங்கள் நகைச் சுவையாக செய்தி வெளியிட்டுள்ளன. மியன்மாரில் ஜனநாயகம் மலர தாய்லாந்து அளிக்கும் ஆதரவை ஒபாமா பாராட்டினார்.

## மலலாவுக்கு உயர் விருது



பாகிஸ்தானிய பெண் மலாலாவுக்கு அந்நாடு வீர தீரச் செயலுக்கான விருதை வழங்கியுள்ளது.

பெண்களின் கல்விக்காக போராடியதற்காக தலிபான் பயங்கரவாதிகளால் சுடப்பட்டு லண்டனில் சிகிச்சை பெற்று வருகிறார் மலாலா.

இந்தநிலையில் நாட்டின் உயரிய விருதான வீர தீரச்செயலுக்கான விருதை உலக சமாதானம் மற்றும் அமைதிக்கான நிறுவனத்தின் தலைவர் பிரின்ஸ் அலி கான் வழங்கினார்.

இந்த விருதை மலாலா சார்பில் பிரிட்டனுக்கான பாகிஸ்தான் துணைத்தூதர் கர்தேசி பெற்றுக் கொண்டார்

## விழுந்து நொருங்கியது விமானம்

### கனடாவில் விமானி உட்பட 9 பேர் சாவு



ரொரன்றோ, நவ.21

கனடாவில் வடக்கு மனிற்றோபா பகுதியில் நடந்த ஒரு விமான விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். விமானம் செலுத்தும் தொழில்புரியும் குடும்பத்தைச் சேர்ந்த விமானி ஒருவர் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர்.

வடக்கு மனிற்றோபா என்ற இடத்திலேயே விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தை மார்க் கோகல் என்ற 40 வயது விமானி ஓட்டிச் சென்றார். இந்த விமானம் அவருடைய தந்தையாருக்குச் சொந்தமானது. விமான நிலையத்திலிருந்து கிளம்பி 10 கிலோ மீற்றர் சென்ற சமயம் இந்த விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து குறித்து தகவல் தெரிந்தவுடன் மீட்புப் படையினர் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## சீட்டு விளையாடிய பொலிஸாரின் 'சீட்டு'க் கிழிந்தது

பிரிட்டனில் பணியை கவனிக்காமல் சூதாட்டம் ஆடிய ஏழு பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பிரிட்டனின் நோட்டிங்காம் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த ஏழு பொலிஸார் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை கவனிக்காமல் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வழக்கமான ரோந்து பணிக்கு செல்லாமல் அதிக நேரம் பணி புரிந்ததாகக் கூறி கணக்கும் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதியில் உள்ளவர்கள் கொடுத்த முறைப்பாட்டின்பேரில், பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேர் மீது நடவடிக்கை எடுக் கப்பட்டது. துறை ரீதியான விசாரணையில் இவர்கள் சீட்டாடிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. இந்த ஏழு பேரும் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

## காதல் திருமணம் செய்த காதலன் எரித்துக் கொலை

### பாகிஸ்தானில் கொடூரம்

பாகிஸ்தானில் காதலித்து நீதிமன்ற அனுமதியுடன் திருமணம் செய்த காதலனை பெண் வீட்டு உறவுக்காரர்கள் தீ வைத்து எரித்துள்ளனர்.

பாகிஸ்தானின் முசராபாத்தில் உள்ள புறநகர் பகுதியைச் சேர்ந்தவர் மொகமது மஜீத். இவர் கராச்சியைச் சேர்ந்த சமினா பீபி என்ற பெண்ணை அவளது பெற்றோரின் எதிர்ப்பை மீறி நீதிமன்ற அனுமதியுடன் மூன்று மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்தார்.

இதனால் பெண்ணின் குடும்பத்தார் மஜீத்தின் மீது கடத்தல் வழக்கு பதிவு செய்தனர். பொலிஸார் அவரது தந்தை மற்றும் சகோதரனையும் கைது செய்து விசாரணை செய்தனர்.

இந்தநிலையில் பெண்ணின் சகோதரர் அப்துல் சட்டார் மற்றும் மூன்று நபர்கள் சேர்ந்து மஜீத்தை பெற்றோல் ஊற்றி எரித்துள்ளனர். மஜீத் கடும் தீக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் மருத்துவ மனை யில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்து விட்டார். எரிந்தவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.


# காணவில்லை

## பரமேஸ்வரன் துஸ்யந்தினி



பள்ளிக்குடா, பூநகரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**பரமேஸ்வரன் துஸ்யந்தினி**
என்பவரை 25.08.2012 முதல் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 817 6244

(25836)(5-6-7)



ஓராண்டு போனதே! காணவில்லையே எம் கடவுளை
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 . 06 . 1945
விண்ணில் 02 . 12 . 2011

## அமரர் முத்தையா மகேஸ்வரன்

அணையாத தீபமே!
எமை வாழவைத்த எம் அருமை அப்பாவே!
அப்பா நீங்கள் எமைப் பாதி வழிதனில்
பரிதவிக்க விட்டு எங்கு சென்றீரோ?
ஓர் ஆண்டல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு மறையாது
கனவின்றி நனவினில் ஓடோடி வாராயோ!
வழி மீது விழி வைத்துக்
காத்து நாமிருக்கிறோம்.

ஏழாலை தெற்கு,
ஏழாலை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(25837) (45.6.7)



இதயம் மறவா
7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசரத்தினம் பாக்கியம்**
திதி: பூர்வபட்ச அட்டமி
(21.11.2012 புதன்கிழமை)

மலர்வு 07.08.1932
உதிர்வு 08.12.2005

அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும் பொக்கிஷமாய் விளங்கிய எங்கள் அம்மாவே அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஏழாண்டு ஆகினாலும் அம்மா உங்கள் நினைவு என்றென்றும் எமது நெஞ்சைவிட்டு அகலாது அம்மா ஏழாண்டுகள் என்ன இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எம் மனதை விட்டு அகலாது உங்கள் நினைவுகள் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
மல்லர்வாசம்
மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
இல. 43 ஏ. சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள்; மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(25626)(5.6.7)



உங்கள் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



# மரண அறிவித்தல்

## திருமதி ரோகிணி கோபாலகிருஷ்ணன்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் மூணாமலை, மானிப்பாயில் வசித்து வந்தவரும் தற்போது இல.34,கதிரேசு வீதி, வைரவ புளியங்குளம், வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய ரோகிணி கோபாலகிருஷ்ணன் 19.11.2012 திங்கட்கிழமை இந்தியாவில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான குமாரசாமி-தர்மாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- மாணிக்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் மற்றும் கல்வளை சேயோன், புஸ்பராணி,விஜயலக்ஸ்மி, காலஞ்சென்றவர்களான சற்குணசேயோன்,ஜெய குணசேயோன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, தர்மகிருஸ்ணன், நந்தபாலன், யமுனாதேவி, மகாலக்ஸ்மி, காலஞ் சென்றவர்களான தில்லைநாதன்,கமலேஸ்வரன் மற்றும் பாலசௌந்தரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் ஈசன், முகுந்தன், அகிலன்,டினேசன், தர்சிகா, பிரஷங்கர், லோஜசங்கர், ஜெனசன், லியோசன், ஜெகதா, துஷிதா, மிதுன் ஆகியோரின் அன்பு பெரியதாயும், துவாரகன், முரளீரகன்,சசிகலா, பாலரஞ்சினி, சிவமணி, சாம்பவி, சத்தியபாமா, மகேஸ்வரி, பத்மகுமார்,தவக்குமார், கிருஷ்ண குமார், சுரேஸ்குமார், இந்திரகுமார், சைந்தவி, சிவாணி, நிமிஜாணி ஆகியோரின் அன்பு மாமியும், அபிநயா, ரிகாஷன், திசாதனா,சஞ்சனா, டக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.34,கதிரேசு வீதி,வவுனியா.
தொ.பே. 024 222 1907.


(24320)(5-7-25) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(35)

இரண்டு டென்னிஸ் சம்பியன்கள் போட்டியிடுகிறார்கள். இருவருமே வெற்றி பெற முடியுமா? முடியாது.



ஒருவர் வெற்றி பெற்றால் மற்றொருவர் தோல்வியடைவது உறுதி. ஆனால் ஒருவருக்கே வெற்றிகள் தொடர்வதில்லை. ஒரு தடவை தோல்வியடைந்தவர் மீண்டும் போட்டியிடாமல் விலகிவிடுவதும் இல்லை.

இந்திய கிரிக்கெட் அணியினர் சுமார் இருபது டெஸ்ட் போட்டிகளில் வெற்றியைக் காண முடியவில்லை. இங்கிலாந்தில் ஆடப்போன போது, "இந்தியர்களைத் தோற்கடிக்க ஐந்து நாள் போட்டி எதற்கு? மூன்று நாள்கள் போதும்" என்றார் திமிர் பிடித்த ஆங்கிலேயர் ஒருவர்.

நடந்தது என்ன?

இந்திய அணியினர் கபில்தேவ் தலைமையில் தொடர்ந்து வெற்றிகளைக் கண்டு, இங்கிலாந்து அணியின் படுதோல்வியை உலகறியச் செய்தார்கள். தோல்வியடைந்தவர்கள், மீண்டும் வெற்றியைக் காண எப்படியாவது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு விஞ்ஞானி இரவு பகலாகச் சில ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் நள்ளிரவில் அவர் வெற்றியுடன் சிரித்துக் கொண்டிருந்தார். அவருடைய உதவியாளர் விஞ்ஞானியைப் பார்த்து, 'வெற்றி கிடைத்துவிட்டதா? புதிதாக எதையாவது கண்டு பிடித்து வீட்டீர்களா?' என்றார்.

விஞ்ஞானி சிரித்துக்கொண்டே, 'நான் செய்த முயற்சிகள் படுதோல்வியடைந்தன. ஒன்றுமே கண்டு பிடிக்க முடியவில்லை. ஏன் சிரிக்கிறேன் தெரியுமா? மறுபடியும் அந்த முயற்சியை முதலிலிருந்து தொடங்கப் போகிறேன். அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி' என்றாரே பார்க்கலாம்!

அந்த விஞ்ஞானி வேறு யாரும் இல்லை. புகழ்பெற்ற தோமஸ் அல்வா எடிஸன் தான்.

தோல்வியை ஒப்புக்கொள்ளாமல், எதையும் விடாப் பிடியுடன் செய்ய துணிவு மிகவும் தேவை. ஒரு தடவை மட்டுமல்ல, இரண்டு மூன்று தடவைகள் தோல்வியடைந்தாலும், மீண்டும் மீண்டும் முதலிலிருந்து முயற்சி செய்ய வேண்டும்.

உலகத்தில் இருக்கும் மாபெரும் விஞ்ஞானிகளும் அரசியல் தலைவர்களும், பொறியியலாளர்களும், பத்திரிகையாளர்களும், இலக்கியவாதிகளும், சினிமா நட்சத்திரங்களும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்து முன்னுக்கு வந்தவர்களே!

"எதையும் இரண்டு தடவைகள் முயற்சி செய்" என்பது மேல் நாட்டுப் பழமொழி? எதையும் இரண்டு முறை என்ன, வெற்றி கிட்டும் வரை முயற்சி செய்வோமே!

கடிகாரங்களை விற்கும் விற்பனையாளர் ஒருவர் விலை மிகுந்த கடிகாரங்களை விற்க ஒரு நிறுவனத்தின் முகாமையாளரின் அறைக்குள் சென்றார்.

"சேர், நான் ஒரு சேல்ஸ்மேன், அயோத்யா அண்ட் நிறுவனத்திலிருந்து வருகிறேன். விலை மிகுந்த கைக்கடிகாரங்கள் என்னிடம் உள்ளன. கொஞ்சம் பாருங்கள்".

"யார் உன்னை உள்ளே விட்டது?"

முகாமையாளர் எரிச்சலுடன் கேட்டார்.

"என்னை யாரும் விடவில்லை. யாரும் தடுக்கவும் இல்லை. எங்கள் கடிகாரங்களை ஒரு தடவை பாருங்கள்" என்று சொல்லிக் கைப் பெட்டியை மேசை மீது வைத்தான்.

"வெளியே போ. எனக்கு வேலை இருக்கிறது. கடிகாரம் வேண்டாம்." என்றார் முகாமையாளர். விற்பனையாளர் அமைதியுடன் பெட்டியைத் திறந்தார். அழகிய, விலை மிகுந்த கடிகாரங்களை எடுத்து மேசை மீது வரிசையாக வைத்தார்.

"பாருங்கள் சேர்! எல்லாம் இந்தியாவில் செய்யப்பட்டவை. மேல் நாட்டுக் கடிகாரங்களை விடக் கவர்ச்சியானவை. விலை மலிவானவை. மூன்று ஆண்டுகள் உத்தரவாதம் தருகிறோம்." என்றான். "கடிகாரம் வேண்டாம். நான் பார்க்க விரும்பவில்லை. உடனே இவைகளை எடு." என்றார் முகாமையாளர்.

'இதோ இந்தக் கடிகாரம் உங்கள் கைக்கு மிக அழகாக இருக்கும். கட்டித்தான் பாருங்களேன்' என்றான். முகாமையாளருக்கு கோபம் வந்து விட்டது. ஆத்திரத்துடன் இரண்டு கைகளாலும் கடிகாரங்களைக் கீழே தள்ளினார். பெட்டியைத் தூக்கி வீசி எறிந்தார். 'கெட் அவுட்' என்று கத்தினார்.

விற்பனையாளர் கொஞ்சமும் கலங்கவில்லை கடிகாரங்களைப் பொறுக்கினார். பெட்டியை எடுத்தார். பெட்டியில் அவைகளை அழகாக அடுக்கி விட்டு, மீண்டும் மேசையருகே வந்தான். "சேர், விளையாடினது போதும். உண்மையாக இந்தத் தடவை எங்கள் கடிகாரங்களைப் பாருங்கள். அவைகள் கீழே விழுந்தாலும் ஓடுகின்றன" என்று சொல்லி மீண்டும் மேசையில் அடுக்கினார்.

தமிழ்வாணன்

(தொடரும்)

# பொருளாதாரத்தைத் தளரவிடாது பேணுவதற்கு சேமிப்பை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்

## வங்கியின் வடமாகாண முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

பொதுமக்கள் தமது குடும்பப் பொருளாதாரத்தைத் தளரவிடாது பேணுவதற்கு சேமிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு வங்கிகளைச் சாதகமாகப் பயன்படுத்தி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் மெகா வாசி காலாண்டு அதிர்ஷ்டத்துக்கான சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மாணிக்கசிங்கி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வங்கிகள் மக்களின் பொருளாதாரத்துடன் மிகவும் தொடர்புடையவை. இதனால் கிடைக்கும் நன்மைகள் மக்களுக்கு சாதகமானதாகவே அமையும். யாழ்ப்பாணத்தில் அதிகளவான வங்கிகள் சேவைகளை வழங்குகின்ற போதும், குறிப்பாக இலங்கை வங்கி நீண்டகால சேவையில் இருப்பதால் அதிகளவான வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதுடன் மக்களின் தற்கால தேவைக்கேற்ப சேவைகளை வழங்கி வருகின்றன.

இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். வங்கிகளைப் பயன்தரக்கூடிய வகையில் குறிப்பாக பொருளாதாரத்தை இலக்காக வைத்து பயன்படுத்தலாம்.

பொதுமக்கள் மத்தியில் தற்போது சேமிப்புப் பழக்கம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கு வாழ்க்கைச் செலவினம் தடையாக இருந்தாலும் சிறுகச் சிறுகச் சேமிப்பது எமது முதுமைக்கும் கைகொடுக்கும். ஆனால் சேமிப்புப் பழக்கத்தை குறைத்து கடனாளிகளாக எம்மவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

போர்ச்சூழல் காலத்தில் வங்கிகளில் சேமிப்பாக இருந்த பணம் அதிகமானவர்களுக்கு கைகொடுத்தது. இதனால் பசி, பட்டினி இல்லாமல் தப்பிப் பிழைத்தார்கள். எனவே கிடைக்கக்கூடிய வருமானத்தில் சிறுதொகையை நம்பிக்கையான வங்கிகளில் சேமித்து எதிர்காலத்தை வளமானதாக மாற்றலாம்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டு வர வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.-என்றார். (எ-14)

# கட்டுரை, சித்திரப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, நவ. 21

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூல் நிலையம் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை- சித்திரப் போட்டிகளை நடத்தியுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

கட்டுரைப் போட்டி - கீழ்ப்பிரிவு

ஆ.பாலமதுஜா - தரம் -5, தி.கிருஷாந், மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி., வி.ரதன் தரம் - 8, புலோலி மெ.மி.த.க.பாடசாலை.

மேற்பிரிவு

சி.கிருஷிகேசன், வி.புருசோத்தமன், சா.பிரதீபன் -தரம் -10, புற்றளை ம.வி.

சித்திரப் போட்டி - கீழ்ப்பிரிவு

சி.குகந்தன் - தரம் -7 தம்பசிட்டி மெ.மி. த.க.பா., தி.கிருஷாந் - தரம்-4, த.அபிராமி - தரம்-5 மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.

மத்திய பிரிவு

ரி.குகஜெனனன், வி.சுதர்சன் - தரம் -10, ய. கொன்சிகன் தரம் -8 புற்றளை ம.வி.

மேற்பிரிவு

சி.சுதாகரன், கு.விமலதாசன் ஜி.சீ.ஈ. உயர்தரம், உ.தனேஸ் - தரம் -11 புற்றளை ம.வி.

வாசகர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

த.விமல்சினி, யோ.விதுபாகரன், சூ.விமலேசன். (எ-8)



கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற தனிமனித ஆளுமை விருத்தி தொடர்பான செயலமர்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் உரையாற்றுவதையும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வி.ஞானகாந்தன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் பெ.கனகசபாபதி, நல்லூர் பிரதேச சபை உபதலைவர் திருமதி ர.கோமதி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (எ-14)

# ஒவ்வொருவரிடமும் மறைந்துள்ளன தனிமனித ஆளுமைப் பண்புகள்

## தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், நவ. 21

தனிமனித ஆளுமைப் பண்புகள் ஒவ்வொருவரிடமும் மறைந்து காணப்படுகின்றன. ஆனால் அவற்றை வெளிப்படுத்துவதற்கான துணிவும், அதற்கான சந்தர்ப்பங்களும் கிடைக்காத காரணத்தால் திறனுடையவர்களும் ஆளுமையற்றவர்களாக உருவாகிறார்கள் என்று நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தெரிவித்தார்.

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'தனி மனித ஆளுமை விருத்தி' எனும் தலைப்பிலான ஆரம்பப் பயிற்சிப் பட்டறை அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே சாந்தசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களைக் கைநழுவ விடுகிறார்கள். கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி அதனை வெற்றி கொள்ளும் துணிவு ஏற்படுவதில்லை. பயம், வெட்கம், மற்றவர்களின் பார்வை எவ்வாறு இருக்கும் என நினைத்து விலகிப் போகிறார்கள். இதன் காரணமாக தனி மனித ஆளுமை முடக்கப்பட்டுவிடுகிறது.

குறிப்பாக இளம் சமுதாயத்தினர் மத்தியில் தனிமனித ஆளுமை கட்டாயம் இருத்தல் வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் வெற்றி பெறக் கூடியவர்களாக மாறமுடியும் - என்றார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் மாணவர்கள் மற்றும் தொழில்சார் உத்தியோகத்தர்கள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதுடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் பெ.கனகசபாபதிப்பிள்ளை, நல்லூர் பிரதேச சபை உபதலைவர் திருமதி ர.கோமதி ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-14)

# கதை சொல்லும் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, நவ. 21

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே ஆங்கில தினப் போட்டியில் கதை சொல்லும் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

தரம் -6

ந. கேணுகா - அராலி சரஸ்வதி ம.வி, ஜெ.கனிஸ்ரா- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பு.டிலக்சனா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

தரம் -7

ம.மதுசன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, ம.குசாரா - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, த.ரேனுஜன் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

தரம் -8

கோ.மாதங்கி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மோ.லக்சிகா - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ர.தர்சிகா -மானிப்பாய் மகளிர் கல்லூரி, பு.கோபிகா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

தரம் -9

த.கேசிதா - உடுவில் மகளிர் கல்லூரி, நே.நிவேதா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கா.காமி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி. (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222

**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (NB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலுசந்தி, அல்வாய்: 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி: 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர்: 0779598917, 'அன்புரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார்: 023 222 3311

## எங்கள் ஜனாதிபதி பரம ஏழை தான்

உருகுவே நாட்டைச் சேர்ந்த 77 வயதான ஜோஸ் முஜிகாவின் சொத்தின் மொத்த மதிப்பு 1800 டொலர்கள் [2 இலட்சத்து 30 ஆயிரத்து 400 ரூபா] தான். தினமும் தனது பழைமையான வீட்டின் பின்புறமாகவுள்ள பண்ணையில் நாலைந்து மணித்தியாலங்களாவது வியர்வை சிந்த உழைப்பார். காலையில் தனியாளாக தனது பழைய காரில் சந்தைக்குப் புறப்படும் ஜோஸ் முஜிகா அங்கு தனது விவசாய விளைபொருள்களை விற்றுவிட்டு, தனக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்புவார். அதன் பின்னர் அலுவலகத்துக்குச் சென்றால் இரவு வரை தலைநிமிராது பணிகளில் மூழ்கிவிடுவார்.

எங்கேயோ இருக்கும் உருகுவே நாட்டு 'பெரிசு' ஒன்றின் நாளாந்த வாழ்க்கை அட்டவணை இங்கு எதற்கு என்ற நினைப்பு பலருக்கு வரக்கூடும். அங்கே தான் இருக்கிறது விடயம். இந்த ஜோஸ் முஜிகா வேறுயாருமல்ல, உருகுவே நாட்டின் சர்வவல்லமை படைத்த ஜனாதிபதியே தான். உலகின் மிகவும் ஏழ்மையான-எளிமையான ஜனாதிபதி என்று ஜோஸ் முஜிகா வர்ணிக்கப்படுகிறார். உருகுவே நாட்டு மக்களுக்காக பலமுறை சிறைவாசம் அனுபவித்த ஜோஸ் முஜிகா, எப்போதும் எளிமையையே விரும்புகிறார். தன்னுடைய பாதுகாப்புக்குக் கூட இரு பொலிஸாரை மாத்திரமே நியமித்துள்ளார். அவர்கள் கூட அலுவலகத்தோடு தமது பாதுகாப்புப் பணியை மட்டுப்படுத்தி கொள்ளவேண்டும் என்பது ஜோஸ் முஜிகாவின் கட்டளை.

சராசரி நாட்டு மக்களில் ஒருவராக எளிமையுடன் வலம் வரும் ஜோஸ் முஜிகாவை அந்த நாட்டு மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். தன்னுடைய மாத வருமானத்தில் 90 வீதத்தை பொதுமக்களின் நலன்புரி நிதிக்காக வழங்கிவிடுகிறார். 'நான் ஒருபோதும் ஏழையல்ல. லட்சக்கணக்கான மக்களின் அன்பென்ற மாபெரும் சொத்தைக் கொண்டுள்ள உலகின் மிகப்பெரும் கோடீஸ்வரர். எப்போதும் மகிழ்ச்சியைத் தொலைத்துவிட்டு பணம் பணம் என்று சொகுசு வாழ்க்கைக்காக ஓடிக்கொண்டிருப்பவர்கள் தான் உண்மையில் ஏழைகள்'' என்று சிரித்தபடி சொல்கிறார் ஜோஸ் முஜிகா .

ஜோஸ் முஜிகாவைப் பற்றி விவரிக்கையில் ஏனோ 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் வரவு -செலவுத் திட்டம் கண்முன் தோன்றுகின்றது. அதிலும் இலங்கை ஜனாதிபதியின் வருடாந்த செலவினமாக 750 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் பரப்பளவில் இலங்கை போன்று மூன்று மடங்கு பெரியது உருகுவே. அத்துடன் உருகுவேயின் சனத்தொகை 3 கோடி 4 இலட்சத்து 63 ஆயிரம் பேர். இலங்கையின் சனத்தொகை 2 கோடி 2 இலட்சத்து 77 ஆயிரம். இவ்வாறு இலங்கையை விட பரப்பளவு, சனத்தொகை என்பவற்றில் பெரியளவான உருகுவே நாட்டு ஜனாதிபதியின் வருடாந்த சராசரிச் செலவினம் வெறும் பத்து இலட்சம் மாத்திரமே. ஆனால் குட்டி நாடான இலங்கை ஜனாதிபதிக்கு வருடச் செலவினம் 750கோடிகள்.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் சென்றுகொண்டிருக்கும் தருணத்தில் கூட தனக்கான செலவினத்துக்காக அதி உச்சத் தொகையை ஒதுக்கியுள்ளார் இலங்கை ஜனாதிபதி. இதனால் தான் ''விலைவாசியோடு போட்டி போட முடியாமல், வாழ்வில் துவண்டு கிடக்கும் அரச ஊழியர்களுக்கு வெறும் 1500 ரூபாவை உயர்த்தி விட்டு தனது தனிப்பட்ட செலவுக்காக 750 கோடி ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கியது நியாயமா?'' என்று எதிர்க்கட்சிகள் கேள்வி மேல் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டன.

ஆடம்பர வாழ்க்கைக்காக அதி உச்ச பெறுமதியை ஒதுக்கிய இலங்கை ஜனாதிபதி இனிவருங்காலங்களில் ஆடிக்கொருமுறை, அமாவாசைக்கு ஒருமுறை சாரம் கட்டிக்கொண்டு, ஏராளமான பாதுகாப்பு வீரர்கள் சகிதம் மீன்சந்தைக்கு செல்லக்கூடும். தெருவோர கடையொன்றில் குந்தியிருந்து அன்னாசித் துண்டத்தை சுவைக்கக்கூடும். காலிமுகத்திடலில் அரைக்காற்சட்டையோடு நடைப்பயிற்சி செய்யக்கூடும். இவையெல்லாம் 'நான் எப்போதும் எளிமையானவன்' என்று வலிந்து காட்டும் நாடகங்களே.

முகத்தின் உண்மைத் தன்மையை மறைக்கப் பூசும் அரிதாரங்கள் நிரந்தரமானவையல்ல. அவற்றின் ஆயுள் சில மணித்தியாலங்களே. மக்களுக்கு அரிதாரப் பூச்சுக்கும் அழிவில்லா உண்மைக்கும் இடையிலான வித்தியாசம் நன்கு தெரியும்.

ஜோஸ் முஜிகா என்றைக்குமே பொருளாதார ரீதியில் ஏழைதான். ஆனால் முதல்வன் படத்தில் வரும் அர்ஜுன் போல, இலங்கை ஜனாதிபதியோ ஒரு நாள் ஏழை. அந்த ஏழையின் நாளாந்தச் செலவு வெறும் 2 இலட்சம் மட்டும் தான். ஐயோ பாவம்! எங்கள் ஜனாதிபதி பரம ஏழைதான்.

# வலைக் கிழிசல்களில் வழிகின்ற தேசியம்

■ செந்தூரி

நின்றறுக்கும் தெய்வங்கள் தமிழனின் அழுகுரலுக்கு செவிசாய்க்கத் தொடங்கியுள்ளன. போன்றொரு பிரேமைகள் கரந்த வாரத்தின் ''வயிற்றறுக்கும் தொண்டைக்குழியில்'' உருவாகிலாமல் உருண்டு திரிந்தது. வாய்க்கால்களின் மரண வெளியில், வியாபித்துப் பெருகி விஸ்வரூபித்து, பிரபஞ்சக் கறுப்பினுள் ஒற்றைப் புள்ளியாய் அடங்கிப்போன, ஆதி இனமொன்றின் சோகம், மீண்டுமொரு முறை உலகின் விழித்திரையின் மேல் விழுந்து உறுத்துகின்றது. சர்வதேசங்களின் அமைதிக் காவலனான ஐக்கிய நாடுகள் தன்னைத் தானே கேள்விமெழுப்புகின்ற சுயவிசாரணைகளைச் சுற்றியதாக முள்ளிவாய்க்கால் படுகொலைகளை பேசத் தொடங்கிய அதே சம இரவில், வைத்தியசாலை வீதியில் அடுத்த நாள் முன்னிரவு வரை ''துப்பாக்கி''யின் விசேட காட்சிக்காக, 'கற்பூரம்', 'சிதறுதேங்காய்', 'அபிஷேகப்பால்', 'காவடிச்செண்டு', 'கரகச்செம்படன்' ஆகியக் கூத்தாடிய வலைத்தள நண்பனொருவனின் முகவேட்டுப் பதிவை நீங்களும் ஏன் படிக்கக் கூடாது?.....

''பேக்கரிக்கு முன்னால் கியூவில் நிண்டு, பாண் வாங்கிறதுக்கு பல மணித்தியாலம் காத்திருந்து, ஏ.ரி.எம் முன்னுக்கு தவம் கிடந்த எங்களின் வலி எங்களுக்கே! யாழ்ப்பாணத்தானை ஒரு படம் பார்க்க விடமாட்டீங்களோ நிம்மதியாய்? பிணங்களை வைத்து பிடுங்கித் தின்பதை எப்ப நிறுத்துவீர்கள்?''

இதுவொரு இருபத்தியாறு வயதுக்கு சற்று அண்மையான ''யாழ்ப்பாணத்தானின்'' வாக்குமூலம். ''கூட்டவுட்டுகளில் ஏறி நின்று ஊற்றும் பாலை கொடுத்தால் யாழ்ப்பாணத்தில் பசியோடு உறங்குபவர்களை, அடியோடு இல்லாமல் செய்வீர்களா?'' என்பதான எதிர் விதண்டாவாதத்துடன், தம் அடாவடிகளை நியாயப்படுத்தி வசனம் பேசும் பலர் இணையப் பக்கங்களில் இருக்கின்றார்கள். வயது பேதமின்றி என்பது எவருக்குமே ஆச்சரியமில்லை! மாவீரர்களை நினைவேந்துகின்ற மாவீரர் வாரம், வருகின்ற கார்த்திகை மாதத்தில், கனடாவில் நடத்தப்பட இருந்த இசைஞானி இளையராஜாவின் தனியிசை நிகழ்வுக்கான முதற் பதினையாயிரம் நுழைவுச் சீட்டுக்களில் பாதிக்கு மேல் வாங்கிய பெருமையை தாங்கியவர்கள் ஈழத்தமிழர்கள். மாவீரர் மாதத்தில் வேண்டாமே என்கின்ற விவாதங்களின் இறுதியில் பலத்த எதிர்ப்புக்களின் பின் நிகழ்வு தள்ளிவைக்கப்பட்டதைத் தாங்காமல், ஒரு நல்ல தமிழன் இணையத்தில் எழுதி வைத்தது இப்படி!.....

''மாவீரர் வாரம் கேள்விப்பட்டிருக்கின்றோம், அது என்ன மாவீரர் மாதம்?''

சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றது சோகம். ''மணித்தியால இன்பங்களுக்காய்'' எம் இளைஞர்கள் மறுதலித்துப் பேசுகின்ற விடயங்களின் வயது 'வருடங்களில்' இருப்பதை ஏற்றுக்கொள்ள மனதளவிலேனும் அவர்களால் முடியாமல் இருப்பதை எப்படிச் சீரணிக்க? இலகுபடுத்திச் சொல்வதானால், 1989 இல் தொடங்கப்பட்ட மாவீரர் வாரம் என்கின்ற அனுஷ்டானத்தை விமர்சிக்க வைத்த இசைநிகழ்ச்சியின் ஆகக்கூடிய நீட்சி மூன்று தொடக்கம் ஐந்து மணித்தியாலங்கள் மட்டும். இணையத் தளங்களோடு அவ்வளவு பரிச்சயமில்லாத நண்பர்களுக்காய், சில தொழில்நுட்ப உலகின் வேதனைகளைப் பகிர்வதன் முக்கியத்துவம், எம்மவர்கள் சிலரின் எண்ணங்களின் காட்டில் வீழ்ந்துள்ள 'மறத் தேசிய அக்கினிக்குஞ்சு' பற்றிய தெளிவை ஊட்டும் என்பதன் நம்பிக்கையையும் சேர்த்துப் பின்னியுள்ளது. குறிப்பாக 20 தொடக்கம் 50 வரையான வயதெல்லையுள்ள தீவுக்கு வெளியேயான புலத் தமிழர்களில் அங்கத்துவம் வகிக்கும் இணையப் பாவனையாளர்களின், பத்துப் பேரில் எழுவர் தமிழ்த் தேசிய வாதிகளாகவும், அனுதாபிகளாகவும் இருவர் மறத் தேசிய எண்பிகளாகவும், ஒருவர் வெற்றுத் தேசிய கருத்தாளராகவும் இருக்கும் அதே அண்மைப் புள்ளிவிவரம், 25 தொடக்கம் 40 வரையான வயதெல்லையுள் தீவுக்குள்ளான தமிழர்களில் அங்கத்துவம் வகிக்கும் இணையப் பாவனையாளர்களின் பத்துப் பேரில், எண்மர் வெற்றுத் தேசியக் கருத்தாளர்களாகவும், ஒருவர் மறத் தேசிய எண்பியாகவும், மீதியுள்ள ஒருவர் பெரும்பாலும் 'தமிழ்த் தேசிய அனுதாபி'யாக மட்டும் தம்மைக் காட்டிக் கொள்வதாகவும் வெளிப்படுத்துகின்றது. சமூக வலைத்தளங்களுக்கு வந்து போகின்ற பயனீட்டாளர்களின் (USERS) மொத்தத் தொகையில் பார்க்கின்ற போதிலும் கூட புலத் தமிழர்களின் முப்பது என்கின்ற அகவைத் தொகுதி சரிபாதியாகப் பதினைந்தாகவே இலங்கைத் தமிழர்களினால் பயன்படுத்தப்படுகின்றமையும், மொத்தப் பயனீட்டு மணித்தியாலங்களின் வரிசையில் ஒப்பிடுகின்ற போது, தமிழ்த் தேசியவாதிகள்-எதிர் மறத்தேசிய மற்றும் வெற்றுத் தேசிய எண்ணவாளர்களின் விகிதம் சாலவிகிதத்தில் பங்கிடப்படுகின்றமையும் புலப்படுகின்றன. 'அடிக்கடி ஐரோப்பிய தமிழர்களை முன்னிலைப்படுத்தி எழுதுவது ஏன்?' என்று நேரடியாகவே கேட்டுவிட்ட தோழிக்கும், கேட்க எண்ணிய ஆயிரமாயிரம் (?) அன்புள்ளங்களுக்குமான பதில், முதல் வாக்கிய முடிவுடனேயே பிறப்பிக்கப்பட்டுவிட்டதாக ஆழ்ந்து நம்புவோம்!

இணையப் பாவனையாளர் ஒருவரை புவியியல் அமைவிடத்துடன் அடையாளம் காண்பதாயின், அவரினால் பயன்படுத்தப்படும் கணினியின் தனிப்பட்ட IP எண்ணின் பதிவெல்லையின் மூலம் பின்தொடர முடியும். அல்லது இணைய இணைப்புக்காக பயன்படுகின்ற தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களிடமிருந்து பாதுகாப்புத் தகவல்களைப் பெற்றுப் பின்தொடர முடியும். பயனீட்டாளர் ஒருவரைச் சார்ந்திராமல் சுயாதீன வழியில் தேசமொன்றின் அரசோ, அரச பாதுகாப்புத் துறையோ அல்லது முறைப்பாடொன்றின் பேரிலான விசாரணை ஒழுங்குகளோ மட்டுமே இவ்வகைக்குரிய வழிகளினால் இணையப் பாவனையாளர் ஒருவரை கிட்ட நெருங்க முடியும். மறுதலையாக, பயனீட்டாளர் ஒருவரை சார்ந்து, அவரை கண்காணிக்க வேண்டுமாயின், அல்லது அவரது தகவல்களை கைப்பற்ற வேண்டுமாயின், சமூக வலைத்தளங்களில் குறித்த பயனீட்டாளரின் நண்பர்களில் ஒருவரை 'கருணா'வாக ஆக்கினாலும், அது சுலபமாக சாத்தியமாகும்.

சமூக வலைத்தளப் பக்கங்களில் போதுமான மறைப்புத் தெரிவுகள் வசதிகளாக வழங்கப்பட்டுள்ள நிலையில், எமக்கு நன்கு தெரிந்தவர்களையே நண்பர்களாக அங்கீகரிப்பதும், சின்னதொரு சந்தேகப்புன்னகை தெரியும் 'காம்பு'களை உடனே நீக்குவதும், தொல்லை கொடுப்பவர்களைப்பற்றி முறைப்பாடுகளைப் பதிவு செய்வதும் சாத்தியமே.

உதாரணமாக, ''சாம்பசிவம்'' என்கின்ற முதற்பெயரோடு, தன் கணக்குப் பயனீட்டு அடையாளத்தை கொண்டுள்ள நபர்கள் யாவரையும் ஒன்று சேர உங்களின் தளத்தை பார்வையிடுவதிலிருந்து தடுத்து வைக்க முடியும்.

ஆனால் பிரச்சினைகளின் மூன்றாம் தலைமுறை பேரப்பிள்ளைகளாக, சமூக வலைத்தளப் பயனாளர்கள் பெரும்பாலும் ஏமாற்று அடையாளக்கணக்குகளை (Fake Id) திறந்து வைத்திருப்பதன் காரணமாக, பல கீ-போர்ட் புலிகள் ''பசுத் தோல் போர்த்தி'' உலாவும் வசதி இலகுவாக்கப்பட்டது. இவ்வகை எதிர்மறை விளைவுகளே, இலங்கைக்கு உள்ளான தமிழ் இணையப்பாவனையாளர்களின் சுமார் எண்பது வீதமான இளைஞர்களை எந்தப்பக்கமும் சாயாத- வெற்றுத் தேசிய கருத்தாளர்களாக வைத்திருப்பதோடு, நல்லூர்க் கந்தனின் பெருவிழாவின் இருபத்தைந்து நாள் படங்கள் முதற்கொண்டு, ''காஜல் அகர்வாலுக்கு'' கால்விரல் சுளுக்கியது வரை தரவேற்றவும் செய்கின்றது. தத்தமது சுய பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலம் சமூக வலைத்தளக் கொள்கையில் கருத்தை மதிபேணும் நண்பர்கள் தொடர்பில் குற்றம் சாட்டும் உரிமை எவருக்குமேயில்லை. காரணம் எதிர்ப்பதை விட மேலானது இயங்காமலிருப்பதனாலாகும்! தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் உயர் மதிப்பீட்டின் பின்னர், தமிழ்த் தேசியம் சார் பதிவுகளிலிருந்து விலகியிருக்கின்ற அத்துணைபேரும், இலங்கையில் ''ஊடக சுதந்திரம்'' உண்மையாகின்ற அடுத்த இரவிலிருந்து, தமிழ் தேசிய வாதிகளாகவே 'கிளிக்'குவார்கள் என்று நம்புவோமாக!

இணைய பக்கங்களின் பலம் என்பது என்னவென்று தெரிந்து கொள்ள அவாவும் நெஞ்சங்களோடு, கடந்த வாரத்தில் இடம்பெற்ற ''பல்லூடக போர்க்காட்சியொன்றை'' பகிர்ந்து கொள்வது நலமே தரும்!

ஈழத்துக்குள்ளாக வருகைதரும், தென்னிந்திய வாரச் சஞ்சிகைகளில் அபிமானம் பெற்ற, 'ஆனந்த விகடன்' தீபாவளி மலரில், ''நேற்று நான் போராளி.....'' என்று தொடங்கும் பேட்டிக்கட்டுரையொன்று வெளியாகி அவர்களின் வியாபாரத்தை எகிற வைத்ததோடு, உலகத்தமிழ் நெஞ்சங்களைக் கிழித்துக் குதறியது பலருக்கும் தெரிந்திருக்கலாம். ''வித்யாராணி'' என சித்திரிக்கப்பட்ட முன்னாள் போராளித் தாயொருத்தியின் பேட்டியில் உள்ளடங்கியிருந்த விடயங்கள் தொடர்பாக, ஏற்கனவே இதே இடத்தில் ஆராய்ந்திருந்ததும் நினைவிருக்கலாம். பல்வேறு 'மறைந்தவரின் எழுதுப்'இணையங்களும் கூட அந்த பேட்டியென்ற பெயரிலான கற்பனைக் கதையில் தங்களுக்குத் தேவையான பகுதிகளைக் கத்தரித்து எடுத்து, ஈழத்தமிழ் கலாசாரச் சந்தையை அடித்துத் துவைத்து வெளுக்க முயன்று வெற்றி கண்டதாகத் தம்மைத்தாமே போற்றிக் கொண்டன.

ஆனால் சமூக வலைத்தளங்களில் உலாவும் உண்மையுணர்வாளர்களின் ஆராய்ச்சிக்குணம், பேட்டியின் ஒவ்வொரு வாசகத்தையும் நுணுக்கமாக அலசி, எழுதப்பட்டிருந்த வார்த்தைகளுக்குள் ஈழத்தமிழ்மொழி வாசனை சற்றுமே கலக்காத சொற்கள் முதற் கொண்டு தேடித்துளாவியதோடு, பேட்டியென்ற பெயரில் புனைகதை எழுதிய இன்றைய பெங்களூர் பல்கலைக்கழக வாசியின் பிறந்தகம் யாழ்ப்பாணத்தின், ''குப்பிளான்'' என்பதையும் கண்டு, பட்டு வைத்தது. அரச ஒட்டுக்குழுத் தலைவரொருவரின் முன்னாள் செயலாளரின், மகனான மேற்படி ''கற்பனைப் பேனாக்காரரை'' ஆனந்த விகடன் நிர்வாகம் தூக்கியெறிய வேண்டுமென்று, ஆளுக்கு மேல் ஆளாக மடல்களும், அறிக்கைகளும், வேண்டுகோள்களும் விடுக்குமளவுக்கு சூடாகிக் கிடந்த கணனித் திரைகள்! எந்தவொரு போராளியும், தேசியத்தலைவரைப் ''பிரபாகரன்'' என்ற பெயரினால் சுட்டி விளிப்பதில்லை என்கின்ற நுணுக்கமான நூல் பிடித்துப்போய், யாழ். ரயில் நிலையத்தில் தூங்கும் பெரும்பான்மை இனப் பெண்களின் வாக்குமூலத்தினுள், முன்னாள் போராளியின் வரலாற்றினை நிறமூட்டியாகக் கலந்து பயன்படுத்திய ''சாயம்'' வெளுக்க வைத்த பின்னால், இணைய உலாவிகளின் ஒவ்வொரு விரலிடுக்கிலும் பூத்திருந்தவை கார்த்திகைப்பூக்கள்!!

''அறைகளுக்குள் இருந்தபடி தனியரசு கேட்பவர்கள்'' என்கின்ற கேலி- அடைமொழிகளால் அடிக்கடி குத்திப் பேசப்படுகின்ற தமிழ்த்தேசிய வலைப்பதிவர்கள், இன்றைய விடுதலைப் பயணத்தின் பாலைவனச் சோலைகளின் ''பூந்தோட்டக் காவற்காரர்கள்'' என்பதில் எள்ளளவும் மாற்றுக் கருத்தில்லை. லண்டனிலிருந்து கிரிதரன், தமிழகத்து இளம் இயக்குநர் ராஜீ முருகனுடன் பேசியவை அப்படியே.......

''எங்கட தீபாவளியெல்லாம் போச்சு முருகன்!...... ஒரு கிழமைக்கு முன்னமே, வெடியளை வாங்கி பனை ஓலையில காய வைச்சிடுவம். ஆர் வீட்டு வாசல்ல கனக்க வெடிப்பேப்பர் கிடக்குதெண்டு போட்டியே நடக்கும். பக்கத்து வீடுகளில் இருந்து பொறுக்கி எடுத்து எங்கட வாசலில், போட்டு வைப்பம். கற்குளம் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்குப் போட்டு வந்து, அம்மா தாற அரியதரமும், பயித்தமுருண்டையும் தான் தீபாவளி! எல்லாம் போச்சு. நான் லண்டனில கிடக்கிறன். தம்பியும் குடும்பமும் வல்வெட்டித்துறையில. அங்க எங்கட பிள்ளையள், ஆரும் வெடியே கேக்குறேல்ல. தினமும் வெடியள பாத்ததுகள்! சொந்தங்கள் தானே பண்டிகை? ஊரே இல்லாதவனுக்கு தீபாவளி என்ன கேடு?''

கைக்கடக்கத் தொலைபேசியின் ''சொந்தங்கள் தானே பண்டிகை......?'' என்கின்ற வார்த்தைகளின் வாசம், ஆஸ்பத்திரி வீதியில் ஆடித்திரிந்த எத்தனை பேரைச் சென்றடையும்! எந்த நினைவுமே இல்லாமல், யாதும் மறந்து, தத்தமது சம்பாத்தியத்தின் உயர்ச்சிக்கேற்ப உச்சப் பிரவாகத்தோடு பண்டிகை கொண்டாடுகின்ற தகவிருந்தும், புலத்தமிழர்களின் பக்குவம், ஏன் எங்களிடத்தில் இல்லாமல் போனது?

ஆங்காங்கே மின் விளக்குகளை அகாலத்தில் எரிய விட்டபடி, வாழ்த்து மடல்களை வலிந்து திணித்த படி திரிந்த ஆமிக்காரர்களுக்கு மட்டுமல்லாது, நம்மவர்களில் பலருக்கும் தெரிந்திருக்கவில்லை, 'தீபாவளி' தமிழனின் பண்டிகை இல்லை என்பது. கிரிதரன் கேட்ட ''நாடே இல்லாதவனுக்கு.......?''

நாக்கைப் பிடுங்குகின்றது!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக முருக பக்தி மாநாடு 2014 இல் சுவிற்சர்லாந்தில்

■ குகா

தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானின் கீர்த்தியைப் பரப்பும் நோக்குடனும் முருகப் பெருமானுக்கு தெய்வ கீர்த்தியைப் பிரதிபலிக்கச் செய்யும் நோக்குடனும் சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட்டு வரும் அனைத்துலக முருகபக்தி மாநாட்டின் அடுத்த மாநாடு 2014 இல் சுவிஸில் நடத்தப்படவுள்ளது.

மலேசியாவில் நடந்து முடிந்த அனைத்துலக முருகபக்தி மாநாட்டில் இந்தப் பிரகடனம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. அனைத்துலக மட்டத்தில் முருக பக்தி மாநாட்டை முன்னின்று நடத்தி வரும் திருமுருகன் திருவாக்குப் பீடத்தின் அதிபர் தவத்திரு பாலயோகி சுவாமிகள் அடுத்த மாநாட்டுக்கான செங்கோலை சுவிஸில் செங்காலன் மாநிலத்தில் சென்மார்க்கிரெட்டனில் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் பரிபாலகர் வேலுப்பிள்ளை கணேசகுமாரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை மலேயாப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச முருகபக்தி மாநாடு பக்திபூர்வமாக நடந்தேறியது. திருமுருகன் திருவாக்குப் பீடத்தின் ஏற்பாட்டில் மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையின் ஆதரவுடன் இந்த மாநாடு நடைபெற்றது. அமெரிக்கா, தென்னாபிரிக்கா, ருமேனியா, இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேராளர்கள் மாநாட்டில் பங்கேற்றனர். இதைவிட மேலும் வெளிநாட்டைச் சேர்ந்த 200 பேராளர்கள் பிற அமைப்புகளிலிருந்தும் கலந்துகொண்டனர்.

பக்திமணம் கமழ தெய்வீக சிந்தனையுடன் இடம்பெற்ற இந்த மாநாட்டில் 38 பேராளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து உரையாற்றினர். முருகனின் சிறப்பு, புகழ், வழிபாடு ஆகியன தொடர்பாக இந்த ஆய்வுகள் அமைந்திருந்தன. மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க மிஷன் பல்கலைக்கழகத்தின் இடைநிலைப் பட்டம் பெற்ற முருகபக்தரான பேட்ரிக் ஹரிகன் தமிழில் ஆற்றிய உரை சகலரையும் கவர்ந்தது. 'பிறப்பு முதல் இறப்பு வரை' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையில் முருகனின் திருப்புகழ், முருக வழிபாடு, முருக நெறி ஆகியன தொடர்பான ஆழ்ந்த கருத்துக்களை முன்வைத்தார். அவரது உரை, பேராளர்களை வெகுவாகக் கவர்ந்தது. தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், ஜேர்மன் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய அவர், 10 ஆண்டு காலம் முருகபக்தராக இருக்கிறார். கதிர்காமத்தில் ஆச்சிரமம் அமைத்துள்ள கௌரிபாலக சுவாமியின் சீடனான அவர் செல்வச்சந்நிதியிலிருந்து பாதயாத்திரையாக கதிர்காமம் வரை சென்று கதிர்காமத்தில் தங்கியிருந்து கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்தியுள்ளார்.

மாநாட்டில் உரையாற்றிய மற்றுமொரு முருகபக்தரான ருமேனியாவைச் சேர்ந்த திமோடர் போபின் உரையும் சகலரையும் கவர்ந்தது. கடவுள் தன்னை பல வடிவங்களில் வெளியிப்படுத்தியிருப்பது போல் முருகன் வடிவத்திலும் வெளிப்படுத்தியிருக்கிறார். வைரத்தில் பல வெட்டுக்கள் இருப்பது போல கடவுளும் பல அவதாரங்களில் இருக்கிறார் என்று தனது உரையில் குறிப்பிட்டார் அவர். தமது நாட்டில் ஆரம்பத்தில் யோகக்கலையுடன் தமிழ் கடவுள் வழிபாட்டையும் முன்னெடுத்ததாக கூறும் அவர் இப்போது முருகன் விக்கிரகம் வைத்து வாரம் 700 பேர் முருக வழிபாட்டில் ஈடுபடுவதாகக் கூறினார்.

சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் அடிப்படையில் முருகன் தமிழ்க் கடவுள். இறைவன் பேசிய முதல்மொழி தமிழ்தான். தமிழ் என்பது இறைவன் மொழிதான் என்ற உறுதிப்பாடு மாநாட்டில் வெளியிடப்பட்டது. பேராளர்கள் கரகோஷம் எழுப்பி அதற்கு சம்மதம் வெளியிட்டனர்.

பக்தி இலக்கியத்தை மேம்படுத்த மலேயாப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாநாடு நடத்தவும் அதற்கான அறக்கட்டளை ஒன்றை ஆரம்பிக்கவும் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் தனித்தனித் துறைகளாக மூன்று அறக்கட்டளைகளும் அங்கு ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடத்தப்பட்டு வரும் அனைத்துலக முருகபக்தி மாநாட்டில் அடுத்த மாநாட்டை சுவிஸில் 2014 இல் சிறப்பாக நடத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த மாநாட்டை சிறப்புற நடத்தத் தேவையான உதவிகளை வழங்குவதாகத் திருமுருகன் திருவாக்குப் பீடத்தின் அதிபர் தவத்திரு பாலயோகி சுவாமிகள் மாநாட்டில் கூறினார்.

2012 ஆம் ஆண்டு மாநாட்டு மேடையில் கொலுவிருந்த செங்கோலை அதிகார பூர்வமாக சுவிஸ் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் பரிபாலகர் வேலுப்பிள்ளை கணேசகுமாரிடம் பாலயோகி சுவாமிகள் பேராளர்களின் கரகோஷத்துக்கு மத்தியில் கையளித்தார்.

தென்னாபிரிக்காவில் இந்து பீடம் ஒன்றை அமைக்கவும், 2016 இல் அங்கு அனைத்துலக முருக பக்தி மாநாடு நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் பாலயோகி சுவாமிகள் கூறினார்.

அனைத்துலக முருகபக்தி மாநாட்டின் அடுத்த மாநாடு 2014 இல் சுவிஸ் செங்காலன் மாநிலத்தில் சென்மார்க்கிரெட்டனில் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் நடைபெறும் என்று ஆலய பரிபாலகர் வேலுப்பிள்ளை கணேசகுமார் கூறினார்.

அதிசயங்கள் பல கொண்டதும் சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளதுமான இந்த ஆலயத்தில் அனைத்துலக முருகபக்தி மாநாடு நடைபெறுவது சாலவும் பொருத்தமானதொன்றாகும்.

இந்த ஆலயம் அமைக்கப்பட்டு பத்து வருடங்களைக் கடந்தபோதும் பூசை, நைமித்தியங்கள் எல்லாம் சைவ மரபுக்கு அமைய இடம்பெற்று வருகின்றன. 2010 ஆம்ஆண்டு ஆலயத்தின் கந்தசஷ்டி பக்திபூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது அதிசயம் ஒன்று இடம்பெற்றது.

ஆழ்ந்த இறை நம்பிக்கை உடையவர்கள் இந்த விடயத்தை ஆன்மிகத்துக்கு உட்படுத்திப் பார்ப்பார்கள். இந்த நிகழ்வு சாதாரணமாக நடப்பதைப் போன்று எடுத்துக் கொள்ள முடியாது. சுவிஸ் தமிழர்கள் மத்தியில் பரபரப்பையும் இறையுணர்வையும் ஏற்படுத்திய அந்த நிகழ்வு 7.11.2010 அன்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தது. இறெயின்தாளர் விளையாட்டு மைதானத்தில் மாலைநேரத்தில் தமிழ் இளைஞர்கள் கரப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது எங்கிருந்தோ வெண்மயில் ஒன்று பாதுகாப்புத் தேடி பறந்து வந்து அவர்களிடம் அடைக்கலமானது. பூனை ஒன்று துரத்தி வந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் இதனை சென்.மார்க்கிரெட்டன் அருள் மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்தினார்கள். அத்தோடு முறையாக சுவிஸ் செங்காலன் மாநில பொலிஸாருக்கும் தகவல் கூறப்பட்டது.

அங்கு வந்த பொலிஸார் வெண்மயிலை கையகப்படுத்தி வளர்ப்புப் பிராணிகளுக்கான அடையாளக் குறியீடு கால்களில் பொருத்தப்பட்டுள்ளதா எனச் சோதித்ததில் அவை காணப்படவில்லை. அதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் தமிழர்களின் அனுஷ்டான நாள், கந்தசஷ்டி இரண்டாவது நாள் மயில் முருகனுடைய வாகனம் எனவும் அது இறைவனுக்கு உரியது எனவும் கூறி பொலிஸாருக்கு விளக்கியபோது அவர்கள் அந்த வெண்மயிலைக் கோயிலில் வைத்து வளர்ப்பதற்கு அனுமதி கொடுத்து அதனைக் கோயில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தனர்.

கந்தசஷ்டி காலம் கந்தக் கடவுளுக்கு உரிய காலம். மயிலை வாகனமாக ஏற்ற காலமும் இதுவே. அன்றைய தினம் கதிர்வேலாயுத சுவாமி வெண்ணீற்றுடன் விபூதி காப்பு சாத்தப்பட்டு வெண்ணிற அலங்காரத்துடன் இருந்தவேளை வெண்மயிலின் வரவு மிகவும் பொருத்தமாகவும் சென்மார்க்கிரெட்டன் அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி ஆலயத்துக்குப் புதுப் பொலிவையும் நம்பிக்கையையும் உண்டாக்கியது.

மயிலை சிறப்பாகத் தனியிடத்தில் வைத்துப் பராமரிக்கின்றனர். ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் யாவரும் அந்த மயிலைப் பார்த்து தம்மை மறந்து செல்கின்றனர். ஆலயத்தின் இந்த வருட தீர்த்தத் திருவிழாவில் அற்புதம் ஒன்று இடம் பெற்றது.

ஆலய வீதியில் தீர்த்த வாவியில் சுவாமி தீர்த்தமாடிக் கொண்டிருந்தபோது முன்பாக அமைந்திருந்த மயில்களின் தரிப்பிடத்தில் இருந்த மயில்கள் தோகைகளை விரித்து ஆடத் தொடங்கின. விழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் அரோகரா கோஷம் எழுப்பி மெய்சிலிர்த்தனர். தீர்த்தம் பூர்த்தியானதும் மயில்களுக்கும் விசேட பூசை செய்யப்பட்டது.


இவ்வாறு அதிசயங்கள் பல இடம்பெற்ற பக்திமயமான அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் அனைத்துலக முருகபக்தி மாநாடு நடைபெறுவது சாலவும் பொருத்தமான ஒன்றாகும்.

பக்தி மணம் வீசும் இந்த ஆலயத்தில் சமயத் தலைவர்கள், சமயத் துறவிகள் மற்றும் பேரறிஞர்கள் அனைத்துலக முருகபக்தி மாநாட்டுக்காக சங்கமிக்கப் போகிறார்கள். பல்கலைக் கழகங்களில் இதுவரை நடைபெற்று வந்த அனைத்துலக முருகபக்தி மாநாடு 2014 இல் பெருமைமிக்க ஆலயம் ஒன்றில் இடம்பெறுவது சிறப்பம்சமாக அமையப் போகின்றது.

# சூரிய குடும்பம்

● தயா

சூரியக் குடும்பம் எவ்வாறு தோன்றியது? இதற்கு உறுதி பூர்வமான கொள்கையோ, பதிலோ இதுவரை கண்டறியப் படவில்லை. சூரியக் குடும்பம் தோன்றியது குறித்து இதுவரை பல்வேறான கருத்துக்கள் கூறப்பட்டு வந்துள்ளன. 18-ஆம் நூற்றாண்டில் புகையுருக் கோட்பாடு என்ற தத்துவம் ஒன்று கூறப்பட்டது. பல வாயுக்களால் அமைந்த பெரும் தொகுதி ஒன்று, சுழற்சியினால் மெதுவாகக் குளிர்ந்து சுருங்கத் தொடங் கியது. அச்சுருக்கத்தின் காரண மாக, அந்தத் தொகுதி முழுவதும் ஈர்ப்பு-சக்தியின் அணைப்பினால் சுழற்சி வேகம் மேலும் அதிகரித்தது; அதனால் அத்தொகுதியின் வெளிப்பரப்பின் வேகம் மிகவும் அதிகமாக, ஈர்ப்பை மீறத் தொடங்கியது. இதிலிருந்து சிறு சிறு துண்டுகள் விடுபட்டுக் கோள்கள் உருவாயின. நடுப்பகுதி மட்டும் சூரியனாக ஒளியையும், வெப்பத்தையும் அளித்துக் கொண்டுள் ளது. இவ்வாறு புகையுருக் கோட்பாடு, சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றிக் கூறுகிறது.



பின்னாட்களில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியால் தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் ஈர்ப்பு விசையை மீறி இடைப்பட்ட துண்டுகள் வெளியேற முடியாது என்று அறியப்பட்டது. இவற்றின் காரணமாக இக்கொள்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

18 ஆம் நூற்றாண்டில் சூரியக் குடும்பத் தோற்றம் பற்றிய கொள்கை உருவானது. விண்வெளியில் திரியும் மற்றொரு விண்மீன் சூரியனின் அருகே வர நேர்ந்தபோது, ஈர்ப்பின் காரணமாக, சூரியனது வாயுக்களை விண்வெளியில் அது கவர்ந்து ஈர்த்தது; அவ்வாறு சூரியனிலிருந்து பிரிந்த வாயுக் கள் குளிர்ந்து கோள்களாக உருவாயின என்று அக்கொள்கை விளக்கமளிக்கிறது. இரு விண்மீன்களுக்கு இடையேயுள்ள தூரம் மிக அதிகமாகையால் சூரியனை நோக்கி அதன் அருகே மற்றொரு விண்மீன் வந்திருக்கும் என்பது ஏற்புடையதாக இல்லை.

இறுதியாகத் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ஒன்று உள்ளது. அது பின்வருமாறு விளக்கமளிக்கிறது. வெகுகாலத்திற்கு முன் ஒரு மிகப் பெரிய விண் முகில் இருந்தது. அதன் ஒரு பகுதியில் நிறைச் செறிவு ஏற்பட்டது. இப்பகுதி ஏனைய பகுதிகளை ஈர்க்க ஆரம்பித்தது. அதாவது நியூட்டனின் ஈர்ப்பு விதியின் படி, இரு பகுதிகளான விண்முகிலில் நிறை ஈர்ப்புச் செறிவு மிகுந்த பகுதி, மறுபகுதியை ஈர்க்க ஆரம்பித்தது. இதன் பின் சொந்த நிறை ஈர்ப்பினால் விண் முகில் சுருங்கத் தொடங்கியது. இந்நிலையில் இது ஒரு வாயுப் பந்து போல் சுருங்கச் சுருங்கச் சுழலும் வேகமும் அதிகரித்தது. காலப்போக்கில் இதன் மையப் பகுதி குமிழ் போன்றும் சுற்றுப்பகுதி வட்டுப் போன்ற அமைப்பையும் பெற்றது. இதன் பின்னர் வெளிப்புற வட்டின் சுழற்சி வேகம் அதிகரித்ததால் மையப் பகுதியில் உள்ள குமிழ் மேலும் சுருங்கியது. இதனால் மையத்தில் வெப்பம் அதிகரித்து மையப்பகுதி ஒரு விண்மீனாக (சூரியன்) மாறியது. சுற்றியுள்ள வட்டு உடைந்து சிறு பகுதிகளாகப் பிரிந்து வெவ்வேறு கோள் மீன்களாக மாறின.

சூரியனுக்கு அருகில் உள்ள கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகியன மிக அதிகமான வெப்ப நிலையிலிருந்து குளிர்ந்து உருவானவை. இதனால் இவை திடக் கோளங்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலிக்கன், இரும்பு போன்ற தாதுக்கள் காணப்படுகின்றன. இத்திடக் கோளங்களைச் சுற்றி மென்மையான வாயு மண்டலம் காணப்படுகின்றது. ஆனால் சூரியனிலிருந்து தொலைவில் உள்ள கோள்கள் உயர்வெப்ப நிலையை அடையாது குளிர்ந்த வாயு நிலையிலேயே சுழன்று வருகின்றன. இவை பெரும்பாலும் ஹீலியம், ஹைட்ரஜன் ஆகிய வாயுத் தனிமங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது பக்தி?

எந்தவித பலனையும் எதிர்பாராமல் இறைவனிடம் செலுத்தும் அன்பே பக்தி.

இதுதான் உண்மையான, தூய்மையான பக்தி.

உன் பக்தி எப்படிப்பட்டது என்று சிந்தித்துப் பார்.

நீ பக்தியை வியாபாரமாக்கிக் கொண்டிருக்கிறாய். இறைவனிடம் பக்தி செலுத்த, நீ அவனிடம் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறாய்.

நீ அவனிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று என்னென்னவெல்லாமோ கேட்கிறாய். நீ கேட்டது கிடைக்கவில்லை என்றால் இறைவனையே பழிக்கிறாய். இதுதான் பக்தியா?

பக்தி என்பது முக்தி பெறுவதற்கான ஓர் எளிய வழி. உலக இன்பங்களுக்காக அதைப் பயன்படுத்த எண்ணாதே! உனக்கு என்ன தேவையோ அதை இறைவன் அறிவான். உனக்குத் தரவேண்டியவற்றை நிச்சயம் தருவான். உனக்கு வேண்டியவையும் அவன் அறிவான். வேண்டியவற்றைத் தருவான் இறைவன். உனக்கு இன்பம் துன்பம் எதுவரினும் ஏற்றுக் கொள்.

துன்பம் வந்தால் இறைவனைத் தூற்றாதே! அது உனக்கு மேலும் தீமையைத் தரும். இறைவன் அளவிலாக் கருணையுள்ளவன் என்பதைப் பரிபூரணமாக நம்பு. இறைவனிடம் நீ வேண்டிக் கொள்ள வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதுதான் முக்தி. அந்த முக்தியைத் தருவது ஆழ்ந்த பக்தி. நீ அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்.

ஏனெனில், இப்பிறவியிலேயே கர்ம வினையால் வரும் துன்பங்களை நீ அனுபவித்து விட்டால், நீ இன்னொரு பிறவி எடுக்க வேண்டியதில்லை. பிறவியில்லாப் பேறே பெரும் பேறு. பக்தி என்பது அப்பேற்றை அடைவதற்கான வழியாக இருக்க வேண்டும்.

உலக விடயங்களைக் குறித்து இறைவனிடம் வேண்டுவதும், சில வேண்டுதல்களை நிறைவேற்றிவிட்டால் அதற்குப் பதில் கடன் செய்வதும் உண்மையான பக்தி அன்று.

உண்மையான பக்தி என்பது ஆழ்ந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இறைவன் எம்மைக் கைவிடமாட்டான் என்ற அதீத நம்பிக்கை வேண்டும். இறைவன் சர்வ வல்லமை கொண்டவன். அவன் நினைத்தால் முடியாதது ஒன்றும் இல்லை. இத்தகைய நம்பிக்கை கொண்டிருப்பதே உண்மையான பக்தி.

உண்மையான பக்தி எது? என்பதை விளக்கும் ஒரு கதை உண்டு.

ஓர் அடர்ந்த காடு. அங்கு ஒரு முனிவர் தவமியற்றிக் கொண்டிருந்தார். அந்தக் காட்டில் ஒரு வேடனும் இருந்தான். அவன் தினமும் காய்கனிகளைப் பறித்து வந்து அந்த முனிவரிடம் கொடுத்து விட்டு, ஆசி பெற்றுச் செல்வான். அந்த வேடனுக்கு மற்றொரு பழக்கமும் உண்டு.

அந்தக் காட்டில் ஓரிடத்தில் சிவலிங்கம் இருந்தது. அதை வணங்கிப் பிரார்த்தனை செய்த பின்பே அவன் வேட்டைக்குச் செல்வது வழக்கம். இவர்களைத் தொடர்ந்து கவனித்து வந்த நாரதர் ஒரு நாள் இறைவனிடம், இறைவா! அந்தக் கானகத்தில் உள்ள முனிவர், வேடன் இருவருமே தங்களை நாளும் பூஜிக்கிறார்கள். இவர்களில் யார் சிறந்த பக்தன்?'' என்றார்.

''வேடன்தான்'' என்றான் இறைவன்.

நாரதருக்கோ ஆச்சரியம்.

''இறைவா! அதெப்படி இருக்க முடியும்? முனிவர் தானே எப்போதும் தங்களை நினைத்துக்கொண்டே இருக்கிறார்!'' என்றார் நாரதர்.

அதற்கு இறைவன், ''உனக்கு அந்த உண்மையை உணர்த்துகிறேன்'' என்று கூறி, நாரதர் காதில் ஒரு விடயத்தைக் கூறி, அதை முனிவர், வேடன் இருவரிடமும் கூறுமாறு, சொல்லி அனுப்பினார்.

நாரதர் பூலோகம் வந்து, முதலில் முனிவரைச் சந்தித்தார்.

முனிவரும் நாரதரை வணங்கி, ''நாரத மகரிஷியே! திரிலோக சஞ்சாரியான தாங்கள் இப்போது எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்றார்.

நாரதர், ''நான் கயிலாயம் சென்று இறைவனைத் தரிசித்து வருகின்றேன்'' என்றார்.

முனிவர், '' இறைவன் என்ன செய்து கொண்டிருந்தார்?'' என்றார்.

அதற்கு நாரதர், '' இறைவன் ஓர் ஊசியின் காதில், யானையை நுழைத்துக் கொண்டிருந்தார்'' என்றார்.

அதைக்கேட்ட முனிவர் சிரித்தார்.

''என்ன நாரதரே! விளையாடுகிறீரா? ஊசித் துவாரத்தில் யானை நுழையுமா?'' என்று கூறிவிட்டு, ஏளனமாகச் சிரித்துக் கொண்டே சென்று விட்டார்.

அடுத்து நாரதர் வேடனைச் சந்தித்து, அவனிடமும் அதே விடயத்தைக் கூறினார்.

வேடனோ ''ஆஹா! என்னே இறைவனின் லீலை!'' என்று வியந்தான்.

''இதை நீ நம்புகிறாயா?'' என்று கேட்டார் நாரதர்.

அதற்கு வேடன், ''ஏன் சுவாமி! இறைவனால் முடியாதது எது இருக்கிறது?

கடுகினும் சிறிய ஆல விதைக்குள் எவ்வளவு பெரிய ஆலமரம் மறைந்திருக்கிறது. அவ்வாறிருக்க, ஊசித்துவாரத்தில் யானையை நுழைப்பது இறைவனுக்குக் கடினமான செயலா என்ன?'' என்றான்.

நாரதருக்கு ஓர் உண்மை புரிந்தது.

இறைவனைச் சதா சர்வ காலமும் சிந்திப்பது மட்டுமல்ல பக்தி.

இறைவனால் எல்லாம் முடியும் என்று நம்பிக்கை கொள்வதே உண்மையான பக்தி. இவ்வுண்மையைப் புரிந்து கொண்டார் நாரதர்.

நீயும் இத்தகைய நம்பிக்கையுடன் வாழ்ந்து பார்.

இறைவன் உன் அருகிலேயே இருப்பார்.



**பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்**

# அந்நியமத ஊடுருவலுக்கு எதிராகத் தோன்றிய கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்

**கர்ணன்**

வடமராட்சிப் பிரதேசத்தில் கரணவாயில் குருக்கள் பகுதி என்னும் சிறிய கிராமம் ஒன்றுள்ளது. தென்னிந்தியாவில் வேதாரணியத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டதே இந்தக்குருக்கள் பகுதியாகும். மேற்படி குருக்கள் பகுதியைப் போலவே தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணியிலும், இதே வேதாரணியத்தைச் சேர்ந்த மற்றொரு குருக்கள் பகுதியும் உண்டு.




சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக வேதாரணிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கரணவாய் மற்றும் வரணிப் பகுதியில் வாழ்ந்து வருவதுடன் வேதாரணியம் கோயில் ஆதீன பரிபாலனத்துடன் இந்தக் கிராமங்களில் வாழும் குருக்கள் பகுதிகளுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. வேதாரணிய ஆதீனத்துக்குச் சொந்தமான இங்குள்ள நிலங்களில் குருக்கள் பகுதியினர் குடியிருப்பதுடன் ஏனைய நிலங்களையும் குருக்கள் பகுதியினரே மேற்பார்வை செய்து வருகின்றனர்.

கரணவாய்ப் பகுதியில் சுமார் 25 குடும்பங்களும் அவர்களை ஒட்டி ஒரு சில பிராமணக் குருக்கள் குடும்பங்களும் வாழ்ந்து வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. தற்போது இக்குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் 50 ஆக அதிகரித்துள்ளது. அதேபோல பிராமணக் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

குருக்கள் பகுதி என அழைக்கப்படும் கிராமத்தில் வாழும் பிராமணக் குடும்பங்கள் தவிர ஏனைய வேதாரணியத்துடன் தொடர்புள்ள சுமார் 50 குடும்பங்களும் சைவக்குருமார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

சைவ ஆகம வேதத்தை முறையாகப் பின்பற்றி கோயில்களில் பூசைகளை மேற்கொண்டும், இறுதிக் கிரியைகள், சபிண்டீகரணக் கிரியைகளையும் நெறிமுறை தவறாது மேற்கொண்டு சைவத் தமிழின் இருப்பிடமாக இந்தக் குருக்கள் பகுதி இருந்து வருகிறது.

> **1920 ஆம் ஆண்டளவில் கரணவாய் வேதாரணிய சபையின் தலைவராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சொ.விசுவநாதக் குருக்களும், செயலாளராக இருந்த கைலாய நாய தேசிகர் ஆகியோர் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் இதே பகுதியில் சபைக்குச் சொந்தமான சுமார் ஒரு ஏக்கர் காணியைப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்காகத் தெரிவு செய்து அந்தக் காணியில் ஊர் மக்கள் கொடுத்த உபகரணங்களைக் கொண்டு ஒரு சிறிய கட்டடத்துடன் சைவப்பாரம்பரியம் கொண்ட பாடசாலை ஒன்றை ஆரம்பித்தனர்.**

சைவசமய மரபையும், தமிழ்மொழியையும், கலாசாரத்தையும் பேணி வரும் குருக்கள் பகுதியைச் சேர்ந்த கரணவாய் வேதாரணிய சபை, யாழ்.மாவட்டத்தில் மிஷனரிமாரின் ஆதிக்கம் வேரூன்றி கல்விச் சேவை மூலமாக தம் கிறிஸ்தவ மதத்தையும், கலாசாரத்தையும் பரப்பிக் கொண்டிருந்த காலகட்டத்தில் சைவ சமய வளர்ச்சி பற்றி சிந்திக்க ஆரம்பித்தது. இந்தச் சிந்தனை தொடர்பாக சபை தென்னிந்தியா வேதாரணியத்தில் உள்ள தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு இங்கு சைவசமய மரபைக் கொண்ட தமிழ்ப் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றது.

இதன் விளைவாக 1920 ஆம் ஆண்டளவில் கரணவாய் வேதாரணிய சபையின் தலைவராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சொ.விசுவநாதக் குருக்களும், செயலாளராக இருந்த கைலாய நாய தேசிகர் ஆகியோர் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் இதே பகுதியில் சபைக்குச் சொந்தமான சுமார் ஓர் ஏக்கர் காணியை பாடசாலை ஒன்றை அமைப்பதற்காகத் தெரிவு செய்தனர். அந்தக் காணியில் ஊர் மக்கள் கொடுத்த உபகரணங்களைக் கொண்டு ஒரு சிறிய கட்டடத்துடன் சைவப்பாரம்பரியம் கொண்ட பாடசாலை ஒன்றை ஆரம்பித்தனர். இந்தப்பாடசாலைக்கு கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

இந்தப் பாடசாலையின் உயரிய நோக்கம் அந்நிய மத ஊடுருவலைத் தடுத்து சைவச் சிறார்களுக்கு கல்வி அளித்து அதன் மூலம் சைவசமயத்தை வளர்த்தல் ஆகும். இந்தப்பாடசாலையின் முதலாவது அதிபராக க.கைலாச பிள்ளை பொறுப்பேற்று வழி நடத்தினார். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பத்து ஆண்டுகளில் அதாவது 1930 ஆம் ஆண்டில் இதற்கு அரசு அங்கீகாரம் வழங்கியது. சூ.கணபதிப்பிள்ளை அங்கீகரிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் முதல் அதிபரானார். குறிப்பிட்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஆரம்பமான இந்தப் பாடசாலையில் 1930 களில் பாலர் வகுப்பு முதல் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு (எஸ்.எஸ்.சி) வகுப்புகள் வரை நடைபெற்றன.

ஆரம்ப காலத்தில் குருக்கள் பகுதியைச் சேர்ந்த பிள்ளைகள் அனுமதிக்கப்பட்ட போதும் பின்னர் அயல் பகுதிகளில் வாழும் சைவச்சிறார்களும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பாடசாலையின் ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரையும் சமய அனுட்டானம், குரு பூசைகள், நவராத்திரி பூசை ஆகியன உட்பட சைவ சமயத்தை ஒட்டிய நிகழ்வுகள் இடம்பெற்று வருவதுடன் மற்றும் தமிழ் சைவகலாசாரப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இவற்றின் மூலம் சைவசமய, தமிழ்க் கலாசாரப் பண்பாடு பழக்க வழக்கங்களை இந்தப் பாடசாலை தொடர்ந்து நிலை நிறுத்தி வருகின்றது. மேற்படி பாடசாலைக்கு அரசு அங்கீகாரம் வழங்கிய வேளை தென்னிந்தியா வேதாரணியத்தில் உள்ள ஆதிவார மடத்துக்குச் சொந்தமான இந்தக் காணியைப் பாடசாலைக்குப் பெற்றுத்தந்த பெருமை கைலாசநாததேசிகர், சொ.விசுவநாதக் குருக்கள் ஆகியோரையே சாரும் எனப் பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.கா. தலைமை கூறினால் இராஜினாமாச் செய்வேன்

## கல்முனை முதல்வர் சொல்கிறார்

கல்முனை,நவ.21

கல்முனை முதல்வராக நான் இரண்டு வருடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்திருந்தார். இவ்வாறான நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் உத்தரவிட்டால் எனது முதல்வர் பதவியை இராஜினாமாச் செய்வேன் என்று கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தெரிவித் தார்.

கொழும்பிலுள்ள கல்முனை முதல்வரின் வாசஸ்தலத்தில் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு வருடங்களுக்கு கல்முனை முதல்வராக சிராஸ் மீராசாஹிப் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கு அடுத்த இரண்டு வருடங்களுக்கு சட்டத்தரணி நிசாம் காரியப்பர் முதல்வராக செயற்படுவார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த வருடம் நவம்பர் மாதம் அறிவித்திருந்தார்.

இதனால் 2013 நவம்பர் மாதத்துடன் எனக்கான இரண்டு வருடம் நிறைவடைகிறது.

நான் எப்போதும் கட்சி தலைமைத்துவத்துக்கு கட்டுப்படுபவன். இதன் அடிப்படையில் கல்முனை முதல்வர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் உத்தரவிட்டால், அதனை நிறைவேற்றுவதற்கு தயாராகவுள்ளேன். எனினும் இதுதொடர்பில் கட்சியின் தலைமைத்துவமே இறுதி



முடிவு எடுக்க வேண்டும்.

தெரு விளக்குகளைப் பழு பார்த்தல் மற்றும் கழிவுகளை அகற்றல் போன்ற செயற்பாடுகளை மட்டுமே உள்ளூராட்சி நிறுவனம் செய்யும் என்ற மாயையை ஒழித்து அபிவிருத்திகளை மேற்கொள்வதே கல்முனை மாநகர சபையின் நோக்கம் என்பதை நான் செய்து காட்டியுள்ளேன்.

மாநகர சபையை நான் பொறுப்பேற்கும் போது அந்தச் சபை எந்தவித வருமானமுமற்ற நிலையிலேயே காணப்பட்டது.

எனினும் தற்போது அது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு வழிகளில் சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான புதிய திட்டங்களை முன்வைத்துள்ளேன்.

அபிவிருத்திச் செயற்பாடுகள் வாழும் மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ற வகையில் இடம்பெறுகின்றன. இதனால் அபிவிருத்தியில் தமிழ் மக்கள் புறக்கணிப்பு என்ற வார்த்தைக்கு இடமில்லாமல் போயுள்ளது.-என்றார். (ச)

# காட்டு யானை தாக்குதல்; உடன் தடுத்து நிறுத்துங்கள்

## விவசாயிகள் வேண்டுகோள்



பொத்துவில்,நவ.21

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சங்கமங்கண்டி, றக்காவத்தை போன்ற இடங்களில் இந்த ஆண்டு நெற்செய்கை பண்ணப்பட்டுள்ள இடங்களில், பயிர்களுக்கு காட்டு யானைகளினால் ஏற்படுத்தப்பட்டு வரும் சேதங்களைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கமங்கண்டி, றக்காவத்தை போன்ற இடங்களில் விளைகின்ற நெற் பயிர்களை யானைகள் சேதப் படுத்தி வருகின்றன. விதைப்பு முதல் இதுவரை பல தட வைகள் பயிர்களைச் சேதப்படுத்தியுள்ளன என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

வறுமை நிலையில் வாழ்ந்து வரும் விவசாய செய்கையாளர்கள், வங்கிகளிலும் மற்றும் ஏனைய வழிகளிலும் கடன்களைப் பெற்றே விவசாயத்தை மேற்கொண்டு அதனை நம்பி வாழ்க்கை நடத்திவருகின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

எனவே, உரிய அதிகாரிகள் காட்டு யானைகளின் தாக் குதலைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

# வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில்

நுவரெலியா,நவ.21

கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் காரணமாக ரம்பொடை, வெவன்டன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட 61 குடும்பங்களையும் தற்காலிக முகாம்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பெருந்தோட்ட அமைச்சின் காணியொன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்தார்.

பெருந்தோட்ட அமைச்சின் செயலாளருடனும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருடனும் கலந்துரையாடி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அவர் கூறினார். (ச)



கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்துக்கும் இலங்கைக்கான பிரிட்டன் பிரதித் தூதர் ரொபி புலொகுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை இடம்பெற்றது.


# இரட்டைக் கொலை; அறிக்கை சமர்ப்பிப்பு

இரத்தினபுரி,நவ.21

கஹவத்தை, கெட்டகெத்தன பிரதேசத்தில் இறுதியாக இடம்பெற்ற இரட்டைக் கொலைக்கு எதிராக 13 சாட்சிகளடங்கிய விசாரணை அறிக்கையை பெல்மடுல்ல நீதிவான் நீதிமன்றத்தில் இரகசிய பொலிஸார் நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை சமர்ப்பித்தனர்.

இந்தநிலையில், குறித்த கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ச)

# கணினிகள் அன்பளிப்பு



மட்டக்களப்பு,நவ.21

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொதுநிறுவனங்களுக்கு கணினிகளை பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கியுள்ளார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் எம்.சி.அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உட்பட பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பிரதிஅமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் நிதியொதுக்கீட்டில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று பிரதி அமைச்சரின் ஊடக இணைப்பாளர் முகம்மட் சஜி தெரிவித்தார். (ச)

# கொள்ளைகளுடன் தொடர்பு; நாத்தாண்டியாவில் 2பேர் கைது

நாத்தாண்டிய,நவ.21

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் நாத்தாண்டிய பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். மாரவில பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே, சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் படி வென்னப்புவ, கொஸ்வத்த ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யும்போது சந்தேக நபர்களிடம் இருந்து நகைகள் சில பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை மாரவில நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (ச)

# ஆயித்தியமலை பாடசாலை மாணவர்கள் திடீர் சுகவீனம்

மட்டக்களப்பு,நவ.21

மட்டக்களப்பு - ஆயித்தியமலைப் பகுதியிலுள்ள பாலர் பாடசாலையொன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் ஏழு பேர் திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு தோல் அரிப்பு, குமட்டல், வாந்தி, தலைசுற்று போன்ற அறிகுறிகள் தென்பட்டதால் ஆயித்தியமலைக் கிராம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

முதலில் இரு மாணவர்கள் திடீர் சுகவீனமுற்றதுடன், பின்னர் மேலும் ஐவர் பாதிக்கப்பட்டனர்.

கடந்தவாரம் கம்பளை, பலாங்கொடை, கண்டி ஆகிய பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் திடீர் சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டமை பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

# நல்லாட்சிச் செயலமர்வு

கல்முனை,நவ.21

தகவல் வள முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் நல்லாட்சி தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தச் செயலமர்வு கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்டது.

குறிப்பிட்ட செயலமர்வு உள்ளூராட்சி நிறுவனங்களின் நல்லாட்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

# புனரமைப்பின்றி எருவில் பிரதான வீதி

எருவில்,நவ.21

மட்டக்களப்பு, மன்முனை, தென் எருவில்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட எருவில் பிரதான வீதி பல வருடங்களாக புனரமைப்பின்றி காணப்படுவதால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மஹிந்தசிந்தனைவேலைத் திட்டத்தின் கீழ் பல கிராமங்கள் கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. அதேபோன்றுதான் இந்த வீதியும் 100 மீற்றர் எல்லையுடன் முற்றுப் பெற்றுவிட்டது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த வீதியால் அதிகளவான மக்கள் பயணிப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த வீதியை முழுமையாக புனரமைத்துத் தரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். இதுவரை இருந்த நோய் நீங்கும். பணவரவு உண்டு.

**இடபம்:** யதார்த்தமாகப்பேசி அனைவரையும் வியக்கவைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். மாணவ, மாணவிகளின் நினைவுத் திறன் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. உங்களைப் பற்றி தவறாக சிலர் பேசினாலும் அதற்காக கவலைப்படாதீர்கள். பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசை வாட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**கடகம்:** தாயாரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். எந்தச்செயல்களுக்கு போராட்டத்தின் மத்தியிலேதான் வெற்றி கிடைக்கும்.

**சிங்கம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். தாயாரின் உடல் நிலை சீராக அமையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கன்னி:** பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கியமுடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். தந்தையின் உடல் நலம் சீராகும். சொந்தம்-பந்தங்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

நாளை

கார்த்திகை -07 வியாழக்கிழமை 22.11.2012
திதி: நவமி பி.ப. 01.09 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ. 06.10 வரை
சுபநேரம்: 07.41 - 09.11 வரை
ராகுகாலம்: 01.41- 03.11 வரை

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரியும். தூய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.

**தனுசு:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். தந்தைவழிச் சொத்திலிருந்த பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**மகரம்:** சிக்கனமாக இருக்கவேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். யாருக்கும் பிணை கொடுக்கவேண்டாம்.

**கும்பம்:** குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதர வகையில் செலவுகள் இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**மீனம்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் உடல்நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் மதிப்பு கூடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | 7 | | 6 | 9 | |
| | | | 9 | | | | | 4 |
| 1 | | 4 | 3 | 2 | | 5 | | |
| 3 | 4 | | | 1 | | 7 | 5 | 6 |
| | | | | | | | | |
| 5 | 1 | 6 | | 3 | | | 4 | 2 |
| | | 7 | | 9 | 2 | 1 | | 3 |
| 2 | | | | | | | | |
| | 3 | 9 | | 4 | 7 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 3 | 2 | 1 | 9 | 8 | 5 | 7 |
| 5 | 2 | 8 | 6 | 7 | 3 | 9 | 1 | 4 |
| 9 | 1 | 7 | 5 | 4 | 8 | 6 | 2 | 3 |
| 8 | 9 | 2 | 4 | 3 | 1 | 7 | 6 | 5 |
| 3 | 4 | 5 | 7 | 6 | 2 | 1 | 8 | 9 |
| 6 | 7 | 1 | 8 | 9 | 5 | 4 | 3 | 2 |
| 7 | 3 | 9 | 1 | 2 | 6 | 5 | 4 | 8 |
| 1 | 5 | 4 | 3 | 8 | 7 | 2 | 9 | 6 |
| 2 | 8 | 6 | 9 | 5 | 4 | 3 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




இப்போது விற்பனையில்

அச்சமில்லா இலங்கைக் குடியரசைக் காண ஏங்குகிறேன்!

கையொப்பமிட்டதன் நோக்கம் என்ன?



சிதைந்துபோன சிவன் வளாகமும் மறைந்துபோன வழமைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெவ்வேறு இடங்களில் ஐந்து சடலங்கள் மீட்பு

கொழும்பு,நவ.21

வெவ்வேறு இடங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை 5 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிரியெல்ல, முதுன்கொடுவப் பகுதியில் எரியுண்ட வீடு ஒன்றிலிருந்து இரு சடலங்களும்,

புளத்சிங்கள பகுதியிலிருந்து இனந்தெரியாத 3 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எரியுண்ட வீட்டிலிருந்து 32 வயதான தாயினதும் அவரது 7 வயதான மகனினதும் சடலங்களே கிரியெல்ல பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச)



சுயாதீன நீதித்துறைக்கு மக்களின் ஆதரவைக் கோரி சிவில் சமூக குழுக்களின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் துண்டுப் பிரசுர விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## சிவப்பு மழை குறித்து ஆராய விசேட வைத்தியர்கள் குழு

கொழும்பு,நவ.21

செவனகல பகுதியில் பெய்த சிவப்பு மழை தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சின் ஆறு விசேட வைத்தியர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.


இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு பொரளை வைத்திய ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்கவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்தார்.

இதற்கமைய நுண்ணுயிர்கள், நீர், பக்ரீறியா தொடர்பிலான இந்த ஆய்வுக்குழு சிவப்பு மழை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின் பிரகாரம், இந்த மழையினால் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

## சூழல் பாதிப்புகளால் அழிவடையும் ஆமைகள்

### சூழலியலாளர்கள் எச்சரிக்கை



கொழும்பு,நவ.21

இலங்கைக்கே உரித்தான ஆமைகள், அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சூழலியலாளர்கள் தெரிவித்தனர்.

இவற்றில் வெள்ளை ஆமைகள் மற்றும் நட்சத்திர ஆமைகள் முக்கியமானவை என்று சூழலியலாளர் சஜீவ சமீகர தெரிவித்தார்.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக குறித்த விலங்குகள் வாழ்வதற்கான சூழல் பாதிக்கப்படுவதே ஆமைகளின் அழிவுக்குக் காரணம் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

சூழலில் அதிகளவிலான இரசாயனப் பொருள்கள் சேர்தல் மற்றும் ஆமைகள் சுதந்திரமாக திரியும் வனப் பகுதிகள் அழிக்கப்படுதலும் இதற்கான மற்றும் முக்கிய காரணங்கள் என்று அவர் கூறினார்.

கடந்த காலங்களில் திரட்டப்பட்ட தரவுகளில் இருந்து இந்த விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்கிறார் சூழலியலாளர் சஜீவ சமீகர (ச)

# நவீன முறையில் கணக்காய்வுகள்

### இறைவரித் திணைக்கள ஆணையாளர் சொல்கிறார்

கொழும்பு,நவ.21

கணக்காய்வு நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் மல்லிகா சமரசேகர தெரிவித்தார்.

கணக்காய்வு நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார் அவர்.

உள்நாட்டு இறைவரிகள் தொடர்பான தரவுகளை மாற்றியதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என்றும்-

இதுதொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலும் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ச)

> உள்நாட்டு இறைவரிகள் தொடர்பான தரவுகளை மாற்றியதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

## போலி கையெழுத்து; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கல்வி அமைச்சின் செயலாளரினது கையெழுத்தை இட்டதாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

சந்தேகநபரின் பிள்ளையை றோயல் கல்லூரியில் சேர்க்கும்படி கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொள்ளும் வகையில்கடிதமொன்றை எழுதி அதனைக் குறித்த நபர் பாடசாலையில் சமர்ப்பித்துள்ளார்.

இந்தக் கடிதம் தொடர்பில் சந்தேகம்கொண்ட அதிபர், கறுவாத்தோட்டம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். கைது செய்யப்பட்ட நபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, இந்தக் கடிதத்தை மற்றுமொரு நபர் தன்னிடம் தந்ததாகக் கூறியுள்ளார். (ச)

## மாகாண சபை முறைமை அடுத்த வருடம் இரத்து

### ஜோன் செனவிரட்ண திட்டவட்டம்

கொழும்பு,நவ.21

அடுத்த வருடம் மாகாண சபை முறைமை இரத்துச் செய்யப்படும் என்று பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

குருவிட்ட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன் றில் உரையாற்றும்போதே அவர் மேலும் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபைகள், பணத்தை செலவிடும் நிறுவனங்களாக மாறிவிட்டன என்று அவர் கூறினார்.

மாகாண சபைகளிடம் ஏதேனும் வேலைகள் இருந்தால், இந்த ஆண்டிலேயே செய்து கொள்ளுங்கள். பெற்றுகொள்ள வேண்டிய பணத்தை இந்த வருடமே பெற்று கொள்ளுங்கள் என்று அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளை ஏற்படுத்திய ஐக்கிய தேசியக்கட்சி அவற்றை இரத்துச் செய்ய இணங்கியுள்ளது. இதனால் அடுத்த வருடம் மாகாண சபைகள் ஒழிக் கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## போதைப்பொருள் வர்த்தகருக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வ்ழங்கல்

### கோட்டை நகரசபைத் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.21

போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என்று கோட்டை நகரசபைத் தலைவர் ஜனக ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோட்டை பிரதேசத்தில் போதைப் பொருள் விற்பனை செய்யும் தரப்பினருடன் பொலிஸார் தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

போதைப் பொருள் ஒழிப்பைத் தடுப்பதற்கு கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 80 வீதமான அதிகாரிகள் ஆதரவளிக்கும் அதே வேளை, 20 வீதமானவர்கள் அதற்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

கோட்டையில் சட்ட விரோத மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதனைக் குறித்த வர்த்தகர்கள் விற்பனை செய்வதும், பொலிஸார் அவர்களைப் பிடிப்பதும் ஒரு வியாபாரமாக மாறியுள்ளது- என்றார். (ச)

## உத்தியோகபூர்வ இல்லங்கள் இன்றி நெருக்கடியில் வைத்திய அதிகாரிகள்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.21

பெரும்பாலான வைத்திய அதிகாரிகளுக்கு வைத்தியசாலை வளாகத்தினுள் உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத காரணத்தினால் பல்வேறு பிரச்சி னைகள் ஏற்படுகின்றன என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது சிலருக்கு மாத்திரமே உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் நலிந்த ஹேரத் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதாரத் துறைசார் உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தியபோதிலும் அதற்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

சிறந்த வைத்திய சேவையை வழங்குவதற்கு வைத்திய சாலை வளாகத்தினுள் வைத்திய அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில், சுகாதார அமைச்சிடம் வினவியபோது அதற்கான தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் குறிப்பிட் டார். (ச)

> சிறந்த வைத்திய சேவையை வழங்குவதற்கு வைத்திய சாலை வளாகத்தினுள் வைத்திய அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் அவசியம்

## ஆடைப் பொதிகளுக்குள் கேரள கஞ்சா

### மாட்டினார் சந்தேகநபர்



கொழும்பு,நவ.21

ஆடைப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ள 15 கிலோ கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவைக் கடத்தி வந்த மாத்தளை பிரதேச நபரொருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

23 இலட்சம் ரூபா பெறுமதியான இந்தக் கஞ்சா [illegible] பொதிகளுக்குள் மறைத்தே சென்னையிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இந்தியாவுக்கு தினமும் சென்று வருபவர். இவர் ஆடை வியாபாரத்தில் ஈடுபடுபவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் துர்க்கா பொத்தகச்சோலை, நீதினி முகவர்
தபாலகம் ஆகிய ஸ்தாபனங்களின்
உரிமையாளர்களான
திரு. சபா. புஷ்பநாதன் - திருமதி சறோஜினிதேவி
தம்பதியரின் செல்வப்புதல்வி

## ஜனனி புஷ்பநாதன்

**Janani Pushpanathan B.Sc (S/L), M.Sc (uk)**

இன்று (21.11.2012) புதன்கிழமை United Kingdom,
Teesside University
Best Wishes M.Sc ( International Management)
பட்டம் பொறுகின்றார். மேலும் பல்கலையும்
கற்று பல்லாண்டு வாழ்க என ஜனனியை
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும் :
வயம்ப பல்கலைக்கழக நண்பிகள். 021 2240009

(சு/1911)(6.7.8)

---

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**

## 2013 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

1.கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- **28.11.2012** நண்பகல் **12** மணி வரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- **29.11.2012** மு.ப **10** மணி வரை
3.கேள்வி திறக்கப்படும் திகதி :- **29.11.2012** மு.ப **11** மணி
4. கேள்வி தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித் திகதி :- **06.12.2012**

**2013 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 01 | 1,343,000.00 | 13,430.00 | 1,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை | 02 | 660,000.00 | 6.600.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக விவரங்களை **03.11.2012** ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்.

*நகராட்சிமன்றம்*
சாவகச்சேரி
20.11.2012.

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம் சாவகச்சேரி.

(C/2937)(2-6-7)

---

## கேள்வி அறிவித்தல் – 2013

## கரைச்சிப் பிரதேச சபை – கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்: அலுவலக நாள்களில் மு.ப 8.30- பி.ப 3.00 மணி வரை 20.11.212 - 26.11.2012
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 28.11.2012 - மு.ப 9.30 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி: 28.11.2012 மு.ப 10.30 மணி
கேள்வி திறக்கும் இடம்: கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில்கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும் . இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, VAT நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT, VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | | |
| 1 | கல்லாறு | 10,000.00 | 1,000.00 | 320,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் | 20,000.00 | 1,000.00 | 711,000.00 |
| 3 | ஜெயந்திநகர் | 10,000.00 | 1,000.00 | 361,000.00 |
| 4 | கண்டாவளை | 10,000.00 | 1,000.00 | 122,000.00 |
| 5 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 655,000.00 |
| 6 | கிளிநொச்சி | 40,000.00 | 1,000.00 | 3,005,000.00 |
| 7 | உருத்திரபுரம் D/8 | 10,000.00 | 1,000.00 | 60,000.00 |
| | கோழி இறைச்சிக் கடை | | | |
| 1 | இரணைமடு | 10,000.00 | 1,000.00 | 365,000.00 |
| 2 | கிளிநொச்சி இல -02 | 40,000.00 | 1,000.00 | 1,420,000.00 |
| 3 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | 200,100.00 |
| 4 | கிளிநொச்சி இல -01 | 40,000.00 | 1,000.00 | 1,300,000.00 |
| | ஆட்டிறைச்சிக் கடை | | | |
| 1 | கிளிநொச்சி | 10,000.00 | 1,000.00 | 311,000.00 |
| 2 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | 70,000.00 |
| | துவிச்சக்கர வண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | | | |
| 1 | கிளிநொச்சி | 20,000.00 | 1,000.00 | 672,320.00 |

**நிபந்தனைகள்**

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் , கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு
4. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்
5. மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திலிங்கம் குகராசா** தவிசாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C.1902)(2-6-7)

---

**யா//கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)**

## புதிய அதிபரை வாழ்த்துகின்றோம்



யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
(ஸ்ரான்லி கல்லூரி) யின் புதிய அதிபராக

### செல்லையா இளங்கோ

அவர்கள் 14.11.2012 ஆம் திகதியன்று உத்தியோகபூர்வமாக பதவியேற்றுள்ளதையிட்டு, பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சியடைந்துள்ளது. அவருக்கான வரவேற்பு விழாவை அன்றைய தினம் பாடசாலைச் சமூகம் நடத்தியதுடன் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு அதிபரை வாழ்த்தினார்கள். பாடசாலை சமூகமும் அவரை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றது. ஆளுமை மிக்கதொரு அதிபரை தெரிவு செய்து எமக்கு தந்த கல்விசார் சமூகத்துக்கும், நலன்விரும்பிகளுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதிய அதிபரின் பணி சிறக்க வருக! வருக! என வரவேற்புதுடன், வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்,
**யா/ கனகரத்தினம் ம.ம.வி.**

(25611)(45.6.7)

---

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை A-9 வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் ஆறு அறைகளுடனும் வாகன தரிப்பிடத்துடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு.0718457267

(25647)(2.6.7)

---

## கோழிக்குஞ்சு விநியோகம்

## BAHIRAHA No -1

புறொயிலர் குஞ்சுகள், 24.11.2012 விநியோகிக்கப்படும்


- ★ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை - தொ.பே. 077 6090 926
- ★ கதிர்வேலாண், கிளிநொச்சி - தொ.பே. 077 2046 803
- ★ ஜெவ்ஸி பாம், பருத்தித்துறை - தொ.பே. 077 3541 771

(25651)(45.6.7)

---

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சாந்தகுமாரன்



கணபதிப்பிள்ளை சாந்தகுமாரன் நேற்று முன்தினம் (19.11.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ( ஓவசியர்) - விசாலாட்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற துரைராசா (பொலிஸ் சார்ஜண்ட்) - தவபாக்கியசிகாமணி தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் கிருசானி, டனுசா, புகழமுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இசை ஞானவதி (கனடா), ஜெயந்தி (வவுனியா), ஆனந்தி (மல்லாவி), சாந்தி (மல்லாவி), ஆனந்தகுமாரன், ஜெயந்த குமாரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலச்சந்திரன் (கனடா), நற்குணசிங்கம் (வவுனியா), பரராஜசிங்கம் (அதிபர்), ஜெகன்மோகன், றஜனி, ரட்ணா (இந்தியா), தவனேஸ்வரி (ஆசிரியை, கனகபுரம் மகாவித்தியாலயம்), சிவனேஸ்வரி (உடுப்பிட்டி), பவனேஸ்வரி (கிளிநொச்சி), காலஞ்சென்ற சுகந்தராஜ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 70, ஜெயந்திநகர் கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (22.11.2012) வியாழக்கிழமை ஆனந்த நகர் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 70, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

(25319)(8-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## புகையிலைச் செய்கை வடமராட்சியில் மும்முரம்

### நாற்று ஒன்றின் விலை ரூபா 4

வடமராட்சி, நவ.21

வடமராட்சி பிரதேசத்தில் புகையிலைப் பயிர்ச் செய்கை ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் பிரதேச விவசாயிகள் தோட்ட நிலங்களைக் கொத்திப் பண்படுத்தி புகையிலை நாற்றுக்களை நடுகை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் மும்முரமாக புகையிலைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் பொலிகண்டி, மந்திகை ஆகிய இடங்களில் புகையிலை நாற்று ஒன்று 4 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (3-8)

## வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள்


### சிக்கியவர்கள் மீது நடவடிக்கை

சாவகச்சேரி நகரசபையின் முதலாம், இரண்டாம் வட்டாரங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது நேற்று முன்தினம் நகரசபை சுகாதாரப் பகுதியினரும், வருமானப் பகுதியினரும் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்டனர்.

வியாபார நிலையம் நடத்துவதற்காக இந்த வருடத்துக்குரிய வியாபார உரிமச் சான்றிதழ் வைத்திருக்காத 25 இக்கு மேற்பட்ட வர்த்தகர்கள் இந்த அதிகாரிகளிடம் அகப்பட்டனர்.

இந்த வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வியாபார உரிமச்சான்றிதழ் காட்சிப்படுத்தாத வர்த்தகர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)



செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சூரன் சங்கார நிகழ்வின் போது- (3-253)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தீவகக் கல்வி வலயத்தில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் வகைII பாடசாலைக்கு அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெற்றிடத்துக்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் தரத்தனைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து வேறு வலயங்களில் இருந்து வரும் அதிபர் தர விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

## மாவிட்டபுரத்தில் கார்த்திகைத் திருநாள்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருக்கார்த்திகைத் திருநாள் 'குமாராலயதீபம்' எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் 3.00 மணிக்கு சாயரட்சைப் பூசையும் 3.30 மணிக்கு ஷண்முகார்ச்சனையும் மாலை 5.00 மணிக்கு இரண்டாம் காலப் பூசையும் தொடர்ந்து 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சுவாமி வெளிவீதிவலம் வருதல் சொக்கப்பானை எரித்தல் என்பனவும் இடம்பெறவுள்ளன. (3-86)

## வடமராட்சியில் 3 ஆம் தவணைப் பரீட்சை

வடமராட்சி, நவ.21

வடமராட்சி வலயப்பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்கான பரீட்சை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகின.

இந்தப்பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதியுடன் முடிவடையும் என்று வடமராட்சி வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-8)

## மின் இணைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,நவ.21

சங்கானை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்துக்கு மின் இணைப்பு வழங்குவதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 20ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார். (3-86)

## சிறுவணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சிறு வணிக முகாமைத்துவச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

## சத்தியசாயி பாபாவின் அவதார தின நிகழ்வு

பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 87 ஆவது அவதார தின நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் பிற்பகல் 1.15 மணிவரை நடைபெறவுள்ளது. (3-8)

## 31 ஆம் நாள்நினைவஞ்சலி

அன்னை மடியில்
25.07.1958

அம்பாள் அடியில்
24.10.2012



**அமரர் சோமசுந்தரம் தனராசன்**

( ஊர்காவற்றுறை
ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர்)

குடும்பத்தின் குல விளக்காய் உறவுகளின் உத்தமனாய்
நண்பர்களின் நாயகனாய்
முத்துச்சிரிப்பில் முழுமதியாய் - வாழ்ந்து
இறையடி சேர்ந்தீர்களே மாமா!
கண்ணீருடன் கதறுகின்றோம்
கனவாகாதோ இவைகளென்று

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை. ஜெ. மயூரன்

(25643)(6.7.8)

## மரண அறிவித்தல்

### திருமதி தில்லையம்பலம் மகேஸ்வரி



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரம், ஊரதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தி.மகேஸ்வரி 20.11.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா,கண்மணி ஆகியோரின் அன்பு மகளும், தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், சத்தியசீலனின்(கனடா) பாசமிகு தாயும், பிறேமகலாவின் அன்பு மாமியும், ரூபிகா, அனுஜன், வனுஜன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா,சிவபாக்கியம், செல்லம்மா, பூரணம், அமிர்தம்மா மற்றும் யோகம்மா (கொழும்பு), சறோஜினிதேவி (யாழ்ப்பாணம்),தவக்குமார்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானம்மாவின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

68/18,மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம். (25636)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

**கார் விற்பனைக்கு**

16-XXXX நிசான் FB 11ரக வெள்ளை நிறக் கார் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 4124213, 077 2963262 (25048)(5-6-7)

**இணையத்தில் சுயமாக வேலை செய்வதற்கு**

Part Time | Full Time

மாதம் ஒரு லட்சம் (RS 100, 000/-) வரை

Data Entry, Web Designing, Face Book, Copy Typing, Photoshop, C++, Java, Accounting......

உட்பட 300 க்கும் மேற்பட்ட வேலைகள்

ON LINE JOBS

International Master Card வேலை விளக்கம்

ACS

Tel : 077 3967334/077 0071835

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m தொலைவில்

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

பற்றியில் ஓடும்மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
இன்சுரன்ஸ் லைசன்ஸ் தேவையில்லை.

தொடர்பு: 077 8539333 (25632)(6-7)

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உடுவில் மானிப்பாய் வீதியில் 7¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 043 3771/021 224 0973 (23520)(5-6-7)

**வாகனம் விற்பனைக்கு**

பேக்கரி தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய (பாண் விற்பனைக்கு) கண்ணாடிக் கூட்டுடன் வடிவமைக்கப்பட்ட [illegible] விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0776390319


## ஆனைப்பந்தி ஸ்ரீ அருள்மிகு சிவகுருநாதசுவாமி பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ். நகர் ஆனைப்பந்தி அருள்மிகு சிவகுருநாத சுவாமி தேவஸ்தானத்தில் நிகழும் கார்த்திகை மாதம் 23-11-2012 வெள்ளிக்கிழமை காலை 10.10-10.37 மணிவரையுள்ள சுபநேரத்தில் "ஆகமகிரியர் பிரவிணா" சிவஸ்ரீ பா.பாலமனோன்குருக்கள் தலைமையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

தேவஸ்தானத்தினர்
சி.தயாகுணலிங்கம்
தொடர்பு-0776624432 (25618)(6.7)

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY



**அப்புத்துரை இராஜரட்ணம்**

(உரிமையாளர்:
ராஜன் பான்சி ஹவுஸ்
யாழ்ப்பாணம்)

Best Wishes

இன்று (21.11.2012) புதன்கிழமை
தனது ஐம்பதாவது அகவையைப் பூர்த்தி செய்யும்
எங்கள் அன்பு அப்பா அப்புத்துரை இராஜரட்ணம் அவர்கள்
மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் அருளாசி பெற்று
மேலும் பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் மங்கலமாய்
வாழ வேண்டும் என்று வாழ்த்தும்
அன்புள்ள மனைவி, பிள்ளைகள்.
மூளாய், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர் திரு. கு. டமேஸ்வரனின் தந்தையார் பிச்சாண்டிகுமாரன் அவர்களின் 31 ஆவது நினைவு நாளில் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
ப.நோ.கூ.சங்கம், புங்குடுதீவு, நயினாதீவு சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டார் எனது அருமை சம்பந்தியார்-வட்டுக்கோட்டை, அராலி

**சிவஸ்ரீ ஐயாத்துரை குருக்கள் சிதம்பரநாதசர்மா**

இவர் தனது இளமைக் காலங்களில் அராலி, வட்டுக்கோட்டை முதலிய இடங்களில் பல ஆலயங்களில் அர்ச்சகராக கடமைபுரிந்து பரிபாலன சபையினரதும் அடியார்களினதும் மக்களினதும் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ளமை. பாராட்டத்தக்கது அண்மையில் நான் கொழும்பில் சில காலம் வைத்திய தேவைக்காக சென்ற பொழுது என்னுடன் மிகவும் நெருக்கமாக பழகி பல ஆலோசனைகளையும் உதவிகளையும் புரிந்தமை என் உள்ளத்தில் இன்றும் பதிந்துள்ளது.


அன்னாரின் சிவப்பேறு எமது குடும்பத்தினருக்கு பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி இருக்கின்ற வேளையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை - விழுப்பத்து வேண்டும் பனுவற் துணிவு

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
கிரியா கலாப முக்தாமணி
சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், பிரதம குரு, சுதுமலை,
மானிப்பாய், இலங்கை. 021 225 5641

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து சாமியாப்பிள்ளை



யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைப், பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து சாமியாப்பிள்ளை நேற்று (20.11.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - நேசம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மிக்கேல் - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிறிஜெற்றின் அன்புக் கணவரும்றோகினி, மக்ஸ்வேல் (றோகான்-கனடா) டெலிசியா (ஆசிரியர், கிளி கோயில் வயல். சி.சி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் தேவதாஸ் (பனை அபவிருத்திச் சபை) யமுனா (கனடா) சகீன்ஸ்குமார் (கிரேசா தளபாட நிலையம்) ஆகியோரின் மாமனாரும், டறின், யெறின், விதுசியா, ஐஸ்வர்யா, வர்ஷா, அஸ்வினி, ரூபான், யஸ்விகன், திசோன், டிஜுசான் ஆகியோரின் பேரனும் காலஞ் சென்ற வண்ணமணி மற்றும் பாக்கியாநாதர் (கனடா) பெஞ்சமின் (செல்வராசா - மின் இணைப்பாளர்) சிங்கராசா (பொன்ராசா- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செபரட்ணம், திரேசம்மா (உரிமையாளர் திரேசா தளபாட நிலையம்) காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (ஐயா) மற்றும் ஜெயமலர், தவமணி, ரதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனைத் திருப்பலிநாளை (22.11.2012) வியாழக்கிழமை பி.ப 3.30மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் நடைபெற்று புதவுடல் நல்லடக்கத்துக்காகபுனிதகொஞ்சேஞ்சிமாதசேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
25, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4759 mspillai@togers.com

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 02 | 21 |
| ★ | ★ |
| 01 | 11 |
| ★ | ★ |
| 1957 | 2007 |

**அமரர் வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

திதி : பூர்வபக்க கார்த்திகைமாத துவாதசி

ஆண்டுகள் ஐந்து ஆனது நீங்கள்
மீண்டெழுந்து ஏன் இங்கு வரவில்லை
அன்பின் பண்பிடமாக குடும்பத்தின் குலவிளக்காக
பாசத்தின் பிறப்பிடமாக விருந்தோம்பும் சிகரமாக
அறிவிளக்கின் வழிகாட்டியாக வாழ்ந்து
கார்த்திகை மாத துவாதசித் திதியில்
சிவபதம் அடைந்தீர்களே உங்கள் ஆத்மா சாந்தியடைய
எந்நாளும் ஆண்டவனை வேண்டிநிற்கின்றோம்.

வறணி, இயற்றாலை, வறணி. (25265)(6.7.8) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றிவரும்

**கா. புஸ்பநாதன்**

அவர்கள் இன்று (21.11.2012) புதன் கிழமை முதல் வடமாகாண பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகப் பதவி ஏற்பதனை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உப அஞ்சல் அலுவலகர், இயக்கச்சி.
உப அஞ்சல் அதிபர், அஞ்சல் சேவக ஊழியர்கள்.

## வீடு வாடகைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் st.Ann's Lane இல் விசாலமான வரவேற்பறை 4 படுக்கையறைகள், 2 குளியலறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் கூடிய 3 1/2 பரப்பு காணியில் அமைந்த வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு-0774527671, 0217903444

## வாகனம் விற்பனைக்குண்டு

TATA LPT 709
அலுமினியம் புல்பொடி
தொடர்பு: 077 8449 763
(25860)(6-7-45)

## வாடகைக்கு

சாவகச்சேரி நகரிலிருந்து டச்சு வீதியில் 200 மீற்றர் தூரத்தில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கடை அறை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 8333 875
(சி/2828)(6-7-45)

## Spoken English Class

உங்கள் தகுதிக்கேற்ப மூன்று மாதத்தில் ஆங்கிலம் சரளமாக பேசக் கூடியளவு கற்பிக்கப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு
Spoken English
at The Science Corner
Ram : 072 2008022

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 22 |
| ★ | ★ |
| 07 | 10 |
| ★ | ★ |
| 1920 | 2012 |

# A.M. சுப்பிரமணியம்

கடந்த 22.10.2012 திங்கட்கிழமை அமரத்துவமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய அழைப்பு இன்று (21.11.2012) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்றையதினம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தவறாது கலந்து கொள்ளுமாறும், இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

No-07, உடையார் ஒழுங்கை, பழம் றோட், கந்தர்மடம்.
குடும்பத்தினர்.
(25858)(9.14)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரைக் குருக்கள் சிதம்பரநாதசர்மா

(வட்டுக்கோட்டை)



செட்டியார்மடம், அராலியைப் பிறப்பிடமாகவும், வட்டுக் கோட்டை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரைக் குருக்கள் சிதம்பரநாதசர்மா (19.11.2012) திங்கட்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரைக்குருக்கள் - அமிர்தம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற லலிதாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற பரமேஸ்வரிஅம்மாவின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற கணேசராஜாக்குருக்களின் மைத்துனரும், அமிர்தகலா, வசந்த கலா, சுகந்தகலா, ஜெயந்தகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விக்னேஸ்வரசர்மா மற்றும் புருஷோத்தமன், ஸ்கந்தராஜசர்மா, நதிசுதசர்மா ஆகியோரின் அன்பு மாமனும், சுமுகன், ஹர்ஷன், ஆரணி, பவித்ரன், ஜெகன், சிந்துஜன், மனஸ்வினி, நிஷேவிதா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2012) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் திருஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நவாலி வழுக்கையாறு மயானத்தில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை.
பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா (சகோதரர்)

# மரண அறிவித்தல்

### கலைமாமணி, கலாபூஷணம் பொன் தெய்வேந்திரம்

**(ஓய்வு பெற்ற கல்வி நிர்வாக சேவை அதிகாரி, உப அதிபர், கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)**



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தெய்வேந்திரம் அவர்கள் (19.11.2012) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், சுழிபுரம் பெரியதம்பி - சிதம்பர நாச்சியார் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமணியின் அன்புக் கணவரும், திருமதி ஜெயராணி சத்தியநாதன் (ஆசிரியை வ/சித்தி விநாயகர் வித்தியாலயம், கூமாங்குளம்), திருமதி கௌரிமனோகரி நந்தகுமார் (வைத்திய அதிகாரி, பொது வைத்தியசாலை வவுனியா), கலாநிதி சிவரூபன் ( அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியநாதன் (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), நந்தகுமார் (உதவிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்), நளினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும், சிந்துர்க்கா, சிவதுர்க்கா, மாதுமை, சேயோன் (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ் சென்றவர்களான முத்துக்குமாரு ( ஓய்வு பெற்ற இசை விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்), சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான விசுவநாதன், தெய்வநாயகி மற்றும் முத்துலட்சுமி (பிரான்ஸ்), சண்முகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2012) வியாழக்கிழமை வைத்தியர்விடுதி, பொது வைத்தியசாலை, வவுனியாவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்,
வைத்தியர்விடுதி, பொதுவைத்தியசாலை, வவுனியா.
தொ.பே. இல. 024 222 1198
(சி/1915)(8-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன் - மஹிந்த கூட்டறிக்கை என்னாயிற்று '13' பறிக்கப்பட்டால் யார் அதற்குப் பொறுப்பு?

## ஐ.நா. சபையா; இலங்கை அரசா எனக் கேட்கிறார் மனோ

## தொலைக்காட்சி 'ஜனஹண்ட' நிகழ்வில் காரசார விவாதம்

ஐ.நா. செயலர் பான்கீ மூனுக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக கூட்டறிக்கை ஒன்று ஏற்கனவே விடப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டறிக்கை மூலம் ஐ.நா பொதுச் செயலருக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது? இன்று இதை நடைமுறைப் படுத்தி 13இற்கு மேலே செல்லாமல் அதனைப் பறித்துக் கொண்டால் யார் பொறுப்பு? ஐ.நா சபையா? இலங்கை அரசா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றின் சிங்கள மொழியிலான ஜனஹண்ட (மக்கள் குரல்) என்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இந்நிகழ்வில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் அங்கமான பதின்மூன்றாம் திருத்தம், இதே அரச அமைப்புக்கு முரணானது என்று சொல்கிறீர்கள். அப்படியானால், இதை உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லுங்கள். விமல் வீரவன்ச இது தொடர்பில் உயர் நீதிமன்றம் செல்வேன் என்று சொல்லி விட்டு பின்னர் ஏன் பின் வாங்கினார்?

திவிநெகும சட்டமூலத்துக்கு நீதிமன்றம் சென்றதைப்போல, இதற்கும் நாம் தயாராகத்தான் இருந்தோம். நீங்கள் ஏன் நீதிமன்றத்துக்கு போகவில்லை? நீங்கள் இது தொடர்பில் வழக்குகள் போடுவீர்களானால் உங்கள் அரசுக்குத்தான் அரசியல் நெருக்கடிகள் அதிகரிக்கும். முடிந்தால் அதைச் செய்யுங்கள்.

இந்தத் திருத்தம் இந்தியாவின் அழுத்தத்தால், அவசர, அவசரமாக கொண்டு வரப்பட்டது என சொல்கிறீர்கள். அழுத்தம் ஏற்பட நீங்கள் தமிழர்களை நடத்திய விதம் தான் காரணம். இன்றும் அதேதான் காரணம். இனி மேலும் அதுதான் நடக்கும். ஆனால், பதின்மூன்றும், மாகாணசபைகளும் அவசர, அவசரமாக கொண்டு வரப்பட்டன என்று சொல்லாதீர்கள். அது தவறு. திம்பு பேச்சு, பெங்களூர் பேச்சு, உள்நாட்டில் அரசு-அன்றைய தமிழர் விடுதலை கூட்டணி பேச்சுகள் என நடைபெற்றுதான் இந்தத் திருத்தம் அரசமைப்புக்குள் இடம் பெற்றது.

இந்தியாவில் இருந்து உங்களுக்கு மொழி, மதம், கலை, கலாசாரம் எல்லாம் வந்தன. ஆனால், அங்கு நிலவுகின்ற மொழிவாரி மாநில ஆட்சிமுறையிலான அதிகாரப் பிரிவினை மாத்திரம் வேண்டாம் என்கிறீர்கள்.

இந்த நாட்டில், சிங்கள பௌத்த சகோதர இனத்து மக்களைத் தவிர வேறு எவரும் வாழமுடியாது என்றும், வாழ்ந்தால் அடிபணிந்துதான் வாழ வேண்டும் என்றும் நீங்கள் நினைக்கிறீர்கள். அதனால் தான், எந்தவித அதிகார பிரிவினையையும் எதிர்க்கிறீர்கள். அதிகாரப் பிரிவினை என்ற கொள்கை, 1940களிலேயே கண்டிய சிங்கள தலைவர்களினாலேயே அறிமுகப் படுத்தப்பட்டது. அதிகாரப் பிரிவினையின் மூலமாக நாட்டுப்பிரிவினையை தவிர்ப்போம் என்ற கொள்கையின் அடிப்படையில் நாம் செயல்படுகிறோம். அதன்மூலம், சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களை ஒன்று சேர்ப்போம்.

உலகச் சூழல் மாறி வருகிறது. உலகத்துக்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டு நீங்கள் இனிமேலும் தப்ப முடியாது. 2009 மே 26ஆம் கொழும்பில் வெளியிடப்பட்ட பான்கீ மூன்-மஹிந்த கூட்டறிக்கையையும், அதில் தெளிவாக சொல்லப்பட்ட 'பதின்மூன்று நடைமுறைப்படுத்தப்படும்' என்ற விடயத்தையும், 'தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்தி பதின்மூன்று மேலும் அபிவிருத்தி செய்யப்படும்' என்பதையும் நாம் எமது போராட்டத்தின் மையக்கருத்தாகவும், பேசுபொருளாகவும் உலகளவில் ஏற்படுத்துவோம்.- என்றார் மனோ. (3)

## மன்னார் நீதிமன்ற தாக்குதல் வழக்கு; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

### 44வது சந்தேகநபர்க்கு மீண்டும் பகிரங்க பிடியாணை

மன்னார், நவ.21

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்குகள் ஒரே சமயத்தில் மன்னார் வடமாகாண மேல் நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்ற கட்டடத்தொகுதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சுமார் 43 பேர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஐந்து பேர் தவிர ஏனையோர் நீதிமன்றங்களின் உத்தரவிற்கமைய கட்டங் கட்டமாக பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த ஐந்து சந்தேகநபர்களும் எதிரான விசாரணை நேற்றுமுன் தினம் இரண்டு நீதிமன்றங்களிலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் குறித்த ஐவரையும் பிணையில் விடுவிக்க கோரப்பட்டது.

ஆயினும் நீதிமன்றங்களில் இடம்பெற்ற விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் பிணை மீதான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பொலிஸாரால் பட்டியலிடப்பட்டிருக்கும் 44 ஆவது சந்தேகநபரான, தலைமறைவாகியிருக்கும் சாகுல் கமிட் முகமட் முஜாகீர் என்பவரை காணும் இடத்தில் கைது செய்யும்படியான பகிரங்கப் பிடியாணை உத்தரவை மீண்டும் பிறப்பித்தார் நீதிவான்.

இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் மூன்றாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதே வழக்கு வடமாகாண மேல் நீதிமன்றில், மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது சந்தேகநபர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகளின் பிணை மனுக் கோரிக்கையை நிராகரித்து, எதிர்வரும் 30ஆம் திகதிக்கு குறித்த வழக்கை ஒத்தி வைத்தார் நீதிபதி.

இந்த வழக்கு விசாரணைகளின் போது வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் றிஸாத் பதியூதீன், நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக் உள்ளிட்ட பலர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி)




ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கேற்வே நிறுவனத்தால் புதிய ஆங்கில வகுப்புகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், தென்மராட்சி, நெல்லியடி கிளைகளில் இடம்பெற்றன. கேற்வே நிறுவன முகாமையாளர் க.நிமல்சன், யாழ்ப்பாண கேற்வே முகாமையாளரும் மாவட்ட இணைப்பாளருமான அருட்குமரன் ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து தமிழ்மொழி பெயர்ப்புடனான விளக்கப்படம் மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டு ஆங்கில

## பிரிட்டனில் செந்தமிழில் வழிபாடு



பிரிட்டன் தமிழ் ஆலயங்களின் வரலாற்றில் முதல் முறையாக சனிக்கிழமை கருவறை முதற்கொண்டு முழுமையான செந்தமிழில் வழிபாடு இடம்பெற்றது.

பிரிட்டன் கைய் விக்கம் உச்சி முருகன் ஆலயத்தில் மிகவும் சிறப்பாக தமிழ் உணர்வுடன் நடைபெற்ற இந்த வழிபாட்டில் பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் சுவிஸ் பேர்னில் நடைபெற்ற உலகச் சைவ மாநாட்டில் கருவறையில் தமிழில் வழிபாடு செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது முக்கியமானதாகும்.

பேர்ன் ஞானலிங்கேஸ்வரர் ஆலய பிரதம பூசகர் சிவருசி சசிகுமார் முற்றிலும் செந்தமிழ் மறைகளைக் கொண்டதான பக்திமயமான இவ்வழிபாட்டை நடத்தி வைத்தார். புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் ஆலயங்களில் தமிழில் வழிபாடு செய்யப்பட வேண்டிய தேவை அதிகரித்து வருகின்ற சூழலில் இது மிக முக்கியமான முயற்சியாகக் கருதப்படுகிறது. (ம)

## ஆசனவாயிலில் இரத்தினக் கற்கள் சிக்கினார் இலங்கையர்

ஆசன வாயில் வழியாக இரத்தினக் கற்களை கடத் திய இலங்கையர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப் பட்டுள்ளார். சுமார் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளன. சுஜுவன் என்ற 32 வயதான இலங்கையரே இவ்வாறு சென்னைப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

குறித்த நபர் சுமார் 32 இரத்தினக் கற்களை இவ்வாறு மறைத்து எடுத்துச் சென்றுள்ளார். மீட்கப்பட்ட இரத்தினக் கற்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (வ)

## பிற்போடப்பட்டது செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவிருந்த விஞ்ஞான பாட செயலமர்வு டிசெம்பர் முதலாம் திகதி சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ... காந்தன் தெரிவித்துள்ளார். (ம)

## ஏழ்மையான ஜனாதிபதி உருகுவேயில் முழு உலகிலுமே இவர் தான் ஒருவர்

### வருமானத்தின் 90 வீதம் அறக்கட்டளைக்கு



உலகிலேயே மிகவும் ஏழ்மையான ஜனாதிபதி என்ற பெருமையை உருகுவே ஜனாதிபதி ஜோஸ் முஜிகா (வயது 77) பெற்ள்ளார்.

லத்தீன் அமெரிக்க நாடான உருகுவே நாட்டின் அதிபராக இடது முன்னணிக் கட்சியின் ஜோஸ் முஜிகா உள்ளார். இவர் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதி பதியாகப் பதவி ஏற்றார். அப்போது அவரது சொத்து மதிப்பு 1800 டொலராக இருந்தது.

தலைநகர் மாண்டிவீடியோவில் அவருக்குச் சொந்தமான பண்ணை வீட்டில் வசித்து வரும் முஜிகா, குறித்த பண்ணையில் பெருமளவு விவசாய வேலைகளை இவரே செய்து வருகிறார். ஏனைய நேரங்களில் ஜனாதிபதியாக அரசபணிகளை மேற்கொண்டு வருகிறார். தனக்குச் சொந்தமான பழைய மொடல் காரில் சென்று காய்கறிகளை வாங்கி வருகிறார். மேலும் ஜனாதிபதியாகத் தனக்குக் கிடைக்கும் மாத வருமானத்தில் 90 சதவீதத்தை அறக்கட்டளைக்கு வழங்கி தனது அன்றாடச் செலவுக்கு 450 பவுண்ட் மட்டுமே எடுத்துக் கொள்கிறார்.

இது குறித்து பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு ஜோஸ் முஜிகா அளித்த பேட்டியில்;

என்னை மிகவும் ஏழையான ஜனாதிபதி என ஊடகங்கள் தான் கூறுகின்றன. கடினமாக உழைத்து முன்னேறத் துடிப்பவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ் வதற்காகத் தான். அதற்காக மேலும் மேலும் உழைப்பார்கள். அவர்கள் தான் ஏழை. ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. நான் ஏழை என்று என்னை நானே தாழ்த்திக்கொள்ளவும் விரும்பவில்லை என்று அழுத்தமாகத் தெரிவித்தார்.

இதேவேளை தனக்கு ஏழ்மை வாழ்க்கையைக் கற்று கொடுத்தது சிறைதான் எனவும் கூறுகிறார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியமட்ட கராத்தே போட்டியில் தங்கம்,வெள்ளி பதக்கங்களை வென்று நவீல்ட் மாணவர்கள் சாதனை



யாழ்ப்பாணம்,நவ.21

இலங்கை கராத்தே சம்மேளனத்தினரால் அண்மையில் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற தேசிய மட்டக் கராத்தே போட்டியில் கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை மாணவர்கள் ஒரு தங்கப் பதக்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் என்பவற்றைப் பெற்று சாதனை புரிந்துள்ளனர்.

தேசியமட்ட கராத்தே போட்டியில் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான காட்டா போட்டியில் ஜெ.மயூரா முதலாமிடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார்.

10 வயதுப் பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் எஸ்.லக்சனாவும், 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் கே.திலக்சனாவும் இரண்டாமிடங்களைப் பெற்று வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளனர்.

அதேவேளை நவீல்ட் பாடசாலையைச் சேர்ந்த 3 வீராங்கனைகளும், ஒரு வீரரும் சிறந்த பெறுபேற்றாளர்களாக தெரிவாகியுள்ளனர். 8 வயதுப் பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் ஜே.ஜிலோத்தனா,17 வயதுப் பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் கே.கம்சிகா, பி.தனுசியா ஆகியோர் சிறந்த வீராங்கனைகளாகத் தெரிவாகியுள்ளனர். அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான காட்டா போட்டியில் சிறந்த வீரராக கே.மதியழகன் தெரிவாகியுள்ளார். (ங-23)

## உட்கட்டமைப்பு அமைச்சு கிரிக்கெட்டில் வென்றது

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுக்களுக்கிடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உட்கட்டமைபப்பு அமைச்சு அணி வெற்றிபெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உட்கட் அணியை எதிர்த்து விவசாயஅமைச்சு அணி மோதிக்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய விவசாய அமைச்சு அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுகிந்தன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும்,ஜெனராஜ் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் உட்கட்டமைப்பு அமைச்சு அணி சார்பில் தீபராஜ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களைக்கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார்.

61 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உட்கட்டமைச்சு அணி 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியீட்டியது.

இதில் அதிகபட்சமாக ஜெனராஜ் 11 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் விவசாய அமைச்சு அணி சார்பில் துசாந்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.21

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 11 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது .

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பிற்பகல் 2 மணி

உள்ளூராட்சி அமைச்சு அணி எதிர் விவசாய அமைச்சு அணி.

மாலை 4 மணி

ஆளுநர் செயலக அணி எதிர் பிரதான செயலர் கொத்தணி (ங-23)

# மதுஷன் இரட்டைக் ஹட்ரிக் மத்திய கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், நவ.21

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச்சங்கம் நடத்தும் 13 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டி ஒன்றில் யாழ். மத்திய கல்லூரி அணி , மதுஷனின் இரட்டைக் ஹட்ரிக் சாதனையின் உதவியுடன் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியை வெற்றிகொண்டது.

கடந்த வாரம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடியது யாழ். மத்திய கல்லூரி அணி. 42 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து மத்திய கல்லூரி அணி 167 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அபாரமாக ஆடி அரைச்சதம் கடந்தார் இயஸ் பெல்மன் ( 52 ஓட்டங்கள்).அத்துடன் மதுஷன் 38 ஓட்டங்களையும், தேனுஷன் 37 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி சார்பில் ராஜ் நாராயணா 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், பிரசாந் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

42 பந்துப் பரிமாற்றங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணி சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

அதற்கமைய தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களையே பெற்றது.

இதில் அன்புஜன், மதுஷன் ஆகியோர் தலா 10 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளை சாய்த்தார். இதில் 4 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து மூன்று இலக்குகளை வீழ்த்தி, மதுஷன் ஹட்ரிக் சாதனை நிகழ்த்தினர்.

அன்றுஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும், சிங்சோன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதல் இன்னிங்ஸில் போதியளவு ஓட்டங்களை எடுக்காததால் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும் நிலைக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி அணிதள்ளப்பட்டது.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கு மீண்டும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். மத்தியின் மைந்தன் மதுஷன்.

ஆட்டத்தின் 12 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் பந்து வீச வந்த மதுஷன் மீண்டும் எதிர் அணியின் இலக்குகளை அடுத்தடுத்து கொய்து, ஹட்ரிக் சாதனை புரிந்தார்.

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் ஒரே போட்டியில் இரு இன்னிங்ஸிலும் ஹட்ரிக் சாதனை புரிந்த வீரராக மதுஷனின் பெயர் பொறிக்கப்பட்டது.

மத்திய கல்லூரியின் அபார பந்து வீச்சால் சென். ஜோன்ஸ் 'பி' அணி 17 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த போது ,ஆட்ட நேரம் முடிவுற்றது.

இதில் அதிகபட்சமாக விதுஷன் 7ஓட்டங்களை தனது அணி சார்பாகப் பெற்றார். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணிசார்பில்மதுஷன் 14 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றிருந்த யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது. (ங-23)

## மானி.இந்து மகாஜன சனிக்கிழமை மோதல்



யாழ்ப்பாணம், நவ.21

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் எதிர் வரும் சனிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ங-23)

## ஜெகநாதன் வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டம் சனி,ஞாயிறு தினங்களில்

யாழ்ப்பாணம்,நவ.21

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆவது ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர் வரும் சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களிலும் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம், நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், பூமா விளையாட்டுக் கழகம், மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம், கலைமதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி, நியூவொறியர் விளையாட்டுக் கழகம், காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழக 'ஏ' அணி, ஸ்ரார் விளையாட்டுக் கழகம், நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம், கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணி, தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம், பன்னாலை கணேசா விளையாட்டுக் கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகிய 15 கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

குறித்த போட்டிகள் யாவும் விலகல் முறையில் இடம்பெறவுள்ளன. இறுதிப் போட்டிகள் மின்னொளியில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ங-23)

## மேசைப் பந்து பயிற்றுநர்களுக்கு பயிற்சி முகாம்



யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்.மாவட்ட மேசைப் பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேசைப் பந்தாட்ட பயிற்றுநர்களுக்கான தரம் I இற்கான பயிற்சி முகாம் டிசெம்பர் மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாமில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்ட சங்கத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் பட்டுள்ளனர். (ங-23)



முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றைச் சேர்ந்த வீர வீராங்கனைகளுக்கான கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் கடந்த வாரம் துணுக்காய் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்தப் பயிற்சி முகாமில் பங்குபற்றிய வீர வீராங்கனைகளுடன், விருந்தினர்கள் மற்றும் பயிற்றுநர்கள். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளிக்குப் பின் —ஹேரத்



இலங்கையின் பிரதான பந்துவீச்சாளராக 18 வருடங்கள் விளங்கிய முத்தையா முரளிதரனின் ஓய்விற்குப் பின்பு ரங்கன ஹேரத் காணப்பட்டிருக்காவிட்டால் டெஸ்ட் அரங்கில் இலங்கை அணி தொடர்ந்து தடுமாறியிருக்கும் என்று இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

உலக சாதனையாளரான முத்தையா முரளிதரன் 2010 ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்து யாராவது ஒரு பந்துவீச்சாளர் இலங்கையின் பந்துவீச்சைத் தலைமை தாங்க வேண்டிய தேவை காணப்பட்டதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அந்தப் பணியை ரங்கன ஹேரத் மிகச்சிறப்பாகச் செய்துவருவதாகத் தெரிவித்துள்ளார்.

முத்தையா முரளிதரனின் ஓய்விற்குப் பின்னர் ரங்கன ஹேரத் அணியில் இடம்பெற்றுத் தனது திறமையைச் சரியாக வெளிப்படுத்தியிருக்காவிட்டால் இலங்கை அணி மேலும் 2 அல்லது 3 வருடங்கள் தடுமாற வேண்டியிருந்திருக்கும் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, ரங்கன ஹேரத்தின் சிறப்பான பந்துவீச்சுக் காரணமாகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தது எனத் தெரிவித்தார்.

முத்தையா முரளிதரனிற்குப் பின்பு இலங்கையில் உருவான சிறந்த சுழற்பந்து வீச்சாளராக ரங்கன ஹேரத் காணப்படுகிறார் எனக் குறிப்பிட்ட மஹேல, ரங்கன ஹேரத்தின் கட்டுப்பாடான பந்துவீச்சுக் காரணமாக எதிரணி வீரர்களுக்கு அவர் சவாலாக விளங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு ஏனைய பந்துவீச்சாளர்கள் ரங்கன ஹேரத்திற்குத் துணையாகச் சிறப்பாகப் பந்துவீசி வருவதாகவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிறைவடைந்த நியூசிலாந்திற்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசியதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, நியூசிலாந்து அணி தொடர்ந்தும் போராடிய போதிலும், சிறப்பான பந்துவீச்சுக் காரணமாகவே நியூசிலாந்து அணி தடுமாறியிருந்ததாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் இடம்பெற்ற வேளையில் ரங்கன ஹேரத் முதல் இன்னிங்ஸில் 5 இலக்குகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் 6 இலக்குகளையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (5)

# தம்புள்ளவில் மீண்டும் போட்டி

ரங்கிரி தம்புள்ள கிரிக்கெட் மைதானத்தில் மீண்டும் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக தம்புள்ள மைதானத்தில் சர்வதேசப் போட்டி இடம்பெறாது உள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உலர் வலயத்தில் அமைந்துள்ள ரங்கிரி தம்புள்ள சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் போட்டி நடத்தப்பட்டால் மழையின் குறுக்கீடுகள் குறைவாகக் காணப்படும் என்பதால் இந்த மைதானத்தில் போட்டி நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் காணப்பட்டது.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான தொடர், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடர், நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடர் ஆகியவற்றில் மழையின் குறுக்கீடுகள் அதிகமாகக் காணப்பட்ட பின்னர் ரங்கிரி தம்புள்ள மைதானத்தைத் தவிர்ப்பது தொடர்பான கேள்விகள் அதிகமாக எழுப்பப்பட்டன.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, தம்புள்ள மைதானத்தின் மின்விளக்குகளில் தவறுகள் காணப்படுவதாகவும் அவை சீர்செய்யப்பட்டதும் தம்புள்ள மைதானத்தில் மீண்டும் போட்டி இடம்பெறும் எனத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் தம்புள்ள மைதானத்தின் மின்விளக்குகளை மேம்படுத்தும் பணியில் இலங்கைக் கிரிக்கெட் சபை ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த நிஷாந்த ரணதுங்க, மின்விளக்குகளே 'ரி-20' போட்டிக்கும் ஒரு நாள் சர்வதேசப் போட்டிக்கும் மிகவும் உகந்தது எனத் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்தின்படி அடுத்தாண்டு இடம்பெறவுள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடரின்போது தம்புள்ள மைதானத்தில் மீண்டும் கிரிக்கெட் போட்டி இடம்பெறத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# இந்தியா 7 ஆண்டுகளின் பின் வெற்றி



அஹமதாபாத் மைதானத்தில் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் தனது முதல் வெற்றியை நேற்று முன்தினம் இந்தியா பதிவு செய்தது. இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் இந்த வெற்றியைப் பதிவு செய்தது. இதற்கு முன்னர் இங்கு 2005 இல் இலங்கையை 259 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

**கம்பீர் இல்லை**

தனது பாட்டி மரணமடைந்ததால் கடந்த ஞாயிற்றுக் கிழமை அவசரமாக டெல்லி சென்ற இந்தியாவின் கம்பீர், அஹமதாபாத் திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது. நேற்று முன்தினம் களத்தடுப்பில் மாற்று வீரராக ரஹானே செயல்பட்டார். விதிமுறைப்படி காயம் தவிர வேறு காரணத்துக்காக நீண்ட நேரம் ஆட்டத்தில் பங்கேற்காதவர்கள் தொடக்க வீரராக களமிறங்க முடியாது. 5 ஆவது இலக்கு வீழ்ச்சிக்குப் பின்னர் தான் வர முடியும். இதன் காரணமாக இரண்டாவது இன்னிங்ஸில் சேவாக்குடன் தொடக்க வீரராக புஜாரா களமிறங்க நேரிட்டது.

**பந்து வீச்சாளர்களே காரணம் - டோனி**

இந்திய அணித் தலைவர் டோனி கூறுகையில், டெஸ்ட் தொடரை வெற்றியுடன் தொடக்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வெற்றிக்கு பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு முக்கிய காரணம். அத்துடன் நாணயச் சுழற்சியில் நாங்கள் வெற்றி பெற்றதும் எங்களது வெற்றிக்கு கூடுதல் பலமானது.

குறிப்பாக சுழற்பந்துவீச்சாளர்கள் முழுத்திறமையை வெளிப்படுத்தினர். சரியான திசையில் பந்துவீசி இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். பிரக்யான் ஓஜா அருமையாக பந்துவீசி, கூடுதல் பொறுப்பை எடுத்துக் கொண்டார். புஜாரா இரட்டை சதம் அடித்து அசத்தினார். அனுபவ வீரர் போல எவ்வித பதட்டமும் இல்லாமல் துடுப்பெடுத்தாடினார். இதற்கு நிறைய உள்ளூர் போட்டியில் விளையாடியதே காரணம். இந்திய வீரர்கள் அனைவரும் ஒரு அணியாக ஒருங்கிணைந்து வெற்றிக்கு பாடுபட்டனர் - என்றார்.

**ஓஜா அபாரம்**

இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 9 இலக்குகள் (5+4) கைப்பற்றிய இந்திய சுழற்பந்துவீச்சாளர் பிரக்யான் ஓஜா, டெஸ்ட் அரங்கில் தனது சிறந்த பந்துவீச்சை பதிவு செய்தார். முதன்முறையாக ஒரு டெஸ்டில் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 7 அல்லது அதற்கு மேல் இலக்குகள் கைப்பற்றினார். முன்னதாக நான்கு முறை, ஒரே டெஸ்டில் தலா 7 இலக்குகள் வீழ்த்தினார்.

✱ ஆறாவது இலக்குக்கு 157 ஓட்டங்களைச் சேர்த்த இங்கிலாந்தின் அலெஸ்டர் குக், மட் பிரையர் ஜோடி, இந்திய மண்ணில் 6 ஆவது இலக்குக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி வரிசையில் 2 ஆவது இடம் பிடித்தது. கடந்த 1980 இல் மும்பையில் நடந்த டெஸ்டில் இங்கிலாந்தின் இயன் பொத்தம், பொப் டெய்லர் ஜோடி 6 ஆவது இலக்குக்கு 171 ஓட்டங்கள் சேர்த்தது.

✱ இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணித் தலைவர் அலெஸ்டர் குக், 556 நிமிடங்கள் களத்தில் நின்று துடுப்பெடுத்தாடினார். இதன்மூலம் இந்திய மண்ணில் இரண்டாவது இன்னிங்சில் நீண்ட நேரம் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து வீரர்கள் வரிசையில் 2 ஆவது இடம் பிடித்தார். முன்னதாக சென்னையில் 1985 இல் நடந்த டெஸ்டில் இங்கிலாந்தின் கிரீம் பிளவர் 563 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடினார்.

✱ இந்திய மண்ணில் நீண்ட நேரம் துடுப்பெடுத்தாடிய வெளிநாட்டு வீரர்கள் வரிசையில் 6 ஆவது இடம் பிடித்தார் குக் (556 நிமிடங்கள்). ஏற்கனவே பாகிஸ்தானின் யுனிஸ் கான் (690 நிமிடம், முதல் இன்னிங்ஸ்), தென்னாபிரிக்காவின் அம்லா (675, முதல் இன்னிங்ஸ்), இலங்கையின் ஜெயவர்தனா (610, 2 ஆவது இன்னிங்ஸ்), தென்னாபிரிக்காவின் அன்ரூ ஹோல் (588, முதல் இன்னிங்ஸ்), இங்கிலாந்தின் கிரீம் பிளவர் (563, 2 ஆவது இன்னிங்ஸ்) ஆகியோர் நீண்ட நேரம் துடுப்பெடுத்தாடியுள்ளனர். (5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிப்பு

பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 5 போட்டி கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ள நிலையில் இரண்டாவதும் இறுதியுமான ஆட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிலையிலேயே ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில், முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரச்சாமி பெருமாள், கெரன் பவல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சுனில் நரைனை விட வீரச்சாமி பெருமாள் பலமடங்கு சிறப்பாகப் பந்துவீசியதுடன், கெரன் பவல் இரு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்று ஆட்டநாயகன் விருதையும் வென்றிருந்தார்.

அத்தோடு டெஸ்ட் தொடரில் உடற்தகுதிப் பிரச்சினைகளுக்காகச் சேர்க்கப்பட்டிருக்காத கமர் ரோச் ஒருநாள் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களில் சந்தர்போல், நாசிங் டியோநரைன், பிடல் எட்வேர்ட்ஸ், கோக் எட்வேர்ட்ஸ், அஸ்ஸட், புடாடின், டினேஷ் ராம்டின் ஆகியோர் ஒரு நாள் சர்வதேசப் போட்டிக்கான அணியில் சேர்க்கப்படவில்லை.

சகலதுறை வீரர் டுவைன் பிராவோ தனது உடற்தகுதியை நிரூபிக்காத நிலையில் அணியில் அவருக்கான இடம் கிடைத்திருக்கவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

டரன் சமி, கெரன் பொலார்ட், ரீனோ பெஸ்ட், டரன் பிராவோ, கிறிஸ் கெயில், சுனில் நரைன், வீரச்சாமி பெருமாள், கெரன் பவல், ரவி ராம்போல், கமர் ரோச், அன்ட்ரே ருசல், மார்லன் சாமுவேல்ஸ், லெண்டில் சிமன்ஸ், டுவைன் ஸ்மித், டெவோன் தோமஸ். (5)



# வொற்சன் பந்து வீச மாட்டார்

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் தன்னால் பந்துவீச முடியாது என்று ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொற்சன் தெரிவித்துள்ளார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இரு அணிகளுக்கு மிடையிலான முதலாவது ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்காத ஷேன் வொற்சன், தற்போது மீண்டும் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார்.

சகலதுறை வீரரான ஷேன் வொற்சனின் துடுப்பாட்டத் தைப்போலவே அவரது பந்துவீச்சும் ஆஸ்திரேலிய அணிக்கு முக்கியமானது என்பதால் அவரை சகலதுறை வீரராகவே அணியில் தேர்வுசெய்ய விரும்புவதாக ஆஸ்திரேலியத் தேர்வாளர்கள் தெரிவித்து வந்தனர். அத்தோடு ஆஸ்திரேலிய அணியின் தலைவர், பயிற்றுவிப்பாளர் ஆகியோரும் அதே கருத்தைத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பயிற்சிகளில் ஈடுபட்ட ஷேன் வொற்சன், இரண்டாவது ஆட்டத்தில் தன்னால் பந்துவீச முடியாது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் துடுப்பாட்ட வீரராக மாத்திரம் தன்னால் இரண்டாவது ஆட்டத்தில் பங்குகொள்ள முடியும் எனத் தெரிவித்த ஷேன் வொற்சன், அணியில் இடம்பெற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். அடிலெய்டில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ள மிகவும் விரும்புவ தாகத் தெரிவித்த ஷேன் வொற்சன், ஆனால் அணியின் சமநிலை முக்கியமானது எனவும், எனவே அணியின் சமநிலையைக் கருத்திற்கொண்டு தேர்வாளர்களும், அணித்தலைவரும் எடுக்கும் முடிவு குறித்துத் தனக்குப் பிரச்சினை கிடையாது எனத் தெரிவித்தார்.

இரண்டாவது ஆட்டத்தில் தான் தெரிவுசெய்யப்பட்டால் பந்துவீச முடியாது என்ற போதிலும், எதிர்காலத்தில் சகலதுறை வீரராகவே செயற்பட விரும்புவதாகத் தெரிவித்த ஷேன் வொற்சன், எப்போதெல்லாம் உடற்தகுதியுடன் உள்ள போதிலும் அப்போதெல்லாம் பந்துவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் அணிக்குப் பங்களிப்பை வழங்குவதைத் தான் மிகவும் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

# இந்தியக் கிரிக்கெட் சபை அடாவடி

இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்டில், மைதானத்தில் இருந்து ஒளிப்படங்களை எடுக்க கெட்டி இமேஜஸ் (Getty Images), அக்சன் இமேஜஸ் (Action Images)போன்ற ஒளிப்பட நிறுவனங்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை அனுமதி மறுத்து விட்டது.

இதை கண்டித்து ஏ.எப்.பி., ரொய்ட்டர்ஸ், ஏ.பி., போன்ற சர்வதேச செய்தி மற்றும் ஒளிப்பட நிறுவனங்கள் இந்த ஆட்டத்தைப் புறக்கணித்துள்ளன. கிரிக்கெட் இணையதளமான ஈ.எஸ்.பி.என்-கிரிக் இன்போவும் இந்த டெஸ்ட் தொடர்பான நேரடி ஒளிப்படங்களை வெளியிடவில்லை.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபைக்கு சர்வதேச ஒலிம்பிக் சபை(ஐ.ஓ.சி.) கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.ஏ.சியின் பத்திரிகை பிரிவு தலைவர் கெவான் கோஸ்பர் கூறுகையில், இந்திய கிரிக்கெட் சபையின் முடிவு ஐ.ஏ.சி.க்கு கடும் அதிருப்தி அளிக்கிறது.

விளையாட்டு தொடர்பான நிகழ்ச்சிகளை வெளியிடும் ஊடக சுதந்திரத்தின் மீதான நேரடி தாக்குதலாக இதனை கருதுகிறோம்.

உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு ரசிகர்களையும் இது அவமதிப்பதாகும். இந்த பிரச்சினையில் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலையிடும் என்று நம்புகிறோம் என்றார். (5)

# புஜாரா 'ரி-20' பங்கேற்பார்

ஒரு நாள், 'ரி-20' போட்டி போன்ற குறைந்த பந்துப் பரிமாற்ற ஆட்டங்களில் பங்கேற்க இந்திய வீரர் புஜாராவுக்கு உரிமை உண்டு என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்சில் இந்திய அணி 521 ஓட்டங்கள் குவித்தது. இதில் சட்டீஸ்வர் புஜாரா ஆட்டமிழக்காமல் 206 ஓட்டங்களை குவித்து வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். இவருக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இது குறித்து கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் கூறுகையில், அபாரமாக விளையாடிய இளம் வீரர் புஜாராவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்ற ஆட்டங்களில் பங்கேற்க அடிப்படை உரிமை உண்டு.

நிதானமாக ஆடிவரும் புஜாரா, கூடிய விரைவில் பந்துகளை பறக்கவிட்டு அதிரடியாக விளையாடுவார் என்று எதிர்பார்க்கிறேன் என்றார்.

ஐ.பி.எல். போட்டியில் விளையாடி வந்தபோதும் அவருக்கு சரியான தொடக்கம் கிடைக்காமல் இருந்து வருகிறார் எனவும் கூறியுள்ளார். (5)


**கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**
**கிராமஅலுவலர் தரம் III போட்டிப் பரீட்சை-2012**
**துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்-01/12/2012**

★ வகுப்புக்கள் யாவும் சனி/ஞாயிறு தினங்களில் நடைபெறும்.
★ துறைசார்ந்த வல்லுனர்களால் கற்பித்தல்கள் மேற்கொள்ளப்படும்.
★ எதிர்பார்க்கை வினாவிடைகள் வழங்கப்படும்.
★ விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: 29.11.2012 இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.
அதிபர், தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. 021 228 5011



**Cheapest air faires with Airmark Travels**

| | |
|---|---|
| CMB/SINGAPORE/CMB | -29, 850/- |
| CMB/MALDIVES/CMB | -15, 200/- |
| CMB/BANGKOK/CMB | -26, 250/- |
| CMB/SHARJAH | -15, 200/- |
| CMB/DUBAI/CMB | -16, 400/- |
| CMB/KOCHI/CMB | -18, 300/- |
| CMB/TIRUCHI/CMB | -14, 700/- |
| CMB/MILAN/CMB | -71, 200/- |
| CMB/LONDON/CMB | -88, 900/- |

24 HOUR
HOT LINE 0777721235
IATA

AIR MARK Travels & Tours
HEAD OFFICE #94, Chatham Street, colombo-01. 2399999 / 2361919/ 2389955
BRANCH OFFICE #212,Palaly Road,Jaffna. 021222 0033 / #5A, Kodikamam RD,
#05,Stanley Road, Jaffna. 021222 4777 / Nelliyadi 021 226 2000



**கடைத் தொகுதி வாடகைக்கு**

உடையார்கட்டு சந்திக்கு அண்மையில் தேவாலயத்துக்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதி வாடகைக்கு விடப்படும். குறிப்பாக தனியார் நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0777192798
(24315)


## மரண அறிவித்தல்



### நாகதம்பி நாகேஸ்வரன் (வரன்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகதம்பி நாகேஸ்வரன் நேற்று (20.11.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகதம்பி -அம்புசம் தம்பதியரின் மகனும், சுலோசனாவின் (பலா) அன்புக் கணவரும், வசீகரன் (வீரவாகு-வர்த்தகர், மருதனார்மடம்), சசிகரன் (சவுதி), வசந்தினி, விசிகரன் (சவுதி), குணாகரன், சுபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி, வவி, பவானி ஆகியோரின் சகோதரனும், பிரசாத், பிறின்சியா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2012) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (25663)(9.14)
மனைவி, மக்கள்.
எச்சாட்டி வைரவர் கோயிலடி,
சுதுமலை தெற்கு, சுதுமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உறுதியைப் போல
உழைப்பும் இருந்தால்
வெற்றியை
காண்பாய்.
-ஜெஸ்லி-

புதன் பொய்கை A

உதயன் 21 நவம்பர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

துன்னாலைச் செல்வம்



"இறுதிப் போரில் தமிழ் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு தீவிர மாக நடவடிக்கை எடுத்திருக்க வேண் டும் என்று அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது. இலங்கை அரசின் எறிகணைத் தாக்குதல்களால்தான் தமிழ் மக்கள் ஆயிரக் கணக்கில் இறந்தார்கள் என்ற விவரம் தெரிந்திருந்தபோதும் ஐ.நா. அதனைப் பகிரங்கப்படுத்தவில்லை.

# ஈழத்தமிழர்களை கைவிட்டது ஐ.நா.

அமெரிக்காவும் அனைத்து உலக நாடுகளும் ஈழத் தமிழ்மக்களைமுட்டாள்களாக்கப் பார்க்கின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு சில நிவாரணங்கள் கிடைக்கலாம். ஆனால் இன்று வரை ஒரு தீர்வைத் தமிழ் மக்களுக்கு சர்வதேசம் முன்வைக்கத் தயங்குகின்றது.

இதனால் இலங்கையில் தமிழ் மக்கள் புறந்தள்ளப்பட்ட நிலையில் சகல இன ரீதியான நெருக்கடிகளுக்குள்ளும் முகம் கொடுத்து வருகின்றனர். இலங்கை அரசுடன் தமிழ்ப்பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாகப் பேச முடியாது இருக்கும் போது, எப்படி தமிழ் மக்கள் உரிமைகளைப் பற்றிப் பேச முடியும். இந்தநிலைமைகளை சர்வதேசம் அறிந்து கொண்டும் தமிழர்களின் தீர்வு தொடர்பில் மௌனித்துப் போயிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபை போர்க் குற்றவாளிகளைக் கைது செய்து தூக்கில் போடப் போவது போல் கருத்துக்களை வெளியிட்டு வந்தார்கள். ஆனால் தீர்மானம் என்ற பெயரில் ஈழத் தமிழர்களை ஏமாற்றிவிட்டார்கள். ஜப்பானில் சரணடைந்த மக்கள் மீது, அமெரிக்கா அணு குண்டு வீசி அப்பாவிகளைக் கொன்று குவித்தது. வியட்நாம், கவுதமாலா, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளிலும் அமெரிக்க அரசு நடத்திய போர்க் குற்றங்கள் கணக்கில் அடங்காதவை. இப்படியாக போர்க் குற்றங்களைச் சுமத்தியிருக்கும் அமெரிக்கா ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அழிவுக்கு வித்திட்டதே ஒழிய விடிவுக்கு அல்ல என்பது வெளிப்படையாகத் தெரிய வந்துகொண்டிருக்கிறது.

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது தமிழ் மக்களைக் காக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்று அதன் உள்ளக விசாரணை அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது. இறுதிப் போரில் ஐ.நா.நடந்துகொண்ட விதம் குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட உள்ளக விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியே கசிந்துள்ளது. இலங்கையில் இரத்தக் களரியை ஏற்படுத்திய போரின் இறுதி மாதங்களில் பொதுமக்களைக் காக்கும் தனது பிரகடனத்தின் பொறுப்பில் இருந்து ஐ.நா. தவறிவிட்டது. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான பொறுப்புக்களை மிக உயர் நிலையில் பூர்த்தி செய்வதற்குத் தவறிவிட்டது.



இறுதிப் போரில் வன்னியிலிருந்த தனது பணியாளர்களை 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அங்கிருந்து விலக்கிக் கொண்டது பாரதூரமான குற்றமாகும். பொதுமக்களின் இழப்பை தடுப்பது ஐ.நா. அதிகாரிகளின் பொறுப்பாக இருந்தபோதும் கொழும்பில் இருந்த மூத்தஅதிகாரிகள் அதனைச் செய்ய வில்லை. ஐ.நா. தலைமையகம் அது தொடர்பில் அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்கவில்லை.

பிரகடனப்படுத்திக் கொண்ட தன்படி தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் துணிந்து நிற்காததால் கொழும்பிலிருந்த ஐ.நா. அதிகாரிகள் மத்தியில் கட்டமைப்பு ரீதியான மந்தநிலை காணப்பட்டது. வன்னியின் இறுதிப் போரில் என்ன நடந்தது என்பதை உலகுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

இறுதிப் போரில் தமிழ் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு தீவிர மாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது. இலங்கை அரசின் எறிகணைத் தாக்குதல்களால்தான் தமிழ் மக்கள் ஆயிரக் கணக்கில் இறந்தார்கள் என்ற விவரம் தெரிந்திருந்தபோதும் ஐ.நா. அதனைப் பகிரங்கப்படுத்தவில்லை. இலங்கை அரசின் அழுத்தங்களால் அந்த விவரங்களை ஐ.நா. ஒருபோதும் வெளியிடவில்லை. இறுதிப் போரில் பொதுமக்களின் இழப்பு எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது என்பதை வலுவான உத்திகள் மூலம் தெளிவாகக் கணக்கிட்டு வருவதாக ஐ.நா. கூறிக் கொண்டாலும் அந்த விவரங்களை வெளியிடத் தவறியுள்ளது. ஐ.நா. கட்டமைப்புக்குள் ஒரு விடயத்துக்காக இன்னொரு விடயத்தை விட்டுக் கொடுக்கும் கலாசாரம் அதிகம் காணப்பட்டது. இறுதிப் போர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது ஐ.நா. பாதுகாப்புச் சபையோ வேறு முக்கிய ஐ.நா அமைப்புக்களோ ஒரு முறை கூட உத்தியோகபூர்வமாக கூடியிருக்க வில்லை.

இப்படியாக ஐ.நா. செயற்பட்டதானது ஈழத் தமிழ் மக்களின் விடுதலையின் இருண்ட சூழலினை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் செயற்பாட்டில் தமிழ் மக்களைக் காப்பாற்ற வெளிக்கிட்டு அந்த மக்களையே அழித்த பங்கு ஐ.நாவுக்கும் உண்டு. நிம்மதியான வாழ்வுக்கும், உரிமைக்காகவும் போராடிக் கொண்டிருந்த போது அந்தப் போராட்டத்தையே அழித்துவிட்டு தமிழ் மக்களையும் ஏதிலிகளாக்கிவிட்டு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கப் போகிறார்களாம். போரினால் உடைபட்ட தமிழ்க் குடும்பங்கள் அந்த நினைவுகளோடும் ஆறாத வலிகளோடும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் வாழ்வு விடயத்தில் சிறு துளியளவு கூட அக்கறை கொள்ளாத சர்வதேசம் தமது நடவடிக்கைகளுக்காக இலங்கைக்குள் இறங்கி தமிழர்களைக் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர்.

விடுதலைப் போராட்டத்தில் 30 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் இந்த மண்ணுக்காக வீரச்சாவு அடைந்துள்ளனர். போரில் வீரச்சாவடைந்த மாவீரர் தமது உயிரை விடும்போது தமிழீழம் என்ற கனவையே சுமந்து நின்றனர். லட்சக்கணக்கில் தமிழ் மக்கள் போரில் உயிரை இழந்துள்ளனர்.

இவர்களால் தான் தமிழர்களுடைய பிரச்சினை சர்வதேசத்துக்கு தெரிய வந்தது. இவர்களின் கனவு நனவாக வேண்டும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் பிரதேசங்கள் பாதுகாப்புடன் தமிழ்க் கலாசாரப் பண்பாட்டுடன் சிறந்து விளங்கியது. இன்று நிலைமை மாறி இலங்கை அரச படைகளின் கால்பட்டு சிதைந்து கொண்டிருக்கிறது.




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆடம்பர வசதியுடன் அற்புத மரவீடுகள்



## இப்படியும் பொருள்களை சுமக்க முடியுமா?....






## மனிதர்களை அடையாளம் கண்டுகொள்ளும் காகங்கள்.

மனித முகங்களை அடையாளம் கண்டு கொள்வதும், அவர்களுடன் பழகி அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் சக்தியும் காகங்களுக்கு உண்டு என்று புதிய ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. வொஷிங்டன் பல்கலைக்கழகம் சமீபத்தில் நடத்திய ஆராய்ச்சியில், அணிலின் மூளையைப் போன்றே காகத்தின் மூளையின் அமைப்பும்



அமைந்துள்ளமை கண்டறியப்பட்டது. காகங்களுடன், மனிதர்கள் சிலரை ஒன்றாகப் பழக வைத்து இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது. ஒன்றாக பழகியவர்களைப் போன்று மற்றொருவர் முகமூடி அணிந்து காகத்தின் அருகில் சென்றால் அவை அவர்களை நிராகரித்து விடுவதும், தங்களுடன் பழகும் நபர், வேறொரு முகமூடி அணிந்திருந்தாலும், அவரிடம் நெருங்கிச் செல்வதும் காகங்களின் முக அடையாளம் காணும் திறனை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. பறவைகளைப் பற்றி நடத்திய ஆய்வுகளில் பதிவு செய்யப்பட்ட முக்கிய ஆய்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.





## காகிதத்திலும் கலைப் பொருள்களா?

## சாதிக்கப் பிறந்தவன்...!



போ.சித்திரா,
மானிப்பாய்.

வேதனை வேள்வியில்–நீ
நித்தம் குளிக்கலாம்
துன்ப மழையில்–நீ
தவறாமல் நனையலாம்
சோதனை அலைகள்–உன்னை
அடித்துச் செல்லலாம்
வேதனை நிழல்கள்–உன்னை
விடாமல் விரட்டலாம்
தோல்வி தணல்–உன்னை
சுட்டெரிக்கலாம்
கண்ணீரே உனக்குச் சொந்தமாகலாம்
ஆனால்....
மனிதா! நீ சோராதே
ஏனெனில் நீ சாதிக்கப் பிறந்தவன்.

## சிந்திப்போம்...

★ அறிவு வழியே செல்பவன் உலகம்
முழுவதும் புகழைப் பெறுவான்.
உணர்ச்சி வழியே செல்பவன்
உலக மக்களால் இகழப்படுவான்.
★ நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும்
உங்களுடைய கடிகாரம்.
★ வறுமை ஆயினும் கற்றறிந்து வாழ்தல்
செல்வத்தோடு அறிவிலியாக
வாழ்தலிலும் நன்று.
★ நல்லொழுக்கத்தை உருவாக்க ஒருவன்
ஆயிரம் தடவை தடுக்கி விழுந்தாக
வேண்டும்.
★ தன்னைத் தானே மிக நன்றாக யார் சரி
செய்து கொள்கின்றானோ அவனே
நீண்ட காலம் வாழ்கின்றான்.
★ தன்னம்பிக்கையும் விடா முயற்சியும்
உன் இரு கண்களாக
நினைத்துச் செயற்படு.
நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

**Yes... I Can!**




சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வலையவன்

# மீன்களின் உலகம்




குறைந்தஅதி சிறந்த பூக்களின் உலகம் அழகானது. பட்டாம் பூச்சிகளின் அழகு விந்தையானது. பறவைகளும் கவர்ச்சியானவை. இந்த வரிசையில் மீன்களின் உலகமும் அலாதியானது. பவளப்பாறைப் பகுதிகளில் கடற்பாசிகள் அழகு கூட்டுகின்றன. பலவண்ண மீன்கள் அணியணியாய்ப் பவளப்பாறைகளினூடே துடுப்பசைத்து நீந்திச் செல்கையில் உலகின் வனப்புமிகுந்த ரோஜாத் தோட்டம் நகர்வது போன்ற உணர்வை ஏற்படுத்தும். கடல் சூழல் அற்புதமானது. மீன்களின் உலகத்தில் சிறு பயணம் போகலாம் வாருங்கள்.

பரிணாமத்தின்போது இயற்கை மும்முறையாவது இறக்கைகளை பிறப்பித்திருக்கிறது. பூச்சிகள் (தாம்) முதன் முதலில் இறக்கையுடன் பறக்கத் துவங்கின. பல இலட்சம் வருடங்களுக்குப் பிறகுதான் பறவைகள் தோன்றின. இறகுகள் பறவைகளுக்கே உரியவை. மூன்றாவது முறையாக பாலூட்டிகள் (வெளவால்கள்) பறக்கத் துவங்கின, ஆனால் இறக்கைகளில்லாமல். புஜம், முழங்கை, கை இவற்றுக்கிடையில் அமைந்த ஜவ்வுதான் பறப்பதன் உபகரணம். ஆகாயத்தில் காற்றைப் பின் தள்ளிப் பறக்கலாம். கடலிலும் நன்னீர்ப் பறவைகளும் நீரைப் பின்தள்ளி முன்னேறலாம். இதன் பெயர் நீச்சல். தவளைகள் தாவும், பல்லிகள் ஊர்ந்து போகும். பூனையும் மனிதனும் நடப்பவை. பறவைகள் நடக்கும், நீந்தும், பறக்கும். மீன்கள் நீந்தும். இவை எல்லாமே முதுகெலும்புகள், நாற்காலிகள். நகர்தலுக்காக, சூழலுக்கேற்ப, வாழிடத்துக்கேற்ப நான்கு கால்களும் அமைந்துள்ளன.

மீன்களின் துடுப்பும் பறவைகளின் இறக்கையும் மனிதனின் கைகளும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை. இயற்கைச் சிற்பி வடிவமைத்த அற்புத உறுப்புகள்! மீன்களின் உடலை மூடிப் பாதுகாக்கச் செதில்கள் உள்ளன. பறவைகளுக்கு இறகுகள், மனிதனுக்கு உரோமம். ஆதி மனிதனின் உடல் முழுவதும் உரோமமிருந்தது. நாகரிக மனிதன் உடைகளுக்குப் பழகிய பிறகு உரோமம் அழகு சார்ந்த விஷயமாகவும் கருதப்பட்டது. இமைகளிலும், நாசித்துளைகளிலும் மயிர் நீட்சியின் தேவை இன்னும் உணரப்படுகிறது. பாலின வேறுபாட்டைக் காட்டி இருதரப்புக் கவர்ச்சியை ஏற்படுத்துவதிலும் மயிர் வளர்ச்சிக்கு முக்கிய பங்குண்டு.

பூமிப்பரப்பில் எல்லாவுயிர்களுமே உறவுக்காரர்கள். மனிதனும் பக்டீரியாவும் தூரத்துச் சொந்தம். தூரம் கொஞ்சம் அதிகம். மனிதனும் குரங்கும் நெருங்கிய உறவினர்கள்;இரத்த சம்பந்தம். குரங்குகள் மனிதனின் முன்னோர் அல்ல. குரங்கும் மனிதனும் ஒன்றுவிட்ட சகோதரர்கள்! இரத்த வெதுவெதுப்பு என்றால் உங்களுக்குப் புரியும். உங்களுக்கும் எனக்கும் பறவைக்கும் காயம்பட்டால் சிந்தும் குருதியில் வெதுவெதுப்பு இருக்கும். பாம்பு, பல்லி, தவளை, மீன் இவற்றின் இரத்தத்தில் இந்த வெதுவெதுப்புக் கிடையாது. மேல் நாட்டினர் குளிர்ப் பிரதேசத்தில் வாழ்பவர்கள். அன்னைப் பரிமாறிக்கொள்ள வெதுவெதுப்பைப் பகிர்வதாய்ச் சொல்வார்கள். நீதான் என் வாழ்க்கையில் எல்லாமே என்பதற்குப் பதிலாக என் வாழ்க்கையின் சூரிய வெளிச்சம் நீதான் என்பார்கள்.



உடல் வெதுவெதுப்பை இழந்துவிட்டால் சடலம். கொடூரமான கொலை என்பதை ஆங்கிலம் பேசுபவர்கள் குளிர்க் குருதிக் கொலை என்பார்கள். உடலின் வெப்பத்தை ஒரே சீராக வைத்துக் கொள்வதற்கு சிறப்பு ஏற்பாடுகள் தேவை; நிறைய சக்தி செலவாகும். உடல் வெப்பநிலையைச் சூழலே கட்டுப்படுத்த அனுமதித்துவிட்டால் சிரமமில்லை. சக்தி மிச்சமாகும். மேல் நாட்டினரின் உணவில் பெரும்பகுதி உடல் வளர்ச்சிக்குப் போகிறது. வெப்பப் பிரதேசத்தில் வாழும் நமக்கு உடல் வெப்பத்தை சீர்படுத்துவதிலேயே அதிக சக்தி (சத்து) கரைந்துவிடுகிறது.

வெப்பநிலையில் உழைப்பும் உற்பத்தியும் அதிகமாகவே இருக்கும். கதை எழுதுபவர்களும் கலைஞர்களும் கோடை ஓய்விடங்களைத் தேடிச் செல்வதன் இரகசியம் வேறொன்றுமில்லை. வெப்ப இரத்த விலங்குகளினுடையதை விட குளிர் இரத்த விலங்குகளின் இறைச்சி ஆரோக்கியமானது. பாதுகாப்பானது. நீர்வாழ் உயிரினங்கள் கடலிலும் நன்னீரிலும் கிடைக்கும் மீன் முதலிய விலங்குகளை நாம் விரும்பி உண்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

மீன் என்றால் என்ன? அடிப்படையில் மீன் நீர்வாழ் உயிரினம். உயிரியல் அடிப்படையில் வரையறுத்துச் சொல்வதானால் செதில்களால் மூடப்பெற்று மூச்சுவிடுகிற, துடுப்புக்கொண்ட, நீர்வாழ் குளிர் இரத்த முதுகெலும்பி. வணிக நோக்கில் நீர்நிலைகளிலிருந்து கிடைக்கப் பெறும் எல்லா விலங்கு உயிரினங்களையும் மீன் என்கிறார்கள். இறால், நண்டு போன்றவை கணுக்காலிகள்; கணவாய் மெல்லுடலி; கடல் அட்டை முட்தோலி; ஆமைகள் ஊர்வன; டொல்பின், திமிங்கிலம் போன்றவை பாலூட்டிகள் (குட்டிகளை ஈன்று தரும்) நுரையீரலால் காற்றைச் சுவாசிப்பவை. எத்தனை ஆழத்தில் நீந்தினாலும் உயிர்க் காற்றைப் பெற நீர்ப்பரப்புக்கு மேல் அவ்வப்போது தலை காட்டியாக வேண்டும்!

மீன்கள் பல நூறு வகைப்பட்டவை. வடிவிலும் அளவிலும் உணவு முறையிலும் மாறுபட்டவை. லாம்ப்ரே போன்ற மீன்கள் தாடையில்லாதவை. உணவைக் கவ்விக் கடித்து மென்று அரைத்து உண்ணத் தாடையும் பற்களும் தேவை.

(தொடரும்)

# பாழடிப்பதற்கே கங்கணம்

கல்வியில் முதலிடத்திலிருந்த யாழ்ப்பாணம், குடியில் முதலிடத்திலிருக்கின்றது. கல்வியில் யாழ்ப்பாணம் தொடர்ந்தும் இறங்குமுகமாகவே உள்ளது. கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபடுவதாகப் பெருமைபேசும் பல அதிகாரிகள் அதனைப் பாழடிப்பதற்கே கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றனர்.

நாட்டாமையின் கூத்துக்காகப் பாடசாலை மாணவர்கள் பல மணி நேரம் வெயிலில் காய வைக்கப்படுகின்றனர். இதனை எதிர்த்துக் கேள்வி கேட்க, - கல்வித் தரத்தை உயர்த்துவதற்குப் பாடுபடுவதாகத் தெரிவிக்கும் எவருக்கும் துணிவில்லை. அத்துடன் அந்த அதிகாரிகள் விடயம் தெரிந்து கொண்டும் கல்வியழிவுச் செயற்பாட்டுக்குத் தொடர்ந்து துணை போய்க் கொண்டேயிருக்கின்றனர்.

மத்திய அரசிலிருந்து, மாகாண அரசுக்கு தாவிச் சென்ற ஒருவர், மாகாண அமைச்சில் செயலாளராக இருக்கின்றார். அவர் சொல், புத்திக்கேற்ப ஆட்டம் போடுவதாலேயே, கல்வித்துறையில் பெரும் குழப்பம் ஏற்படுகின்றது என்று பலரும் தமக்குள் முணுமுணுக்கின்றனர்.




யாழ்ப்பாணத்தின் அரசன் என நினைத்துக் கொண்டிருப்பவரின் கல்விக் குழுவில் இருந்து கொண்டு, அவருக்கு வால்பிடிக்கும், முருகனின் மறு பெயரில் ஒன்றைத் தனது பெயரின் விகுதியாகக் கொண்டவரின் சொல்லுக்கே, குறித்த செயலாளர் ஆடுகின்றார்.

பாடசாலைகளில் தொடர்ச்சியாக அதிபர் நியமனங்கள் தொடர்பில் குழப்பம் நிலவி வருகின்றது. இதில் தியேட்டர்காரர் ஒரு பிரச்சினையில் மூக்கை நுழைத்து, மூக்குடைந்தும் இன்னமும் திருந்தவில்லை. அவரின் எடுபிடியாக இருக்கும் வடிவேலவன், அண்மையில் ஒரு பாடசாலையில் தனக்கு விரும்பியவர் ஒருவருக்கு அதிபர் நியமனம் பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

அவரது பதவியேற்பில் பேசும் போது, நான்தான் அந்தப் பாடசாலைக்கு அதிபரை நியமித்தேன், இந்தப் பாடசாலைக்கும் நான்தான் நியமித்தேன், என்று வேறுவீர முழக்கம் இட்டிருக்கின்றார். இவர் அதிபர் நியமனம் செய்வதென்றால் பின்னர் எதற்கு கல்வித் திணைக்களம்? பொதுச் சேவை ஆணைக் குழு ?

யாழ்ப்பாணத்தின் கல்வியை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

உலக நாடுகள் பரந்துபட்டவை. அந்த உலக நாடுகளில் இடம்பெறும் சம்பவங்களை முழுமையாக அறியாவிட்டாலும், முக்கியமான சம்பவங்களை அறிகின்றோம். இதற்கு ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகைகளில் அவரவர்களுக்கு பிடித்த ஒரு பத்திரிகையை மட்டும் நாம் பார்க்கிறோம். இதனால் பல செய்திகளை பார்க்க முடியாமல் போய்விடுகிறது. அதனால் எல்லா பத்திரிகைகளையும் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை உதயன் இல்லாமல் செய்வானா? உதயனைப் பார்த்துப் பழகிய எனக்கு உதயனிலேயே முழுச் செய்திகளையும் பார்க்க ஆவலாக இருக்கிறது.

இன்று யாழ்ப்பாணத்தில் முதலிடத்தில் உதயன் இருப்பதால் உதயன் ஊடாகவே இவற்றை எதிர்பார்க்க முடியும். எனவே எனது கருத்தையும் ஏற்றுக் கொள்வீர்கள் என நினைக்கிறேன். நண்பர்களுடன் கூடிக்கதைக்கும் போது, ஒரு செய்தியைப் பற்றி பேசும் போது அது எந்தப் பத்திரிகையில் வெளிவந்தது என்றுதான் பேசுகிறோம்.

ஏனெனில் அந்தக் கூட்டத்தில் நிற்பவர்கள் ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த ஒரு பத்திரிகையை மட்டும் படிக்கப் பழகிக் கொண்டவர்கள். இதற்குக் காரணம் ஏதோ ஒரு செய்தி அவர்களை ஈர்த்தமையாகும். அதனால் அந்தப் பத்திரிகையில் மூழ்கிப் போய் இருக்கிறார்கள். எனக்கு உதயன் பத்திரிகையை பிடிக்கும். எனவே உதயன் பத்திரிகையில் மக்களுக்குத் தேவையான முக்கிய செய்திகள் தவறாதிருக்க பார்த்துக் கொள்வீர்களா?

உதயகுமார்
கரவெட்டி

★ ★ ★


கொள்கையில் மாறுபடாமல் அன்றும் இன்றும் ஒரே மாதிரி நடைபோடும் உதயனை எனக்குப் பிடித்திருக்கிறது. நீ தாங்கி வரும் செய்திகளின் துடிப்பு எனக்குப் பிடித்திருக்கிறது. அரசுக்குத் துதிபாடுவோரில் இருந்து வேறுபட்டு தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் துதிபாடும் உனது தைரியம் எனக்குப் பிடித்திருக்கிறது.

வட மாகாண மாநாடு தொடர்பாக நீ ஒருவனே செய்தி வெளியிட்டாய் பிற பத்திரிகைகள் வாய்மூடி இருந்தன. உன்னை விலைக்கு வாங்க முடியாது என்பதை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டிவிட்டாய். தமிழர்களுக்குப் பாதிப்பு விளைவிக்கும் அரச நிகழ்வுகளை புரட்டிப் போடுவதில் நீ ஒருவனே உனக்கு நிகர் என்பதில் நாம் மகிழ் வடைகிறோம்.

தொடர்ந்தும் உனது பணி, தமிழ் மக்களுக்காகவே இருக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

துரைராஜா, அராலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ ஜீவானந்தம்

# வீடு மாற்றும் வண்ணத்துப்பூச்சிகள்

குழந்தையாக இருந்தபோது வண்டுகளும் வெட்டுக்கிளிகளும் கூட்டங்கூட்டமாகப் பறந்து செல்வதைக் கண்டு வியந்திருப்போம். பின்னர் பறவைகளும் பூச்சிகளும் விலங்குகளும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு குறிப்பிட்ட காலங்களில் இடம்பெயர்ந்து செல்கின்றன என்று படித்துள்ளோம். பின்னர் விலங்குகள் இடம்மாறி, வேறிடத்துக்குச் செல்லும் பயணத்தை நாள் கணக்கில் காத்திருந்து படம்பிடித்து தொலைக்காட்சியில் காட்டியதைக் கண்டு வியந்துள்ளோம். ஆபிரிக்கக் காடுகளில் வரிக்குதிரைகள், மான்கள், யானைகள் கூட்டங்கூட்டமாக இப்படிப் பயணிப்பதையும் தென் அமெரிக்காவில் மேகக் கூட்டம் போல மன்னர் பட்டாம்பூச்சிகள் (Monarch Butterfly) பறந்து செல்வதையும், ஆபிரிக்க வயல்வெளிகளில் வெட்டுக்கிளிகள் பெரும் படையாக பறந்து வந்து அழிப்பதையும் அறிந்திருப்போம்.

இதெல்லாமே உலகின் வேறு பகுதிகளில் நடப்பவை. ஆனால் நாம் வாழும் பகுதிகளிலும் வண்ணத்துப்பூச்சிகள் இடம்பெயர்ந்து பறந்து வருவதை ஆச்சரியமாகப் பார்த்திருக்கிறேன். இந்த ஆர்வம் வளர்ந்து பல்வேறு வண்ணத்துப்பூச்சி வகைகள் ஒவ்வொரு பருவ காலத்திலும் கூட்டங்கூட்டமாகப் பறந்து செல்வதைக் கூர்ந்து கவனித்துப் பதிவு செய்யத்

இவை சிதறிப் பயணிக்கும் தன்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. Danaide வண்ணத்துப்பூச்சியை மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் பார்க்கலாம். ஆச்சரியமளிக்கும் வகையில் இவை 500 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் பயணிக்கின்றன.

நானும் எனது நண்பர்களும் கடந்த ஐந்து ஆண்டுகளாக மைசூர் பகுதியில் வண்ணத்துப்பூச்சிகளின் பயணம் பற்றி கவனித்து வருகிறோம். முதலில் அவை எங்கிருந்து வருகின்றன, எங்கு செல்கின்றன என்று புரியாமல் குழம்பினோம். பின் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காலத்திலும் எத்தகைய வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன என்பதைப் பதிவு செய்யத் தொடங்கினோம். குறிப்பிட்ட வகை வண்ணத்துப்பூச்சிகள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட வழியில் மட்டுமே பயணிக்கின்றன என்பதைக் கண்டுபிடித்தோம்.

மார்ச், ஏப்ரல் மாதங்களில் தென் மேற்கிலிருந்து வட கிழக்காக மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடருக்குக் கீழிருக்கும் சமவெளிகளை நோக்கியும், பின் மேல்நோக்கி கிழக்குத் தொடர்ச்சி மலை நோக்கியும் அவை பறக்கின்றன. சில இனங்கள் மலைகளைக் கடந்து கிழக்குக் கடற்கரை வரையிலும்கூடப் பறந்து செல்கின்றன.

மூன்று வகையான இடப்பெயர்ச்சிகளையும் ஒரே காலத்தில் நான் கண்டதுண்டு. கருநீல புலி வண்ணத்துப்பூச்சி (Tirumala Sepantrionis),



தொடங்கினேன். மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரிலிருந்து செல்லும் இவை, மைசூரைக் கடந்து செல்லும். ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட காலத்தில் இது நிகழ்வதைக் கண்டேன். ஆண்டுக்கு இரண்டு முறை அவை இப்படி இடம்பெயர்கின்றன.

வண்ணத்துப்பூச்சிகளின் இடப்பெயர்வு பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் (Lepidopterists), அவற்றை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளனர்.

1. குறுகிய தூரம் பயணிப்பவை. இவை தங்கள் வாழிடத்தின் ஒரு பகுதியில் இருந்து அருகிலுள்ள மற்றொரு பகுதிக்கு செல்கின்றன.
2. நீண்ட தூரம் பயணிப்பவை.
3. குறிப்பிட்ட இலக்கின்றி பறந்து சிதறுபவை. இந்த மூன்று வகை இடப்பெயர்ச்சியையும் தென்னிந்தியாவில் நான் பார்த்திருக்கிறேன்.

Oak leaf, Albatross வண்ணத்துப்பூச்சிகள் குறைந்த தூரமே பயணிக்கின்றன. இவை தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் காணப்படுகின்றன. Painted Lady Butterflies வகையை இந்தியாவில் எல்லா இடங்களிலும் பார்க்கலாம்.

இரட்டை வரி காக்கை வண்ணத்துப்பூச்சி (Euploea Sylvester), இந்தியக் காக்கை வண்ணத்துப்பூச்சி (Euploea Core) ஆகிய மூன்று வகைகளில் முதல் வகை வரிகளுடனும் பின் இரண்டு வகைகளும் கருமையான நிறத்திலும் இருக்கும். புலி வண்ணத்துப்பூச்சி (Danaus Chrysippus), வரிப்புலி வண்ணத்துப்பூச்சி ஆகியவை கறுப்பும் ஒரேஞ்சு வர்ணமும் கொண்டவை. இவை தவிர வேறு வண்ணத்துப்பூச்சி வகைகளும் மைசூர் வழியாக இடம்பெயர்ந்து செல்வதைப் பதிவு செய்துள்ளேன். எலுமிச்சை பேன்சி (Junonia Lemonias), நீலப் புலி வண்ணத்துப்பூச்சி (Tirumala Liminiace), இடம்பெயரும் வண்ணத்துப்பூச்சி (Catopsillia Domond) ஆகிய வகைகள் மைசூரைக் கடந்து செல்வதைக் கண்டுள்ளேன்.

வண்ணத்துப்பூச்சிகள் ஏன் இத்தகைய நீண்ட, சிரமமான பயணத்தை மேற்கொள்கின்றன? அதற்கான அவசியம் என்ன? பல காரணங்கள் இருந்தாலும், இனப்பெருக்கத்திற்கு ஏற்ற இடத்தையும் நல்ல பருவநிலையையும் தேடிச் செல்வதே முதன்மையான காரணம்.

(தொடரும்)

■ இணையவன்



(கடந்தவாரத் தொடர்ச்சி....)


# சோகம் சுமையல்ல!

குதூகலம், ஆனந்தம், அத்தி பூத்தாற்போன்று ஏதோ ஒரு சமயம் நம் ஆழ்மனதில் பூக்கும் அந்த அற்புதம் இவையெல்லாம் மட்டும்தானே, நமக்கு, வேதனைகளையும், சோகங்களையும், ஏமாற்றங்களையும், அன்றாட வாழ்வின் சூனியங்கள், சிக்கல்கள் போன்ற அனைத்தையும் வேறுபடுத்தி உணரச்செய்கின்றன.

என் குழந்தை எப்பொழுதும் மகிழ்ச்சியை மட்டுமே உணர்பவனாக இருக்கவேண்டும் என்று பெற்றோர் நினைப்பது சரியா? நல்லதும், தீயதும் பாகுபடுத்திப் பார்க்க அவர்கள் அறிந்திருக்கவேண்டியது அவசியமல்லவா. எதிர்காலத்தில் வரப்போகிற சோதனைகளையும், வேதனைகளையும், ஏமாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் பெற்றவர்களாக இருக்கத் தயாராக வேண்டும். எதிர்மறை எண்ணங்களைவிட, ஆக்கபூர்வமான எண்ணங்கள்தான் சிறந்தது என்றாலும், உள்ளதை உள்ளவாறு ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அதனிலும் சிறந்ததல்லவா? ஆக்கபூர்வமான எண்ணங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டு பொறுமை, சகமனிதரை நேசிக்கும் பண்பு, மற்றும் வாழ்க்கையின் மற்ற முகங்களை அனுசரித்துப் போகும் வழமை இவையெல்லாம் இல்லாமல் மகிழ்ச்சி என்ற ஒன்றை நிலைத்து நிற்கச்செய்வது சாத்தியமல்ல.வேதனைகளை எவர் ஒருவர் முழுமையாக அனுபவித்து மீண்டு வருகிறாரோ, அவரே முழுமையான மகிழ்ச்சியையும் அனுபவிக்க வல்லவராகிறார் என்பதே உண்மை.

இறுதியாக இன்னொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. தங்களுடைய தனிப்பட்ட வளர்ச்சியும், முன்னேற்றமும், பற்பல சோதனைகளையும், வேதனைகளையும் கடந்துதான் வந்தது என்பதைப் பல வெற்றியாளர்களும் கூறுவதைக் கேட்கமுடிகிறது.

நம்முடைய சோகமான தருணங்களை, முழுவதுமாக அனுபவிக்காமல், அவசர, அவசரமாகக் கடந்து போக நினைப்பது சரியல்ல என்றே தோன்றுகிறது. மகிழ்ச்சி என்பது சொடுக்கும் நேரத்தில் வந்து சென்றுவிடக் கூடியது. ஆனால் வருத்தம் போன்ற இருண்ட, ஆழமான உணர்வுகளுக்கு நம் பணியை முழுமையாக நிறைவேற்ற, அதனுள் மூழ்கி முத்தெடுக்க கொஞ்ச அவகாசம் அளிக்க வேண்டியதும் அவசியம். ஆக நம்மைப் பண்படுத்தி, நல்வழி காட்டும் வருத்தமும் நல்லதுதானே? ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாதுளையின் மருத்துவக் குணங்கள்

மாதுளையில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய மூன்று ரகங்கள் உள்ளன. இதில் இனிப்பு, புளிப்பு இரண்டு ரக மாதுளையும் சக்தியளிக்கும் பழத்தில் சிறந்தது.


மாதுளையின் பழம், பூ, பட்டை, ஆகியவை அனைத்தும் மருத்துவ குணங்கள் நிறைந்தன.

✱ மாதுளை பழங்களில் இரும்பு, சர்க்கரை, சுண்ணாம்பு, பொஸ்பரஸ் மற்றும் அனைத்து வகையான தாது உப்புக்களும், உயிர்ச் சத்துக்களும் அடங்கியுள்ளன.

✱ மாதுளம்பழத்தைச் சாப்பிடுவதால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகிறது. உடலுக்குத் தீங்குவிளைவிக்கும் வைரஸ் கிருமிகளை மிகத் துரிதமாகவும், அதிக அளவிலும் அழித்து விடுகிறது.

அதனால் நோய் நீங்கி ஆரோக்கியமும் சக்தியும் அளிப்பதில் மாதுளை சிறந்த பலனைத் தருகிறது.

✱ மாதுளம் பழத்தில் பொஸ்பரஸ் 70மி.கி. உள்ளது. கால்சியம், இரும்பு ஆகிய தாதுப் பொருள்கள், விட்டமின்கள் பி, சி ஆகியவை சிறிதளவு உள்ளன. கால்சியம் உடலில் சேருவதற்கு பொஸ்பரஸ் உதவிபுரிகிறது.


Australian Government

**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால்**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.



FUTUREWORLD

Authorised Reseller

# பண்டிகை கால மாபெரும் தள்ளுபடி

**iPod touch** (4th Generation)

up to 20% OFF*



Capability : 4-inch (diagonal) Multi-Touch Retina display, 720p HD video recording, apps, games, music, video, email, Safari web browser. Audio playback up to 40 hours and video playback up to 7 hours.

Size : 123.4 x 58.6 x 6.1 mm

iPod touch : 32GB MRP Rs.39,900/=

**iPod nano** (6th Generation)



Capability : 1.54-inch (diagonal) colour TFT display, 240-by-240 pixel resolution, 220 pixels per inch. Audio playback up to 24 hours when fully charged

Size : 37.5 x 40.9 x 8.78 mm with the clip

iPod nano : 8GB MRP Rs.22,000/=
iPod nano : 16GB MRP Rs.28,000/=

**MacBook Pro**

up to 10% OFF*



15-inch: 2.3 GHz Retina display
- 2.3GHz quad-core Intel Core i7
- Turbo Boost up to 3.3GHz
- 8GB 1600MHz memory
- 256GB flash storage
- Intel HD Graphics 4000
- NVIDIA GeForce GT 650M with 1GB of GDDR5 memory

MRP Rs.323,450/=

15-inch: 2.6 GHz Retina display
- 2.6GHz quad-core Intel Core i7
- Turbo Boost up to 3.6GHz
- 8GB 1600MHz memory
- 512GB flash storage
- Intel HD Graphics 4000
- NVIDIA GeForce GT 650M with 1GB of GDDR5 memory

MRP Rs.409,900/=

**iMac**



FREE

Free Office for Mac license with every Mac.

21.5-inch: 2.5GHz
- 2.5GHz Quad-Core Intel Core i5
- 1920 x 1080 resolution
- 4GB (two 2GB) memory
- 500GB hard drive
- AMD Radeon HD 6750M with 512MB

MRP Rs.188,700/=

27-inch: 2.7GHz
- 2.7GHz Quad-Core Intel Core i5
- 2560 x 1440 resolution
- 4GB (two 2GB) memory
- 1TB hard drive
- AMD Radeon HD 6770M with 512MB

MRP Rs.267,700/=

பிரதியேக சலுகை**

up to 20% OFF*



HP Deskjet 1000 Printer

HP LaserJet Pro P1102 Printer

Print and share everyday documents with this reliable HP printers. These easy-to-use printers are compact, affordable and helps you conserve resources and its now 20% off for this season specially for students.

**மாணவர்களுக்கு விசேட சலுகை

Up to 40% OFF* on non-Apple accessories for iPod, Mac, iPad and iPhones



Skullcandy iPhone Covers

Belkin iPad Covers

Belkin Laptop bags and sleeves

Skullcandy Headphones

பண்டிகை கால இச்சலுகைகள் நவம்பர் 15 முதல் டிசம்பர் 24 வரை மட்டுமே

COLOMBO 5 Showroom
No: 2, R.A.De Mel Mawatha, Colombo 5
Tel : 011 2 590 361
Fax : 011 2 592 020

COLOMBO 7 Showroom
No: 123, Dharmapala Mawatha Colombo 7
Tel : 011 2 314 748
Fax : 011 2 314 748

KANDY Showroom
No: L2-2A, Kandy City Center, Dalada Veediya, Kandy
Tel : 081 2 201 099
Fax : 081 2 204 248

JAFFNA Showroom
70,72 Stanley Road, Jaffna
Tel : 021 2 219 655
Fax : 021 2 219 655

www.futureworld.com.lk
info@futureworld.com.lk

Like us on Facebook
www.facebook.com/FutureworldLanka01


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HONDA

விசேட அறிவித்தல்
பெறுமதிமிக்க HONDA மற்றும்
HERO HONDA வாடிக்கையாளர்களே!

உலகின் முதல் தரமான ஜப்பான் தொழில்நுட்பத்துடனான ஹொண்டா மற்றும் ஹீரொ ஹொண்டா உற்பத்திகளை 35 வருடகாலமாக வழங்கி வந்த நம்பகமான ஸ்டெ.'பர்ட் மோட்டர்ஸ் இன்று வடக்கிலும் அவர்கள் கிளைகளை விஸ்தரித்துள்ளார்கள். அசல் ஜப்பான் தொழில்நுட்பத்துடனான மோட்டார் சைக்கிள்களினைப் பெற்றுக்கொள்வதற்கு அசல் விநியோகஸ்தர்களை நாடுங்கள்.

- SS மோட்டர்ஸ் - இல. 154, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- ஹொன்டா வர்ல்ட் - பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
- ஹொன்டா மார்ட் - இல, 13, கண்டி வீதி, சாவகச்சேரி.
- ஐங்கரன் மோட்டர்ஸ் - மார்கட் வியு, மானிப்பாய்.
- சிவகுரு ஹார்ட்வெயார் அன்ட் மோட்டர் சைக்கிள்ஸ் - இல. 469/1, A9 வீதி, பரந்தன்.
- சிவகுரு ஹார்ட்வெயார் அன்ட் மோட்டர் சைக்கிள்ஸ் - A9 வீதி, கரடிப்பொக்கு, கிளிநொச்சி.

இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ : 011-7607200
மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல.425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு தொ.பே.: 065-7607200
மற்றும் நாடளாவிய ஹொன்டா விற்பனையாளர் வலையமைப்புகளுடாக

# மது, புகையைக் கைவிட்டால் 6 வருடங்கள் அதிகம் உயிர்வாழலாம்




மது, புகை உள்ளிட்ட பழக்கங்களை நிறுத்திவிட்டு ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, சமூகத்துடன் அதிக ஈடுபாடு என்று இருந்தால் ஆயுளை 6 ஆண்டுகள் நீட்டிக்கலாம் என்பது ஆய்வில் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

நடுத்தர வயதினர் பலர் மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு போன்றவற்றால் பாதிக்கப் பட்டு திடீர் மரணம் அடைகின்றனர். மது, புகை போன்ற பழக்கங்கள் இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. 75 வயதை கடந்தவர்களையும் இதுபோன்ற பழக்கங்கள் பாதிக்கிறதா என்பது குறித்து சுவீடனை சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இணைந்து ஆய்வு நடத்தினர். 75 வயதை கடந்த 1800 பேரின் 18 ஆண்டு கால (1987- 2005) குறித்து தீவிரமாக அலசி ஆராய்ந்தனர். அவர்களது வயது, பாலினம், பிடிப்பு, பார்த்த வேலை, அன்றாட வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், சமூக பணிகளில் அவர்களது ஆர்வம் ஆகிய அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட் டன.

ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆய்வு நடந்த 18 ஆண்டு காலத்துக்குள், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தாத்தா, பாட்டிகளில் 92 சதவீதம் பேர் இறந்துவிட்டனர். ஆய்வுக்கு எடுக்கப்பட்டவர்களில் பாதி பேர் 90 வயது கடந்தவர்கள். அதில் பலர் பெண்கள். நன்கு படித்தவர்கள். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றியவர்கள். சமூக பணிகளில் அதிக ஆர்வம் காட்டி, சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்கள். ஓய்வு காலத்தை சிறப்பாக கழித்தவர்கள். அதாவது, நல்ல பழக்கங்கள் உள்ளவர்கள் நீண்ட காலம் வாழ்கின்றனர் என்பது ஊர்ஜிதமாகிறது.

புகை பிடிப்பவர்களை விட பிடிக்காதவர்கள் ஒருஆண்டு அதிகம் வாழ்கின்றனர். புகை பிடித்துவிட்டு பின்னர் நிறுத்தியவர்களின் வாழ்நாளும் ஏறக்குறைய ஒரு ஆண்டு அதிகரித்துள்ளது. நடுத்தர வயதில் புகை பழக்கத்தை விடுவது மிக மிக நல்லது.

உடற்பயிற்சி, நீச்சல் போன்றவற்றை செய்தவர்களின் வாழ் நாள் சராசரியாக 2 ஆண்டு அதிகரிக்கிறது.

புகை, மது போன்ற பழக்கங்களை கைவிட்டு ஆரோக்கியமான உணவு, தேவையான உடற்பயிற்சி, போதிய ஓய்வு, சமூக பணிகளில் நாட்டம் என்று சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தால் பெண்களின் ஆயுள் 5 ஆண்டும், ஆண்களின் ஆயுள் 6 ஆண்டும் அதிகரிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புகைபிடிப்பவர்களை விட பிடிக்காதவர்கள் ஒரு ஆண்டு அதிகம் வாழ்கின்றனர். புகை பிடித்துவிட்டுப் பின்னர் நிறுத்தியவர்களின் வாழ் நாளும் ஏறக்குறைய ஒரு ஆண்டு அதிகரித்துள்ளது.**

www.pabcbank.com
(011) 4 667 222

3, 6 மற்றும் 12 மாத
நிலையான வைப்புகளுக்கு
16%

அதிகூடிய வட்டியுடன் உயர் பாதுகாப்பு

| காலம் | தே.வ.வீ. (முதிர்வில்) |
|---|---|
| 3 மாதங்கள் | 16.99% |
| 6 மாதங்கள் | 16.64% |
| 12 மாதங்கள் | 16% |

ஒரு வருட நிலையான வைப்புகளுக்கு மாதாந்த வட்டி 15% (தே.வ.வீ. 16.08%)
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள வங்கிக் கிளையை நாடுங்கள் அல்லது அழையுங்கள் (011) 4 667 222.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

பான் ஏஷியா வங்கி ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB(lka)'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2012 தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் சித்திபெய்திய மாணவி
செல்வி **பவித்திரா பரஞ்சோதி**
(154 புள்ளிகள்)

100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப்
பெற்ற மாணவர்கள் விவரம்

01. வி. சுஜீபன் - 137, 02. இ. சரணியா - 134,
03. சா. சாணுஜா - 126, 04. இ. நிதர்சினி - 122,
05. சே. மதுசியா - 122, 06. ர. துவாரகா - 121,
07. பா. கோபிசாந் - 118, 08. றொ. அபிஷா - 108,
09. சி. சிவகஜன் - 105, 10. ர. திலைக்ஷனா - 104,
11. தி. சுவேந்தன் - 102.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/அனலைதீவு தெற்கு அ.த.க.வித்தியாலயம்.

(25455)(15-6-7)

# அரசாங்க அறிவித்தல்

**யாழ்.மாவட்டச் செயலகம் சகல பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2013**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கும், சகல பிரதேச செயலகங்களிற்கும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடம் இருந்து 2013 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களினை மாவட்டச் செயலக நிர்வாகக்கிளை மற்றும் சகல பிரதேச செயலகங்களிலும் 21.11.2012 தொடக்கம் 21.12.2012 வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைக் கடித உறையின் (9"x 4") இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல்கள் / சேவைகள் பதிவு செய்தல் - 2013"** எனக்குறிப்பிட்டு தபாலில் அனுப்புவதாயின் **"அரசாங்க அதிபர், நிர்வாகக்கிளை, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் நேரடியாக கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் நிர்வாகக்கிளையிலும் 21.12.2012 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**வழங்கல்கள்.**

01. காகிதாதிகள், எழுது பொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்.
02. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் / உருக்கு)
03. கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக்கொப்பி இயந்திரங்கள் / தொலைபேசிகள் / தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள்/ இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக தளபாடங்கள்.
04. இயந்திரக்கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்.
05. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள்.
06. மின்சாரப் பொருள்களும் அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும்.
07. கட்டட, இரும்புப் பொருள்கள், தீந்தை, வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்களும்.
08. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள், வைப்பர்கள்.
09. கார்பிக், விம், பினோல், சவர்க்காரம், மாபிள், அசிட், குளோரின், எயார் பிறஷ்னர்கள்.
10. நீர் இறைக்கும் மோட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்களான பைப், பெண்ட், சொக்கற் வகைகள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், டியூப்புக்கள், பற்றரிகள்
12. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் இனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களான கதிரை, மேசை போன்ற பொருள்கள்.
13. பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளை வகைகளும், (Nescafe Premix, Nestea & Disposal Cups, Etc.), குடிநீர் போத்தல்கள், மென்பானங்கள் (சோடா)
14. கட்டட மற்றும் வாகன வளி பதனாக்கி (A/C)
15. தோல் வகை உற்பத்தி பொருள்கள்.
16. விளையாட்டுப்பொருள்களும் அதனுடன் தொடர்புடைய பொருள்களும்.
17. கல், மண் வகைகள், உற்பத்தி செய்யப்பட்ட கட்டடப்பொருள்கள்.
18. உலர் மின்கலப் பொருள் வகைகள்.
19. ஒலிபெருக்கி சாதனங்களும், ஒலி வாங்கி சாதனங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள்.

**சேவைகள் / திருத்தங்கள்**

01. கட்டட நிர்மாணம் மற்றும் கட்டட வேலைகள் மற்றும் சேவைகள்.
02. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை/ சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள் (Services)
03. அச்சிடுதல், இறப்பர் ஸ்ராம்புகள், திகதி ஸ்ராம்புகள்.
04. அலுவலக அடையாள அட்டைகள், (Plastic)
05. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும் (கணினிகள், கல்குலேற்றர்கள் / றோணியோ இயந்திரங்கள் / போட்டோக்கொப்பி இயந்திரங்கள், தொலைநகல்கள் / தட்டச்சு இயந்திரங்கள் போன்றன.)
06. குளிர்சாதனப்பெட்டிகள், எயார் கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்.
07. மர, உருக்குத் தளபாட திருத்த வேலைகள்.
08. பெயர்ப் பலகை வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் (3D உட்பட) செய்தலும்.
09. உள்ளக தொலைபேசி திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்.
10. கணினி வலையமைப்பு.
11. மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தலும் மீள் முறுக்குதலும் (Winding).
12. மின்சார வயரிங் வேலைகள், கணினி வலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்.
13. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்.
14. அலுமினிய பிற்றிங் வேலைகள், பொருள்கள்

**பதிவு தொடர்பானவை.**

மாவட்டச் செயலகத்தில் பொருள்கள் சேவைகள் வழங்குவது தொடர்பாகப் பதிவுகளை மேற்கொள்பவர்களிடம் இருந்தே 2013 ஆம் ஆண்டிற்கான பொருள்கள், சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதனால் மாவட்டச் செயலகங்களுக்கோ, சகல பிரதேச செயலகங்களுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருள்கள் சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில் அல்லது பிரதேச செயலகங்களில் விண்ணப்பத்தினை பெற்று, பதிவுகளை மேற்கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
***அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலரும்,***
***மாவட்டச் செயலகம்,***
***யாழ்ப்பாணம்.***

(C/1910)(2-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# யா/வைத்தீஸ்வராக் கல்லூரி தரம் - 6 அனுமதி

மேற்படி கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் குறிப்பிட்ட அளவு விண்ணப்பங்களே வழங்கப்பட இருப்பதால் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 30.11.2012இற்கு முன்னர் கல்லூரியில் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

(25642)(2.6.7)

**அதிபர்.**

அரசாங்க அறிவித்தல்

# யாழ். மாவட்டச் செயலகம்

**வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கேள்வி விலைக் கோரல் - 2013.**

யாழ். மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களிலுள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும் விண்ணப்பப் படிவத்தினையும் மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் 21.11.2012ஆம் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 2.15 மணிவரையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100/= உம் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000/= உம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக் குழு, நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் **"வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம்-2013"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபாலிலோ, அல்லது அலுவலக கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ 12.12.2012ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்ப வேண்டும். அன்றைய தினம் 3.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**வாகனங்களின் விவரம்.**


1. பிக்கப் 2. வான் 3. கார் 4. ஜீப் 5. மோட்டர் சைக்கிள் 6. முச்சக்கர வண்டி 7. உழவு இயந்திரம் 8. லொறி 9. பவுசர் 10. திறந்த பாரவூர்தி (Canter) 11. ஏனையவை.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலரும்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**

(சி/1909)(5-6-7)

# மரண அறிவித்தல்

## முருகேசு கந்தையா (நேனா)



யாழ்.ஏழாலை வடக்கு ஊரங்குனையைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் தண்ணித்தாழ்வை வசிப்பிடமாகவும், பிரான்ஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தையா 18-11-2012 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-சின்னாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவமணி(பிரான்ஸ்), இராசமலர் (இலங்கை), தவராசா(பிரான்ஸ்), சிவம் (ஜேர்மனி), வரதராசா (பிரான்ஸ்), சிவ மலர் (பிரான்ஸ்), குகதாசன் (வெள்ளை-பிரான்ஸ்), செல்வமலர்(பிரான்ஸ்), ஜெயமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான செல்லி, பூமணி, தங்கம்மா, நாகமுத்தர், சீதேவன் (சுக்கணம்) ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும், சரவணபவன், சுப்பிரமணியம், செல்வறஞ்சினி, சவுந்தலா, வாசுகி, றஞ்சனா, சத்திய சீலன், ஆனந்தராஜா, செல்வதாசன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2012 வியாழக்கிழமை பிரான்ஸில் பிரான்ஸ் நேரப்படி 1.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**சுப்பிளான்.** (25638)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் ஹீரோ ஹொண்டா இப்போது ஹீரோ மோடோகோப்

# இலங்கையில் இப்போது அதிகமாய் விற்பனையாகும்
# கணகவர் ஹீரோ ப்ளஷர் ஸ்கூட்டர்

Hero

Pleasure
The light 'n' zippy 100cc scooter

கணகவர் வடிவம்

அழகிய மீட்டர் தொகுதி

துளை தாங்கு சில்லு

- 100 CC செல்வ் ஸ்டார்ட்
- ஒடோ கியர்
- பராமரிப்பு தேவையற்ற பற்றரி



ஹீரோ சின்னம் இல்லாவிட்டால் நீங்கள் வாங்குவது காலாவதியான ஸ்கூட்டர் என்பதை கவனத்திற்கொள்க

ரூ. 174,099 + VAT

*நிபந்தனைகளுக்குட்பட்டது

**R.G.ட்ரேடர்ஸ் அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்**

யாழ்ப்பாணம் – இல: 285, 287 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் – ப்லஷர் காட்சியறை இல: 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667 • நெல்லியடி – இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2262585 • சாவகச்சேரி – இல: 5A, கண்டி வீதி, சாவகச்சேரி: 0212270185 நாவற்குளி – இல:50, கண்டி வீதி, நாவற்குளி சந்தி, நாவற்குளி • சுன்னாகம் – 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241985 • கிளிநொச்சி – கரடிபோக்கு சந்தி, A9 வீதி, கிளிநொச்சி: 021 2280185 • பளை – இல: A9 வீதி, பளை: 0777 340056

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org